பக்கங்கள் : இருபது

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு2028புரட்டாதி11சனிக்கிழமை(27-09-1997) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:17

# இணைப்புக்கு இணக்கம்?




யாழ். பல்கலைக்கழக நிர்வாக அலுவலகத்துக்கு முன்பாக நேற்று அமைதியாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட மருத்துவ மாணவர் பலநூற்றுக்கணக்கானோரில் ஒரு பகுதியினர்.

## அரசுத் தரப்பில் முடிவாகிவிட்டது

கொழும்பு, செப்ரெம்பர் 27

இதுவரை காலமும் இழுபறி நிலையில் இருந்து வந்த வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு விவகாரத்தில் தமிழ்க் கட்சிகளின் விடாப்பிடியான கோரிக்கைக்கு அரசுத் தரப்பு இணங்கி இருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்துக்கு அடுத்து வரும் வாரங்களில் இறுதி வடிவம் கொடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவது தெரிந்ததே.

இந்த விவகாரத்தில் இன்னும் இறுதியாக்கப்படாமல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ மாணவர் நேற்று 'பீக்கெட்டிங்'

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். மருத்துவ பீடத்தில் போதனாசிரியர் வெற்றிடங்களுக்குப் பணியாற்ற வெளி இடங்களில் இருந்து விண்ணப்பிப்போருக்கு அவர்களின் தகுதி, திறமை ஆகியவற்றுக்கு ஏற்ப உரிய வேதனம், பதவி ஆகியவற்றை வழங்க வேண்டும் என்று பல்கலைக்கழக நிர்வாகத்தை வலியுறுத்தியும்—

அவ்வாறு விண்ணப்பித்தவர்களுக்கு அவற்றை வழங்குவதில் தாமதம் காட்டுவதை ஆட்சேபித்தும்—

யாழ். மருத்துவபீட மாணவர்கள் பல நூற்றுக்கணக்கானவர்கள் நேற்று யாழ். பல்கலைக்கழக நிர்வாக அலுவலகத்துக்கு முன்பாக சுலோக அட்டைகளுடன் அமர்ந்து அமைதியான முறையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

மருத்துவ மாணவரின் மகஜர்
5 ஆம் பக்கத்தில்!
விசேட கட்டுரை சஞ்சிகைப் பகுதியில்!

## சமாதான சூழ்நிலை வரும் வரை சிறிய திட்டங்களுக்கே நிதி உதவி

### யாழ். வந்த சர்வதேச பிரதிநிதிகள் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். மாவட்டத்தில் சமாதான சூழ்நிலை ஏற்படும் வரை பாரிய அபிவிருத்திப் பணிகளுக்கு உதவ முடியாது. சிறிய அளவிலான அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகளுக்கு மட்டுமே உதவி வழங்க முடியும்.

யாழ்ப்பாணம் வந்திருந்த சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டனர்.

ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகள், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள், ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள், ஐ.நா. உணவு,விவசாய நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்கள் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அவதானித்த பின்னர் யாழ்.செயலகத்தில் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்கள்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மின்மாற்றி தகர்ப்பு

கொழும்பு, செப். 27

சம்மாந்துறை நொச்சி முனைச் சந்தியில் மின்மாற்றி (டிரான்ஸ்போமர்) ஒன்று நேற்று முன்தினம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

(உ-9)

## ஆலங்கேணியில் புலிகள் தாக்குதல்

திருகோணமலைகிண்ணியா ஆலங்கேணிப்பகுதியில் உள்ள பொலீஸ் வீதித்தடை நிலையம் மீது நேற்றுக்காலை 11 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் கொல்லப்பட்டார். ஒரு பொலீஸார் காயமடைந்தார்.

இத்தாக்குதலில் புலிகள் பல ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியதாக ''புலிகளின் குரல்'' நேற்றிரவு தெரிவித்தது.

(உ3-9-150)

## வவுனியாவில் துப்பாக்கியுடன் வந்தவர் மீது சூடு!

வவுனியா, செப். 27

வவுனியா வேப்பங்குளம் அகதி முகாமில் ஆயுதத்துடன் ஊடுருவ முயன்றதாகக் கூறப்படும் ஒருவர் நேற்றுக் காலை படையினரால் சுடப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

அகதிகள் முகாமுக்கு பின்புறமாக ஒருவர் ஆயுதத்துடன் வருவதைக் கண்ட படையினர் அவரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அந்த நபர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் கட்டுத் துவக்கு ஒன்று அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-164]

### வவுனியா 'ராகிங்' விடயம்:

## கல்விக் கல்லூரியில் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

வவுனியா கல்விக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ''ராகிங்'' சம்பவங்களை கண்டித்து கல்லூரி விரிவுரையாளர்களும், புதிய மாணவர்களும் வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் புதிய மாணவர்கள் மீது பழைய மாணவர்கள் மேற்கொண்ட ''ராகிங்'' சேஷ்டைகளால் எலும்பு முறிந்த நிலையில் இரு மாணவர்களும் —

உடல்நோ காரணமாக ஒரு மாணவனும் —

வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

புதிய மாணவர்களும், கல்லூரி விரிவுரையாளர்களும் நேற்று முன்தினம் ஆரம்பித்த பகிஷ்கரிப்பு நேற்றும் தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-164)

## சிப்பாய், குடும்பஸ்தர் விபத்தில் மரணம்

### சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, செப். 27

சாவகச்சேரி பிரதான வீதியில் மடத்தடிப் பகுதியில் வியாழனன்று பிற்பகல்இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்—சைக்கிள் விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும், குடும்பஸ்தர் ஒருவரும் பலியாகினர். மற்றொரு படைச் சிப்பாய் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகே உள்ள தச்சுத் தொழில் நிலையம் ஒன்றில் வேலை செய்யும் சின்னப்பொடி மரியதாஸ் [கிளி-வயது 48] என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்த குடும்பஸ்தர் ஆவார்.

வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் முதலில் சைக்கிளுடன் மோதுண்ட பின்னர் மரம் ஒன்றுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சைக்கிளை ஓட்டிச் சென்ற குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அவரது சைக்கிள் சின்னாபின்னமான நிலையில் காணப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு தினம் நேற்று அனுஷ்டிப்பு!

வவுனியா, செப். 27

நல்லூரில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் உயிர் பிரிந்த 10 ஆண்டு நினைவு தினம் நேற்றாகும்.

இதனை ஒட்டி வன்னிப் பகுதியிலும், கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலும் நேற்று விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

பல இடங்களில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உணர்வு பூர்வமாகப் பங்கு பற்றினர்.

வீட்டு வாயில்களிலும், சந்திகள் பொது இடங்களிலும் திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு தீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## அமிர்தலிங்கதுரை

(கு. வி. அச்சக உரிமையாளர்)

**25—09—97** அன்று இந்தியாவில் மரணமடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியும், மிகுந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவரின் அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முனீஸ்வரா கபே,**
**ஜெயா வைண்டிங் வேக்ஸ்.**

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம். (50140)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



புன்னாலைக்கட்டுவன் தெற்கு

## அமரர் தம்பையா சிறீஸ்கந்தா

(நீர்ப்பாசன பொறியியலாளர், பெரியமடு)

மலர்வு: **20 — 03 1945**
உதிர்வு: **28 — 08 — 1997**

குடும்பத்தின் குல விளக்கே
குணக்குன்றே சிறீஸ்கந்தா
இடும்பைக் கோரளவில்லை
இமைப்பொழுதிற் பிரிந்தீரே
நடுநின்று உரையாற்றும்
நல்லோனே நினைப்போல
இடுகின்ற நல்லோர்கள்
இங்கேதான் யாருளரோ ?

எமது குடும்ப ஒளிவிளக்கு திடீரென அணைந்த போது அன்னாருடைய பூதவுடலைப் பல சிரமங்களுக்கு மத்தியில் கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப் பல வழிகளிலும் உதவி நல்கியவர்களுக்கும், மரணச் செய்தி கேட்டவுடனே ஓடோடிவந்து ஆவன செய்து எமக்கு ஆறுதல் கூறி, பல உதவிகள் செய்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அவரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் இன்று கலந்துகொள்பவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவராக விளங்கிய தங்களின் ஆன்மா சாந்தியுறும் வண்ணம் நாம் அனைவரும் இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

அன்பு மனைவி ரதிதேவியும்.
குடும்பத்தினரும்.

கைதடி தெற்கு,
கைதடி. (50168)

## பஸ்ஸில் புகைக்க தடை

கொழும்பு, செப். 27

சகல போக்குவரத்துச் சபை பஸ்களிலும் புகை பிடித்தல் தடை கடுமையாகக் கடைப் பிடிக்கப்படும்.

போக்குவரத்து நெடுஞ் சாலைகள் அமைச்சர் ஏ.எச். எம். பௌசி இத் தீர்மானம் குறித்து சகல மாகாண போக்குவரத்து அமைச்சர்களுக்கும் அறிவித்துள்ளார். (உ-3)

## 'பிக்-அப்' வாகனங்கள்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். பிரதம தபாற் கந்தோருக்கும், யாழ். ரெலிகொம் நிறுவனத்துக்கும், கமநல சேவைத் திணைக்களத்துக்கும் புதிதாக 'பிக்-அப்' வாகனங்கள் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளன. (உ-173)

## பரீட்சைகள்

யாழ்ப்பாணம், செப். 27

அரச திணைக்களங்களில் அலுவலகப் பணியாளர்களாக பணிபுரியும் ஊழியர்களை எழுதுவினைஞர் தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கான பரீட்சை இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-31)

★ ★ ★

கணக்குப் பரிசோதகர் தரம் 2 க்கு ஆள் சேர்ப்பதற்கான பரீட்சையை எதிர்வரும் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார் என்று யாழ். வலயம் ஒன்றின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரியில் இப்பரீட்சை நடைபெறும் என்றும்—

இந்தப் பரீட்சைக்கு அனுமதி அட்டை பெற்றவர்களை வலயம் ஒன்று அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் — அவர் கேட்டுள்ளார். (உ-3)

## பாராட்டு

சாவகச்சேரி, செப். 27

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ வேதவன விநாயகர் ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியாராகவும் அர்ச்சகராகவும் இருபத்தைந்து ஆண்டுகாலமாக பணிசெய்த சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்களை கௌரவிக்கும் பாராட்டு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 1. 30 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகபரமாச்சாரிய சுவாமிகள் அருளுரையும், யாழ். மாவட்ட இந்து குருமார் ஒன்றிய தலைவர் சிவஸ்ரீ க. மகேஸ்வரக்குருக்கள் ஆசியுரையும் நிகழ்த்துவர். சிவாச்சாரியாரை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபால கிருஷ்ண ஐயர் பட்டமளித்து, பொன்னாரம் சூட்டி பாராட்டுரை நிகழ்த்துவார். (உ-31)

## நூற்றாண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசம்மாள் ஆலய 100 ஆவது ஆண்டு நிறைவுப் பெருவிழா நாளை நடைபெற விருக்கிறது.

யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி நடைபெறும். இந்த நூற்றாண்டு நிறைவையொட்டி சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படுகிறது. (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை நற்குணராசா

நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வே. நற்குணராசா 26 - 09 - 1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு, திருமதி வேலுப்பிள்ளையின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், வாசுகி (பிரான்ஸ்), தேவகி (பிரான்ஸ்), சங்கர் (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), முரளி (பிரான்ஸ்), றெஜீந்தரன் (பிரான்ஸ்), விபுலன் (யாழ். பல்கலைக்கழகம் 1 ஆம் வருடம்), அகிலன் (யா/உயர் தொழினுட்ப நிறுவகம், 2 ஆம் வருடம்), நவறஞ்சினி (யா/மீசாலை வீரசிங்கம் ம. வி) ஆகியோரது அன்புத் தந்தையாரும்—

தனபாலசிங்கம், இந்திரமலர், காலஞ்சென்ற மோகனேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரது சகோதரரும், கைலயன்கிரிவாசன், சுந்தரலிங்கம், சறோஜினிதேவி ஆகியோரது மாமனாரும், சிந்துஜா, சாருஜா, ஜெனுாசன், அபிவருணன், துஷிந்தா ஆகியோரது பேரனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள், 26 - 09 - 1997 அன்று நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந மனோகரன்
(பெறாமகன்)

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (50130)

## வீரசிங்கம் பாலசிங்கம்

கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த வீ.பாலசிங்கம் 25-9-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், நவமணியின் பாசம்மிகு தந்தையும், ஓய்வு பெற்ற நீதி மன்ற முதலியார் திரு செ. சடாச்சரத்தின் மாமனாரும், திரு. திருமதி குகநேசன் (ஜேர்மனி), திரு. திருமதி குகதாசன் (புத்தளம்), திரு. திருமதி புவிராசசிங்கம் (பிரான்ஸ்). திரு. திருமதி பாலச்சந்திரன், திரு. திருமதி தெய்வேந்திரன் (பிரான்ஸ்), திரு. திருமதி சிறிகஜேந்திரா, திரு குகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பேரனும்., செல்வி கௌசிகா, மயூரதன், அர்ச்சனா, அனந்தி, மருதிகா, கேவின்சிங், ஸ்ரீபன், நிருபராஜ், பால இளந்திரையன், இளங்கோவன், ஆர்த்திகா. சிறிபவன், மதுஜன், பத்மஜன், கஜாணன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-9-97 அன்று நடைபெற்று பூதவுடல் கச்சாய் வீதி, பாலாவித்தாள் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

தகவல்:
செ. சடாச்சரம்

கச்சாய் வீதி,
கொடிகாமம். (50121)

## திருமதி கந்தசாமி மீனாட்சி

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும், தற்பொழுது இணுவில் கந்தசாமி கோயிலருகில் வசித்தவருமாகிய திருமதி கந்தசாமி மீனாட்சி 26-09-97 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் சுட்டி செல்லத்துரை (கந்தசாமி) அவர்களின் அன்பு மனைவியும், க. கருநேசன் (யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை, இராமநாதன் அக்கடமி) அவர்களின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-9-97) இணுவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கருநேசன்
(மகன்)
(யாழ். பல்கலைக்கழகம்)

ச.வே. பஞ்சாட்சரம்
(ஆசிரியர்)
இணுவில் மேற்கு,
இணுவில் (47444)

## வேலுப்பிள்ளை பொன்னையா

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை குருவீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை, பொன்னையா 26-9-97 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், கனகேஸ்வரி (கனடா), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகுதந்தையும், கனகரத்தினம் (கனடா), இந்திரவதனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காயத்திரி, சிவகாமி, கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்லப்பா அன்னப்பிள்ளை, மற்றும் சின்னத்துரை சின்னப்பிள்ளை (ஆசிரியர், கொழும்பு), காலஞ் சென்ற தம்பிமுத்து பர்வதம், கால்ஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் சபாபதி கண்மணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைரமுத்து (சிமெந்துதொழிற்சாலை), காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் மேற்கில் இன்று (27-9-97) சனிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. தம்பித்துரை
கொக்குவில்.
பொ. சுந்தரலிங்கம்
(மகாஜனக்கல்லூரி)

நீதிராசா வீதி,
(ஐயனார் கோயிலடி),
கொக்குவில் மேற்கு.
(47445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் மோட்டார் ஷெல்களாலே படைத்தரப்புக்கு அதிகளவில் இழப்பு!

வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நாலரை மாதங்கள் கடந்து விட்டன.

வடக்கிற்கான விநியோகப் பாதையைத் திறப்பது என்ற இலக்கை எட்ட முடியாமல் இடைவழியில் இழுபறிப்பட்டுக் கொண்டு புளியங்குளத்துக்குச் சற்றுத் தொலைவில் தடைப்பட்டு நிற்கின்றது அந்த நடவடிக்கை.

இலங்கையின் வரலாற்றில் மிக நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் — அதிகளவு உயிரிழப்பு, ஆள்பல இழப்பு, நிதி இழப்பு ஆகியவற்றை ஏற்படுத்திய — இராணுவ நடவடிக்கை இதுதான்.

அரசுத்தரப்பின் தகவல்களின் படி இந்த நாலரை மாதகால இராணுவ நடவடிக்கையில் 650 – க்கும் அதிக துருப்புக்கள் உயிரிழந்துள்ளன; மூவாயிரத்து ஐந்நூறு படையினர் காயமடைந்துள்ளனர்; பத்து பிரதான யுத்த டாங்கிகள், துருப்புக் காவி ஒன்று, கட்

## பாசுபதன்

டளை வாகனம் ஒன்று, ஒட்டோமற்றிக் கிரனேட் லோஞ்சர், மோட்டார்கள், சிறிய ரக ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள், பல வாகனங்கள் என்பன இழக்கப்பட்டுள்ளன; மாதம் பலகோடி ரூபா பணம் இந்நடவடிக்கைகளில் அள்ளிக் கொண்டு போகின்றது.

இந்தப் படை நடவடிக்கைக்கு எதிராக புலிகள் தீவிர எதிர்ப்பு காட்டுவதே படை நடவடிக்கை தாமதமாவதற்கும், அரசுத்தரப்புக்கு பேரிழப்பு ஏற்படுவதற்கும் பிரதான காரணமாகும்.

புளியங்குளத்தை எட்ட முடியாமல் படைத்தரப்பு அவலப்படுவதை அடுத்து —

பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, தமது இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தலுவத்தையுடனும், ஏனைய மூத்த தளபதிகளுடனும், யுத்த முனைக்கு அண்டிய பிரதேசத்துக்கு விஜயம் செய்து, களத்தில் உள்ள படைகளின் கட்டளை அதிகாரிகளுடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார்.

புளியங்குளத்தைக் கைப்பற்ற, எப்படியும் படை நடவடிக்கையைத் தொடர வேண்டும் என்றும் —

எனவே புலிகள் மீதான தாக்குதலை மேலும் தீவிரப் படுத்தும்படியும் —

ஜெனரல் ரத்வத்தை அங்கு கூறியதாகத் தெரிகின்றது.

அதனையடுத்தே —

புளியங்குளம் சந்தியை நேரடியாகக் கைப்பற்ற முடியாதிருந்தால் இரு முனைகளில் முன்னேறி புளியங்குளத்தைச் சுற்றிவளைத்துப் பிடிப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டு, அது ஆரம்பிக்கப்பட்டது. (அத் திட்டம் பற்றிய விவரம் 13-09-1997 சமர்க்களத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.)

எனினும் அந்த முயற்சியும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை என யுத்த முனைச் செய்திகள் தெரிவித்தன.

வன்னிப் பிரதேசத்தில் ஆரம்பித்துள்ள பருவ மழையும் படை நகர்வுக்கு இடைஞ்சலாக இருப்பதாகவும்—

யுத்த டாங்கிகள் சேறாக உள்ள காட்டுப் பிரதேசத்தில் முன்னேறுவதற்கு கஷ்டப்படுவதாகவும்—

இராணுவ வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புளியங்குளத்தைக் கைப்பற்றுவதற்கானகடைசிச் சமர் கடந்த ஒகஸ்ட் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அன்று முதல் யுத்தமுனையில் புலிகளின் எதிர்ப்பு மிகத் தீவிரமாகியுள்ளது. ஒகஸ்ட் 19 ஆம் திகதிக்குப் பின்னர் அரசுத் துருப்புகளுக்கு பேரிழப்பை ஏற்படுத்தி வருபவை புலிகளின் 81 எம். எம். மோட்டார்களே என்று இராணுவத் தகவல்கள் கூறுகின்றன.

## ஒன்றே முக்கால் கோடி ரூபா பெறுமதியான ஷெல்களை தினசரி புலிகள் ஏவுகின்றனர்!

புளியங்குளத்தை அண்டிய யுத்த முனையில் உள்ள படையினர் மீது 81 எம்.எம். ஷெல்களை பல திசைகளில் இருந்தும் மழை போல பொழிந்து வருகின்றார்கள் புலிகள். சுமாராக ஒரு நாளைக்கு மூவாயிரம் முதல் மூவாயிரத்து ஐந்நூறு ஷெல்களைப் படையினர் புலிகளிடமிருந்து எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்றால் எதிர்ப்பின் தீவிரத்தை நீங்களே அனுமானித்துக் கொள்ளுங்கள்.

சில தினங்களில் ஒரு நாளில் ஐயாயிரம் மோட்டார்க் குண்டுகள் வரை கூட புலிகளால் ஏவப்படுகின்றனவாம்.

இதனால் —

முன்னணிக் காவலரண்களிலும் அதை அண்டிய பிரதேசங்களிலும் இருக்கும் படையினர் காவலரணுக்கு வெளியே வந்தால் எப்போது ஷெல்களுக்கு இரையாவோம் என்ற ஆபத்து; அவ்வளவு நெருக்கமாக - குறுகிய இடைவெளிகளில்— அடிக்கடி ஷெல்கள் விழுந்து வெடித்த வண்ணமுள்ளன. மறுபுறத்தில் எந்நேரமும் காவலரண் மீதே மோட்டார் ஷெல்கள் விழுந்து அதில் இருப்பவர்களுடன் சேர்த்து காவலரணையே சிதறடித்து விடுமோ என்ற அச்சமும் படையினர் மத்தியில் பீதியை உண்டு பண்ணுகின்றது. இவற்றுக்கு மத்தியில்தான் முன்னேற்ற நகர்வுக்கான— திட்டத்தை- படை நடவடிக்கையை — மேற் கொள்ள வேண்டிய கட்டாய — இக்கட்டான — நிலையில் துருப்புகள்.

பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் எதிர்பார்க்கும் வேகத்தில் வன்னிக் களத்தில் படை நகர்வுகள் இருக்க வேண்டுமாயின், புலிகளின் மோட்டார் ஷெல் ஏவும் பலத்தை முதலில் முறியடிக்க வேண்டும் என களத்தில் உள்ள இராணுவ அதிகாரிகள் கருதுகின்றார்கள்.

முல்லைத்தீவு முகாம் தகர்ப்பின் போது மோட்டார் ஷெல் ஏவும் 15 'லோஞ்சர்'களை புலிகள் கைப்பற்றினர். அவற்றுடன் சேர்த்து மோட்டார் ஷெல் ஏவும்— சுமார் — ஐம்பது 'லோஞ்சர்'களை புலிகள் தம்வசம் வைத்திருப்பதாக இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றில் ஏழு அல்லது எட்டு லோஞ்சர்களை வெவ்வேறு இடங்களில் வைத்து, அவற்றில் இருந்து ஒரே சமயத்தில் அடுத்தடுத்து ஷெல்களை ஏவுவதன் மூலம் — மோட்டார் ஷெல்கள் மூலமே — நகர முயலும் படைக்கு எதிரான வேலியை- தடையை — புலிகள் போடுவதாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸிம்பாப்வே நாட்டிலிருந்து இலங்கைக்கு எடுத்து




வரப்படுகையில் இடைவழியில் காணாமற்போன கப்பலில் இருந்த 32 ஆயிரத்து 400 மோட்டார் ஷெல்களில் கணிசமானவற்றை புலிகள் வன்னிக்கு பாதுகாப்பாக எடுத்து வந்து விட்டனர் என்பதை உறுதிப்படுத்தும் உளவுத் தகவல்கள் இராணுவ வட்டாரங்களுக்கு கிடைத்திருப்பதாகவும் தெரிகின்றது.

வழிமறிக்கப்பட்ட கப்பலில் இருந்த மோட்டார் ஷெல்களை தங்களுடைய வேறு கப்பல் ஒன்றுக்கு மாற்றி பிறிதொரு ஆசிய நாட்டுக்கு அவற்றைக் கொண்டு சென்ற புலிகள், அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அவற்றை வன்னிக்குக் கொண்டு வந்து சேர்த்திருப்பதாக இராணுவத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மூன்று கப்பல்களில் புலிகளின் வன்னித் தளத்துக்கு ஆயுதங்கள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டதாகவும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஸிம்பாப்வே'யிலிருந்து எடுத்து வரப்படும் வழியில் தாம் கைப்பற்றிய 81 எம். எம். மோட்டார் ஷெல்களையும், வேறு வழிகள்மூலம் கிடைத்த ஷெல்களையும் வன்னிக் களத்தில் புலிகள் பாவிப்பதாக இராணுவம் கருதுகின்றது.

புலிகளின்மோட்டார் ஷெல் பலத்தை அழிப்பதாயின் —

புலிகளின் மோட்டார்ஷெல் ஏவும் இடங்களைக் கண்டு பிடித்து அவற்றின் மீது தாக்குதல் நடத்தி, புலிகளின் மோட்டார் லோஞ்சர்களையும் அத்தளங்களையும் அழிக்க வேண்டும்.

மோட்டார் ஏவும் தளங்களைக் கண்டுபிடிப்பதற்கு அதற்கான இராணுவக் கருவி (Moter Locating Divices) இராணுவத்துக்குத் தேவைப்படுகின்றது.

புலிகளின் எதிர்ப்பை சமாளிப்பதற்கு இத்தகைய கருவி அதிக எண்ணிக்கையில் அவசரமாகத் தேவைப்படுவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகின்றார்.

1995 முற்பகுதியிலும் 87 கோடி ரூபா செலவில் இதே ரகத்தில் 24 கருவிகளை ஸ்ரீ லங்கா இராணுவம் கொள்வனவு செய்தது.

ஆனால் ஆறு மாத காலத்துக்குள் அந்தக் கருவிகள் அனைத்தும் பழுது பட்டுப் போய்விட்டதாகவும் —

அதை விநியோகம் செய்த ஆசிய நாட்டு விநியோகத்தர்கள் சில பிரதிநிதிகளை அனுப்பி அவற்றை பரிசீலனை செய்த போதும், அவை திருத்தப்படவுமில்லை; புதிதாக மாற்றி வழங்கப்படவுமில்லை எனவும் —

'உள்வீட்டுத்' தகவல்கள் மூலம் தெரிய வந்தது.

மீண்டும் ஒரு தடவை இக்

## சமர்க்களம்

கருவிகளை கொள்வனவு செய்து, இவ்வாறு முட்டாளாகி விடுவோமோ என்ற எண்ணம் படை வட்டாரங்களில் நிலவுகின்ற போதும்—

தற்போதைய அவசர தேவை கருதி அவற்றைக் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஸிம்பாப்வேயிலிருந்து கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசு கொடுத்த 'ஓடரின்' படி —

81 எம். எம்' அளவுடைய மோட்டார் ஷெல்களை ஒவ்வொன்றும் 80 அமெரிக்க டொலர் (ஏறத்தாழ 4 ஆயிரத்து 700 ரூபா) விலைக்கு வழங்கஸிம்பாப்வே பாதுகாப்புப் பிரிவு இணங்கியிருந்தது.

அதன்படி பார்த்தால்—

81 எம். எம். ரக மோட்டார் ஷெல்லை—உலக சந்தையில்— நியாயமான வழியில் பெறுவதற்கு 4ஆயிரத்து 700 ரூபா செலவு செய்ய வேண்டியிருக்கும்.

புலிகள் இப்போது வன்னி யுத்தத்தில் தினசரி மூவாயிரம் முதல் மூவாயிரத்து ஐந்நூறு மோட்டார் ஷெல்களைப் பாவிக்கின்றார்கள். அதன்படி பார்த்தால் தினசரி ஒன்றே முக்கால் கோடி ரூபா பெறுமதியான மோட்டார் ஷெல்களை புலிகள் வன்னிக் களத்தில் தற்போது பயன்படுத்துகின்றார்கள். இதுவே படை வட்டாரங்களையும் இராணுவ ஆய்வாளர்களையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றது.

புலிகள் வன்னிச் சமரில் தற்போது பயன்படுத்தும் மோட்டார் ஷெல்களின் எண்ணிக்கையைப் பார்த்தால்—

ஸிம்பாப்வேயிலிருந்து வரும் வழியில் கடலில் காணாமற் போன 81 எம். எம். ரக மோட்டார் ஷெல்களை (32 ஆயிரத்து 400 எண்ணிக்கை) புலிகளே கைப்பற்றி, வன்னிக்குக் கொண்டு வந்து சேர்த்திருந்தாலும் கூட—

அந்த ஷெல்கள் பத்து நாள்களுக்கு மட்டுமே புலிகளுக்குப் போதுமானதாக இருந்திருக்கும்.

ஆனால்புலிகள் தொடர்ந்து மோட்டார் ஷெல்களை பெரும் எண்ணிக்கையில் பயன்படுத்தி வருகின்றார்கள். அவை எங்கிருந்து வந்தன? அவற்றுக்கு நிதி புலிகளுக்கு எங்கேயிருந்துகிடைத்தது? இவையே இப்போது வியப்பை ஏற்படுத்தியிருக்கும் கேள்விகளாகும்.

வன்னிச் சமரிலும், வடக்கு — கிழக்கு யுத்தத்திலும் புலிகளின் மோட்டார் ஷெல் தாக்குதல்களை அடுத்து, படையினருக்கு பின்னடைவை ஏற்படுத்தும் முக்கிய விடயமாக இருப்பது உரிய விமான சேவை வழியின்மையாகும்.

வன்னிச் சமரில் —

மிக நெருக்கமாக வந்து வான் வழிப் பாதுகாப்பைத் தருவதிலும் —

காயப்பட்டவர்களை சிகிச்சைக்குக் கொண்டு செல்வதிலும் —

விமானப் படையின் உரிய ஒத்துழைப்பு கிடைப்பதில்லை என்று வன்னிக் களத்தில் உள்ள கட்டளை அதிகாரிகள் இராணுவத் தளபதிக்கு தொடர்ந்து முறைப்பாடு செய்து வருகின்றார்கள்.

வன்னிக் களத்தில் விமான எதிர்ப்புஏவுகணைகளைப் புலிகள் பயன்படுத்துவதாக வெளியாகியுள்ள தகவலே, முன்னேறும் தரைத் துருப்புகளுக்கு நெருக்கமாகச் சென்று பாதுகாப்பளிக்காமல் விமானப் படை விலகி நிற்பதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. அது தொடர்பாக விமானப்படையைக் குற்றம் சுமத்துவதில் நியாயமில்லை என்கின்றார் இராணுவ ஆய்வாளர் ஒருவர்.

(6ஆம் பக்கம் பார்க்க)



'வெற்றி உறுதி' நடவடிக்கையில் இதுவரை பத்து பிரதான யுத்த டாங்கிகளை இராணுவம் இழந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின ஜேசி பால் மாடுகள் இரண்டு விற்பனைக்கு உண்டு. (அண்மையில் கன்று ஈன்றவை) மற்றும் 7 மாச ஜமுனாபாரி கடாவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.14, குறோசற் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் றோட். [50086]

சாவகச்சேரி கண்டி வீதி அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் சண்முகம் வீதியில் உள்ள காணி 1½ பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M. வைரவநாதன், 75, மானிப்பாய் வீதி, ஈழநாடு அண்மையில், யாழ்ப்பாணம். [50096]

இல. 21/3, புது வீதி, கொய்யாத்தோட்டம், பாசையூரில் வீட்டுடன் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பிரான்சிஸ், 7, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [50122]

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 496, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். [50129]

இறைச்சிக், கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக் குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். [50131]

### FOR SALE

Yamaha mate - 50 auto -matic Gear Motor Cycle (500 series )Exellent con -dition. Contact; Annat Pharmacy, 114, Main street, Jaffna. (50068)

Almost newcasio stereo organ )MT - 400V) Robin Ey - 13 water Pump for sale 114, Main street, Jaffna. (50069)

### O/L கணிதம்

துரிதமாக Credit, Distinction பெறுபேறடைய இப்பாடத்தில் 15 வருடங்கள் கடந்தகால அரசாங்க விடைத்தாள்கள் திருத்தி அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [50111]

### தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை நிரோஸ் என்பவருடைய இல. 0903002803 கொண்ட விசேட அடையாள அட்டை உரும்பிராய்ச் சேர்ச்சிற்கும் பலாலி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தபால் அஞ்சல் அலுவலகம், உரும்பிராய். [50124]

### தென்னம்நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த, நல்லின தென்னம் நாற்றுக்கள் செவ்விளை, வத்தாவி, மாலைதீவு, சாதாரணம் குறுகிய காலத்தில் பலன் தரக் கூடியவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டிவீதி, மீசாலை. (50101)

### தவறிவிட்டது

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும் நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்திற்கும் இடையில் மூக்குக் கண்ணாடி கூட்டுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின் வரும் முகவரியில் ஒப்படைக்கவும் சி. தங்கராஜா, பிரதேச செயலகம், கோப்பாய். (50117)

### ஆங்கில வகுப்பு

டிசம்பர் 97 இல் O/L பரீட்சைக்கு விசேடமாக கற்பிக்கப்படும் தொடர்பு: 340, கே. கே. எஸ். வீதி (கூட்டுறவு பொத்தக நிலையக் கட்டடம்) யாழ்ப்பாணம். [50128]

### சேவை

மில்க்வைற் நீல சோப் - 7/50, சலவைப்பவுடர் - 6/50, பார் சோப் - 20/-, அரைக்கட்டி - 4/- மேலுறைகள் 5 – க்கு அறிவுநூல்கள், யோகாசனப்படம், வர்ணப் படங்கள், மரங்கள் கொடுக்கப்படும். மில்க்வைற்செய்தி. (சி/1631)

# தாய்மாருக்கு உணவு முத்திரை

தென்மராட்சி, செப். 27

தாய்மாருக்கான நான்காம் சுற்று விசேட உணவு முத்திரைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் அந்தந்த கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும், மீனவர் நிவாரணம் பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கும் தாய்மார்களுக்கான விசேட உணவு முத்திரைகள் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## தாமோதரம்பிள்ளை இராசரத்தினம்

[ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்]

மலர்வு: 03 - 12 - 1935 உதிர்வு: 08 - 10 - 1996

திதி: 27 - 09 - 1997

அன்பாலே அரவணைத்து
ஆசையுடன் வளர்த்தெடுத்து
இதயமதில் இருத்தி விட்டு
ஈடு இணையற்று மறைந்து விட்டீர்.

அன்பகலா நினைவுடன்:
குடும்பத்தினர்.

41, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை. (50126)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா சங்கரப்பிள்ளை

பிறப்பு: 03. 06. 1920 இறப்பு; 08. 10. 1996

திதி: 27. 09. 1997

எம் இனிய அப்பாவே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்.
ஆயிரமாண்டுகள் சென்றாலும்
மறந்திடுமோ எம் நெஞ்சம்
நித்தம் நித்தம் உம்மை நினைத்து
வற்றாத கண்ணீருடன்
வணங்குகிறோம் அப்பாவே!

உங்கள் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல கைதடி விநாயகப் பெருமானை வணங்குகிறோம்.

ச. கந்தசாமி (மகன்)
(எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி.)

கைதடி கிழக்கு,
கைதடி.

(49791)


# COM BANK S.P.R.C. TROPHY

COMMERCIAL BANK

## கொமர்ஷல் வங்கி யாழ். கிளையின்

விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும்
20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து
கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம்
இன்று பிற்பகல் (27-09-97) 1.30 மணிக்கு
யாழ். பரி.யோவான் கல்லூரி மைதானத்தில்
ஆரம்பமாகும்.

பலம் பொருந்திய இரு அணிகளான...

★ யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கவிளையாட்டு அணியும்
★ யாழ். கல்வித்திணைக்கள விளையாட்டு அணியும்

மேற்படி வெற்றிக் கிண்ணத்திற்காக களத்தில் மோதுகின்றன.

இவ் இறுதிப்போட்டி
S. M. FERNANDO நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறும்.

கொமர்ஷல் வங்கி
விளையாட்டுக் கழகம்

தரமான மூக்குக்கண்ணாடிக்கு என்றும் நாடுங்கள்:



S·M·FERNANDO

No. 580, Hospital Road,
Jaffna.

(சி/ 1620)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மருத்துவ பீடத்தைக் காப்பாற்றுமாறு துணைவேந்தருக்கு மாணவர்கள் மகஜர்

யாழ். மருத்துவ பீடத்தில் உள்ள போதனாசிரியர் வெற்றிடங்களில் பணிபுரிய வெளியிடங்களில் இருந்து வருவோருக்கு அவர்களின் தகுதி, திறமை ஆகியவற்றுக்கு ஏற்ப வேதனம், பதவி நிலை என்பனவற்றை வழங்க வேண்டும் என்று பல்கலைக்கழக நிர்வாகத்தை வலியுறுத்தி யாழ். மருத்துவ பீட மாணவர்கள் நேற்று ''பிக்கெட்டிங்'' நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அச்சமயம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடம் அவர்கள் கையளித்த மகஜர் இங்கே பிரசுரமாகுகிறது.

யாழ். மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் சகல துறைகளும் பூரணப் படுத்தப்பட்ட போதனாசிரியர்களைக் கொண்டிருந்தது. அப்போது தென் கிழக்காசியாவின் மிகச் சிறந்த மருத்துவ பீடமாகத் திகழ்ந்து பல தலைசிறந்த மருத்துவ நிபுணர்களை உருவாக்கியது. அதன் பின்னர் நாட்டு நிலைமை காரணமாக இத்தலைசிறந்த போதனாசிரியர்கள் நாட்டை விட்டுப் படிப்படியாக வெளியேறினார்கள். இதன் காரணமாக எமது மருத்துவ பீடம் போதனாசிரியர் தொடர்பாக வறுமை நிலை கண்டது. இந் நிலையிலும் அது தொடர்ந்து குறிப்பிட்ட சில வைத்திய நிபுண போதனாசிரியர்களால் மூடப்படும் அபாயத்தில் இருந்து காப்பாற்றப்பட்டது.

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடப்பெயர்வுடன் அந்த மிகச் சிலரும் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பின் யாழ்ப்பாணத்திற்கு நாம் மீண்டும் வந்த போது மருத்துவ பீடம் மீண்டும் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் துணை வேந்தரின் அயராத உழைப்பினால் தனது கற்பித்தல் கடமையை ஆரம்பித்தது. நிலைமை சிறிது முன்னேற்றம் அடைந்ததும் வெளிநாட்டில் இருந்தும் இலங்கையின் வேறு பகுதிகளிலிருந்தும் போதனாசிரியர்கள் யாழ். வந்து எமது மருத்துவபீடத்துடன் இணைந்து சேவையாற்ற முன் வந்துள்ளனர்.

மாணவர்களின் மிகக் கடுமையான முயற்சியும் இவர்களின் வருகையில் முக்கிய பங்காற்றியதென்பது வெளிப்படையானதாகும். இவ்வாறு எமக்கு சேவையாற்ற தமது சொந்தங்களை விட்டு இங்கு வந்த போதனாசிரியர்களுக்கு தகுந்த வரவேற்பும் வழிமுறைகளும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினால் செய்யப்படவில்லை என்பது மருத்துவபீடமாணவர்கள்மத்தியில் பெரியதொரு அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. பல்கலைக்கழக நிர்வாகத்தின் இப்படியானதொரு போக்கு எதிர்காலத்தில் எமது பீடத்தின் முன்னேற்றத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தெளிவு.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக மாணவர்களாகிய நாம் இன்று அமைதியான எதிர்ப்பு நிகழ்வு ஒன்றை காலை 9 மணிமுதல் 11 மணிவரை பிரதம பல்கலைக்கழக வளாகத்தில் வெளிக்காட்டுவதுடன், உடனடியாக அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து எமது பீடத்துடன் அவர்களை இணைப்பதுடன் மேலதிகமாக வெற்றிடமாக உள்ள ஏனைய துறைகளுக்கும் தேவையான போதனாசிரியர்களை விரைவாக இணைத்து எமது மருத்துவக் கல்வியை உரிய காலத்தில் நிறைவேற்ற, விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பல்கலைக் கழக நிர்வாகம் போதனாசிரியர்களின் இணைப்பைத் தாமதப் படுத்தி, அவர்கள் யாழ். மண்ணை விட்டுத்திரும்புவதற்கு காரணமாக அமைந்தால் அதன் விளைவுகள் மிகப் பாரதூரமானதாக அமைந்து யாழ். மருத்துவ பீடத்தையும் யாழ். மக்கள் சமூகத்தையும் மிகவும் கீழான நிலைக்குத் தள்ளிவிடும் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ★

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, செப். 27

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். யாழ். கல்விவலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சி சிவராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-173)

## பாலர் பாடசாலை

தென்மராட்சி, செப். 27

வரணி வடக்கு கறுக்காய்ப் பகுதியில் புதிய பாலர் பாடசாலை ஒன்றை கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கவுள்ளது.

இப் பாலர் பாடசாலை அடுத்த ஜனவரி மாதம் முதல் இயங்குமெனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-117)

## அலுவலகம் இடமாற்றம்

தென்மராட்சி, செப். 27

கொடிகாமம் கச்சாய் வீதியில் இயங்கி வந்த கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அலுவலகம் தற்போது ரயில் நிலையத்திற்கு முன்பாக உள்ள தனியார் கட்டடமொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ-117)

## ச. ச. நிலையம் இயங்குகிறது

கொழும்புத்துறை, செப். 27

புலோலி பெரியதேவன் அத்தாய் சனசமூக நிலையம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. அண்மையில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. (ஐ-30)

## ஆங்கில தினம்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் ஆங்கில தினம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி விவேகானந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் டீ. ஆர் அருமைநாயகம் கலந்துகொள்வார். (ஐ)

## தேசிய அடையாள அட்டைகள் வந்து சேர்ந்தன

நவாலி, செப். 27

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து யாழ். செயலக ஆள்பதிவுத் திணைக்களப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை அந்தந்தப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சியில் ஆள்பதிவுத் திணைக்களப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பகுதி கிராம சேவையாளர்களிடம் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது. (இ-100)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி வேலுப்பிள்ளை இராசமணி

மண்ணில்: 25 – 09 – 1925

விண்ணில்: 26 – 08 – 1997

திதி: 27 - 09 - 1997

எங்கள் நலன்களை மனங்கொண்டு
எம்மைப் போற்றி வளர்த்த அம்மாவே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

பலாலி வீதி,
திருநெல்வேலி.

(50109)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10 — 07 — 1914



உதிர்வு: 27 — 09 — 1987

### அமரர் ஆறுமுகம் வீரசிங்கம்

[எழுதுமட்டுவாள்]

ஆண்டு பத்தானாலும் ஐயாவின்
அன்பும் பண்பும் பாசமும் பரிவும்
என்றும் எங்கள் நினைவில் நிறைந்திருக்கும்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'' முருக வாசா ''
சரசாலை மத்தி,
சாவகச்சேரி.

[50099]


## ஆரோக்கிய அன்னை (வேளாங்கண்ணி)



### சிற்றாலய விழா

**யாழ். அரசினர் வைத்தியசாலை**

அநாதைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் அபயமளிக்கும் — அன்னை
நோயுற்றோருக்கும் நலிவுற்றோருக்கும் நலன்தரும் — அன்னை
நாதியற்றோருக்கும் நம்பிக்கையிழந்தோருக்கும் தஞ்சம் அளிக்கும் — அன்னை
தனிமையில் வாடுவோருக்கும் தயவை நாடுவோருக்கும் தோழமை
வாழ்வளிக்கும் — அன்னை

**அன்னையை நாடிவருவோம்! அருள்பெற வேண்டிடுவோம்!**

**27 புரட்டாதி 1997 நோயாளர் தின வழிபாடு**

மாலை 5-00 மணி (புதிய நேரம்)

**28 புரட்டாதி 1997 திருநாட் பாடற்பலி**

காலை 7-00 மணி (புதிய நேரம்)

யாழ். மறைக்கோட்ட முதல்வர்
**அருள்திரு. A. C. கிறிஸ்தோப்பர்**
அவர்களால் ஒப்புக்கொடுக்கப்படும்.

அருள்திரு. பிரான்சிஸ் டானியல் அமதி
அன்புடன் அழைக்கும் வைத்தியசாலை ஆன்மகுரு.

(50125)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் விவரங்கள் இன்னும் 3 வாரங்களில் வெளிவரும்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். குடாநாட்டில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோரின் விவரங்களை இன்னும் மூன்று வாரங்களுக்குள் வெளியிடுவதாக யாழ். நகர கொமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் உறுதியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞானம்ஸ் ஹோட்டலில் வட பகுதியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர் உரையாடினார்.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோரின் பெற்றோர், பாதுகாவலர் நடத்தி வருகின்ற உண்ணாவிரதத்துக்கு தாம் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## புலிகளின் மோட்டார்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

விமான எதிர்ப்பு ஏவுகணைகளை முறியடிக்கக் கூடிய — நூறு வீதம் பயன் தரக் கூடிய — கருவிகளை விமானத்தில் பொருத்தாமல், எதிரி நிலைகளை மிக நெருக்கமாக — நெருங்கி — சென்று தாக்குதல் நடத்தும்படி விமானியைத் தூண்டுவது தற்கொலைத் தாக்குதலாக அது முடியவே வழி செய்யும்; அதனால் விமானப்படை, தனது துருப்பையும் இழந்து மற்றொரு வான் கலத்தையும் இழக்க வேண்டி நேரிடும் என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

துருப்புகளை ஏற்றியிறக்கும் பணியில் விமானப்படை ஒத்துழைக்க முடியாமல் இருப்பதற்கு போதிய விமானங்களை விமானப்படை கொண்டிராததே காரணம் என்று ஏற்கனவே சமர்க்களம் பகுதியில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

விழுந்து, அழிந்து போன ''அன்ரனோவ்'' விமானங்கள் போக — எஞ்சிய — ஒரேயொரு ''அன்ரனோவ்'' ரக விமானத்தையே துருப்புகளை ஏற்றியிறக்கும் பணிக்கு விமானப்படை வைத்திருந்தது. அதுவும் மீண்டும் ஒரு முறை செப்பனிடுவதற்கு முன்னர் பறக்கக் கூடிய அளவு நேரம் முழுவதும் பறந்து விட்டதால் தற்போது மீளச் செப்பனிடுவதை எதிர்ப்பார்த்து தரையில் தவம் கிடக்கின்றது.

இதனால் வடக்குக்கு துருப்புகளை ஏற்றி இறக்கும் பணிக்கு, தனியார் விமான சேவையிலேயே இராணுவத்தினர் தங்கியிருக்க வேண்டி உள்ளது.

இது தொடர்பான தமது ஒப்பந்தம் இரண்டு வாரங்களுக்கு முன்னரே காலாவதியானபோதும்கூட தொடர்ந்து தமது சேவையை துருப்புகளுக்கு அந்த விமான சேவை நிறுவனம் வழங்கி வருவதாகத் தெரிகின்றது.

வடக்குக்கு பொருள்கள் மற்றும் சரக்குகளை ஏற்றியிறக்கும் பணியைப் பொறுத்த வரை அந்தச் சேவைக்கும் விமானப்படையிடம் ஒரேயொரு விமானம் தான் உள்ளது. 'ஷாங்ஸி வை -8' ரதத்தைச் சேர்ந்த— சீனத் தயாரிப்பான — இந்த விமானம் அண்மையில் தான் மீளச் செப்பனிடப்பட்டு பெறப்பட்டுள்ளது.

என்றாலும் இந்த விமானத்தை இரத்மலானையில் இருந்து பலாலிக்குச் செலுத்துவதற்கு கட்டளை அதிகாரியாகப் பணியாற்றுவதற்கு விமானிகள் இல்லை என்று கூறப்படுகின்றது.

இதனால் கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் வேறு பணியில் கடமையயற்றும் உயர் தரத்தில் உள்ள மூத்த அதிகாரி ஒருவரே — தற்போதைய அவசர தேவை கருதி — தினமும் இரத்மலானையில் இருந்து பலாலிக்கு இந்த விமானத்தைச் செலுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

தினசரி இவரை கட்டுநாயக்காவில் இருந்து இரத்மலானைக்கும் —

பலாலிக்கான விமான சேவையை முடித்த பின்னர், இரத்மலானையில் இருந்து கட்டுநாயக்காவுக்கும் —

கூட்டிக் கொண்டு வந்து திருப்பிக் கூட்டிச் செல்வதற்கு என தனியாக — சிறிய ரக —'வை — 12' விமானம் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றதாம்.

இவர் பலாலிக்கு செலுத்தி வரும் 'வை — 8' ரக விமானத்தின் விமானிகள் அறை தவிர்ந்த ஏனைய 'கபின்' பகுதிகள் உரிய காற்றமுத்த வசதியைக் கொண்டிராததால் அந்த விமானத்தில் துருப்புக்களை ஏற்றியிறக்க முடியாதிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த விமானம் இரத்மலானையிலிருந்து வடக்குத் துருப்புகளுக்குத் தேவையான பொருள்களை தினசரி நிறையவே ஏற்றிச் செல்கின்றது. ஆனால் பலாலியிலிருந்து இரத்மலானைக்குத் திரும்பும்போது வெறுமனேயே அது பறந்து வரவேண்டியுள்ளது.

அவசரமாகத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் விமானியின் கபினை அண்டிய — காற்றமுத்தம் செப்பனிடப்பட்ட — கபின் பகுதியில் ஒரு சில துருப்புகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. ★

## வல்லிபுராழ்வார் கொடியேற்றம்

கொழும்புத்துறை, செப். 27

சரித்திரப்பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வருடாந்த உற்சவம் எதிர் வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 16 ஆம் திகதி கேணித்தீர்த்தமும், 17 ஆம் திகதி ஆஞ்சனேயர் மடையும் இடம் பெறும்.

ஆலய உற்சவத்தின்போது இம்முறை குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கூடுவர் என எதிர்பார்க்கப் படுகிறது. (ஐ-30)

## பாடசாலை பழைய இடத்தில்

கொழும்புத்துறை, செப். 27

இடப்பெயர்வை அடுத்து இராமநாதன் கல்லூரியில் இயங்கி வந்த அளவெட்டி சதானந்த வித்தியாலயம் கடந்த 19 ஆம் திகதி முதல் அதன் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. (ஐ-30)

## லயன்ஸ் கழக உதவி

வடமராட்சி, செப். 27

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள நலிவுற்றோருக்கு உதவுவதற்காக வடமராட்சி லயன்ஸ் கழகம் அதிர்ஷ்டலாபச்சீட்டுக்களை விற்பனை செய்து வருகிறது.

இதன் மூலம் கிடைக்கும் வருமானம் நலிவுற்றோருக்கான சேவைக்கு வழங்கப் படவுள்ளது. (ஐ173)

## சேனைக் கூட்டம்

யாழ். மரியாயின் சேனை கொமிசியத்தின் கூட்டம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-173)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய வருடாந்த திருவிழாவின் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளன. இவ்வாலய வருடாந்த திருவிழா கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நவ நாள் வழிபாடுகளைத் தொடர்ந்து நடைபெறவுள்ள திருவிழாத் திருப்பலியையும், திருச்சொரூப பவனியையும் பங்குத்தந்தை அருட் திரு. அருள்நேசன் அடிகள் நடத்தி வைப்பார். (ஐ-173)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்; 21 — 10 — 1917

மறைவு: 28 — 08 — 1997

### திருமதி முத்துப்பிள்ளை வேதாரணியம்

எங்கள் குடும்பத்தின் தீபமாகவும், அன்புத் தெய்வமாகவும் விளங்கிய அன்னையே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

– குடும்பத்தினர்

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(50080)

# பளைப் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்துக்கு நிதி

தென்மராட்சி, செப். 27

பளைப் பிரதேச செயலக கட்டடம் விஸ்தரிக்கப் படவுள்ளது. புதிய கட்டடம் அமைப்பதற்கு கிளிநொச்சி அரசாங்க அதிபரினால் 2 லட்சத்து 53 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதேச செயலகத்திற்கு அருகில் இப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தெரிவித்தார். (ஐ-117)

## திரை அரங்கு

□ வலிகாமத்தை படையினர் கைப்பற்ற முன்னர் யாழ். குடாநாட்டில் — தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத்தவிர — இயங்கிக் கொண்டிருந்த ஒரே தமிழ் அமைப்பு ஈ. பி. டி. பி. — அப்போது தீவகப் பகுதியில் அந்த இயக்கம் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணத்தைப் படையினர் கைப்பற்றியதை அடுத்து முதலில் யாழ். நகருக்கு வந்து இயங்கத் தொடங்கிய அமைப்பும் அதுதான். யாழ். நகரில் ஸ்ரீதர் தியேட்டரை தலைமையகமாகக் கொண்டு இவ்வாண்டு ஜனவரி முதல் அந்த அமைப்பு இயங்கத் தொடங்கியது.

தொடர்ந்தும் அங்கிருந்து இயங்குவதற்கு அந்த அமைப்புக்கு நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. ஸ்ரீதர் தியேட்டரை விட்டுத்தரும்படி இராணுவ வட்டாரங்கள் அந்த அமைப்பைக் கேட்டிருக்கின்றனவாம்; காரணம் தெரியவில்லை.

கட்சி வட்டாரங்கள் யாழ். நகரில் — பொருத்தமான — புதிய இடம் தேடுவதாகத் தெரிகின்றது.

★ ★ ★ ★

□ பொதுமக்களுக்கு வெளியூர் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்காக ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்து இயங்கிக் கொண்டிருந்த யாழ். பிரதம தபாலகத்தின் ஞாயிறு சேவை திடீரென நிறுத்தப்பட்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். பிரதம தபாலகம் இழுத்து மூடப்பட்டிருப்பது குறித்து சில வாரங்களுக்கு முன்னர் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். தபால் துறையில் உள்ளூர் பொறுப்பதிகாரி ஒருவரே யாழ். பிரதம தபாலக அதிகாரிகள் மீதான் காழ்ப்புணர்வு காரணமாக இச் சேவைக்கு முட்டுக்கட்டை போட்டதாகவும் குறிப்பிட்டிருந்தோம். புதிதாக வரும் யாழ். நகர இராணுவத் தளபதி இதில் தலையிட முன்னர் நமது அதிகாரிகளே நமது மக்களுக்கு உரியதை தாமாகச் செய்து விட வேண்டும் என்றும் விநயமாகக் கேட்டிருந்தோம்.

ஆனால் உள்ளூர் தபாலதிகாரிகள் அதைப் பொருட்படுத்தவில்லை. தபாற் சேவையின் கொழும்பு உயரதிகாரிகளின் உத்தரவு அது என்று கூறிக்கொண்டு ஞாயிறு தொலைபேசிச் சேவைக்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே இருந்தார்கள்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள யாழ். நகர இராணுவக் கட்டளை அதிகாரி பிரிகேடியர் மெண்டிஸ் இந்த விவகாரத்தில் தலையிட்டதை அடுத்து ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் நண்பல் 12 மணி வரை வெளியூர் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்காக யாழ். பிரதம தபாலகம் மட்டுமன்றி சுண்டுக்குளி தபாலகமும் தற்போது திறந்திருக்கின்றது.

''இது விடயமாக நான் கொழும்புடன் நேரடியாகத் தொடர்பு கொண்ட போது, இங்குள்ள உள்ளூர் தபால் அதிகாரிகளே யாழ். பிரதம தபாலகம் தொலை பேசிச் சேவைக்காக ஞாயிறு திறப்பதை உடனடியாக நிறுத்தும்படி உத்தரவிடுமாறு தங்களைத் தூண்டியதாக கொழும்புத் தபால் திணைக்கள உயரதிகாரிகள் என்னிடம் கூறினர். உங்கள் அதிகாரிகள் தான் உங்கள் பகுதிக்கு உரிய சேவைகள் கிடைப்பதற்கு தடை போடுகின்றார்கள்''— என்று கவலையுடன் குறிப்பிட்டார் பிரிகேடியர் மெண்டிஸ்.

யார் குற்றியோ அரிசியானதில் யாழ். நகர மக்களுக்கு மகிழ்ச்சிதான். சரி இந்தச் சேவையை மதியம் 12 மணியுடன் நிறுத்தாமல் பிற்பகல் 3 மணிவரையாவது நீடித்தால் மேலும் கணிசமான எண்ணிக்கையானோருக்கு வெளியூர் தொலைபேசி அழைப்புக்களை வழங்க முடியும்.

அதற்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்வார்களா? அல்லது இதற்கும் பின்னால் தடி ஒச்சுவதற்கு உயர் இராணுவ அதிகாரிகள் தேவைப்படுவார்களா?

★ ★ ★

□ பீஹார் முன்னாள் முதலமைச்சர் லல்லு பிரசாத் யாதவ். கால்நடைத் தீவன நிதி தொடர்பான ஊழல் விவகாரத்தில் சிக்கி, முதலமைச்சர் பதவியை இழந்து, தற்போது விளக்கமறியலில் இருப்பவர்.

தமது பதவிக்கும் அந்தஸ்துக்கும் உரிய தகுதி நிலையை மறந்து, கீழிறங்கி கோமாளித்தனமான காரியங்களைச் செய்வதிலும் விதூஷகத் தனமான முறையில் கருத்துக்களைக் கூறி, பொறுப்பற்ற தனமாக எடுத்தெறிந்து பேசுவதிலும் 'தனிப் பெயர்' பெற்றவர்.

அவரின் கோமாளித்தனங்கள் உச்சக்கட்டத்திலிருந்த போது — இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் — அவரைப் பேட்டிகண்ட 'ஆனந்த விகடன்' சஞ்சிகை ''லொள்ளு'' என்ற கொட்டை எழுத்து அட்டைப்படத் தலைப்புடன் அவரின் பேட்டியைப் பிரசுரித்திருந்தது.

யாழ்ப்பாணத்தின் முக்கிய திணைக்கள அதிகாரி ஒருவரும் இவ்வாறு தேவையற்ற விடயங்களில் தலையிட்டு — குதர்க்கமாகப்பேசி — கோமாளித்தனம் பண்ணிக் கொண்டு — திரிகின்றார். போதனைக்குப் பொறுப்பான அத்திணைக்களத்தின் தலைவரின் ஏடாகூடமான நடவடிக்கைகளைப் பொறுக்காமல் அவரது திணைக்களத்தினரும், பொதுமக்களும் அவருக்கு தற்போது சூட்டியிருக்கும் பெயர் ''லொள்ளு''.

நல்ல பொருத்தம். போலுள்ளது......!

- மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா சிமெந்து தொழிற்சாலையை சுவிஸ் நிறுவனம் கொள்வனவு

யாழ்ப்பாணம், செப். 27

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தின் தொழிற்சாலையை சுவிஸ் நாட்டைச்சேர்ந்த ''கோல்டா பாங்'' என்ற நிறுவனம் கொள்வனவு செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

காங்கேசன்துறை தொழிற்சாலைப் பகுதிக்கு பலதடவைகள் விஜயம்செய்த இந்த நிறுவனப் பிரதிநிதிகள், தொழிற்சாலையில் மதிப்பீடுகளை மேற்கொண்டு தற்சமயம் அதனைக் கொள்வனவு செய்துள்ளனர்.

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் 80வீதப் பங்குகளுடனும், பொதுமக்களின் பங்குகளுடனும் நவீன இயந்திர வசதிகளுடனும் லங்கா சிமெந்து நிறுவனம் அமைக்கப்பட்டிருந்தது.

புதிய நிறுவனம் தொழிற்சாலையை கொள்வனவு செய்துள்ள போதிலும் எப்போது அதன் உற்பத்தி ஆரம்பமாகும் என்ற தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

இதே சுவிஸ் நிறுவனம் புத்தளத்தில் உள்ள சிமெந்துத் தொழிற்சாலையைக் கொள்வனவுசெய்து இயக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை—

காங்கேசன்துறையில் உள்ள சிமெந்து கூட்டுத்தாபன தொழிற்சாலையின் எதிர்காலம் குறித்து ஆராய அடுத்த மாதம் 6 ஆம் திகதி கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது. (உ–3)


உ

சிவமயம்

நாளை... காலை 8 மணி

**இணுவில் காயத்ரீ பீடத்தில்**

**அந்தணப் பெருமக்களின்**

**காயத்ரீ ஜபஹோமப் பெருவிழா**

விப்ர பூஜையை ஏற்று அனுக்கிரகிப்பவர்கள்

பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா (நீர்வேலி)

பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தசர்மா (மயிலணி)

பிரம்மஸ்ரீ வி. பரமேஸ்வரசர்மா (உடுவில்)

'சிவாகம கிரியாதத்வநிதி' பட்டம் பெறுபவர்கள்

சிவஸ்ரீ கு. ஸ்ரீகாந்தக்குருக்கள்
(பிரதமகுரு, குடாக்கரை சந்தசாமி கோயில்)

சிவஸ்ரீ ப. ஜயகுமாரக் குருக்கள்
(பிரதமகுரு, மானிப்பாய் மருதடி விநாயகர்)

சிவஸ்ரீ இரா. கங்காதரக்குருக்கள்
(பிரதமகுரு, அல்லையம்பதி முருகமூர்த்தி கோயில்)

அந்தணப் பெருமக்கள் அனைவரையும் விழாவிற்கு அழைப்போர்:

**சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்களும் தர்மசாஸ்தா குருகுல மாணவர்களும்.**

(சி/ 1644)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**புற்றளை சனசமூக நிலையத்தினரால்**

நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெற்றோரின் விவரம் பின்வருமாறு:

**1-ம் இடம் - 4803**

**2-ம் இடம் - 3925**

**3-ம் இடம் - 5628**

**ஆறுதல் பரிசில்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1) 1013 | 6) 14952 | 11) 1717 | 16) 4710 |
| 2) 5235 | 7) 14984 | 12) 2189 | 17) 5001 |
| 3) 803 | 8) 523 | 13) 6017 | 18) 15043 |
| 4) 2491 | (9 519 | 14) 6106 | 19) 405 |
| 5) 4607 | 10) 1305 | 15) 14986 | 20) 2250 |

த. கிருஸ்ணமூர்த்தி — தலைவர்

யோ. பிரதீபன் — செயலாளர்

(50133)



## முக்கிய அறிவித்தல்

**கரவெட்டி**

**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

**வாக்காளர் இடாப்பு முடுதல்**

**30. 09. 1997**

மேற்படி சங்கத்தில் அங்கத்தவர் இடாப்பு30.09.1997 இல் மூடப்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்து கிளைத் தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்களைக் கீழ்க் காணும் விடயங்களில் கவனஞ் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

1. சங்க உபவிதிப்படி பங்கு ஒன்றின் பெறுமதி ரூபா 100.00 ஆகும். ரூபா 100.00 பங்குப் பெறுமதி உடையவர்களே வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவர்.

2. உறுப்பினர் ஒருவர் சங்கத்தின் அங்கத்தவராகச் சேர்ந்து ஓராண்டு முடிந்த பின்பே வாகளிக்கவோ, நிர்வாக சபையில் இடம் பெறவோ முடியும்.

தலைவர் — செயலாளர்

(சி/1645)


## மன்னாருக்கு கப்பல்

யாழ்ப்பாணம், செப். 27

காங்கேசன்துறையில் இருந்து மன்னாருக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

கப்பலில் செல்ல பெயர் பதிவு செய்தவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழகம் டொனால்ட் கணேஷ குமார் ஞாபகார்த்தமாக நடத்தும் தோற்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 'இன்ஸ்ரிரியூட் ஒவ் இன்வ்வமெற்றிக் ஸ்ரடீஸ்' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை காலை 9.30 மணியளவில் நடைபெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து பற்றீஸியன் அணி மோதும். [உ-3]

## கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 27

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்களினதும், மனைப்பொருளியல்மாணவர்களினதும் கல்விக் கண்காட்சி இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும்.

இந்தக் கண்காட்சிக்கு முதன்மை விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் கலந்து கொள்வார். [உ-3]

## பரிசளிப்பு விழா

உரும்பிராய், செப். 27

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கல்விப்பணிப்பாளர் சி. சிவராசாவும், கௌரவ விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் அ. இராசேந்திரமும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி ம. இரத்தினசாமியும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஐ-154)

# கடற் கொள்ளைக்காரர் மீது கடற்படையினர் தாக்குதல்!

## கொழும்புத் துறைமுகத்தில் சம்பவம்

கொழும்பு, செப். 27

கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் இருந்து பொருள்களைக் கொள்ளையிட்ட கடற் கொள்ளைக்காரர்கள் மீது கடற் படையினர் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

கப்பலில் இருந்த கொள்கலன்களில் 17 கொள்கலன்களை உடைத்து ரூபா 35 லட்சம் பெறுமதியான பொருள்களைக் கடற் கொள்ளைக்காரர்கள் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல லட்சக் கணக்கான பெறுமதியான தைக்கப்பட்ட ஆடைகளுடன் கடற் கொள்ளைக்காரரின் 2படகுகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர் என்றும்—

ஏனைய இரு படகுகளும் கடற் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியிலும் தப்பிச் சென்றுவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-6-3]

### மூழ்கிய கப்பலில் பொருள்களை ஏற்றிய

# யாழ். வர்த்தகருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்!

## புளொட் அமைப்பு கோரிக்கை

நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகப் பகுதியில் கடலில் மூழ்கிய எம். வி. அஸ்ரோரியா கப்பலில் பொருள்களை ஏற்றிய யாழ் வர்த்தகர்களுக்கு அவற்றுக்கான நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு 'புளொட்' அமைப்பின் அரசியல் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீரவுக்கு புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கப்பல் மூழ்கியதால் பண்டிகைக் கால உடு புடைவைகள் உட்பட பெருமளவு பொருள்களை யாழ். வர்த்தகர்கள் இழந்துள்ளனர். குடா நாட்டுக்கான உணவுப் பொருள்கள் உட்பட பல பொருள்களையும் எடுத்து வருவதில் வர்த்தகர்கள் கணிசமானளவு பங்காற்றி வருகின்றனர். எனவே அவர்கள் நம்பிக்கை இழக்காத விதமாக அவர்களுக்கு உடனடி நிவாரணமும் பொருள் இழப்புக்கான நஷ்டஈடும் வழங்கப்படவேண்டும்—என்று அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் யாழ். அரச அதிபருக்கும், யாழ். நகர படை அதிகாரிக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஐ)

### கப்பல் மூழ்கியதால்

# வர்த்தகருக்கு ஏற்பட்ட பாதிப்பு; யாழ். வணிகர் கழகம் கவலை

யாழ்ப்பாணம், செப். 27

எம். வி. அஷ்ரோரியா கப்பல் பொருள்களுடன் கடலில் மூழ்கியதால் யாழ். வணிகர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து யாழ் வணிகர் கழகம் கவலை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகர்களின் இழப்பை ஈடுசெய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வணிகர் கழகம் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காப்புறுதி செய்யப்படாத கப்பல்களை துறைமுகத்துக்குள் அனுமதிப்பதனால் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறு போது பொருள்களை ஏற்றி அனுப்பும் வர்த்தகர்களும், நுகர்வோரும் பாதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற தவறுகள் இனிமேல் இடம் பெறாது தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ். பொது நூலகம் தற்காலிக கட்டடத்தில்!

யாழ்ப்பாணம், செப். 27

எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகம் புனரமைக்கப்பட்டு மீண்டும் இயங்க ஆரம்பிக்கும் வரை அதனைத் தற்காலிகமான இடம் ஒன்றில் இயங்க ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி விடுத்த பணிப்புரையைத் தொடர்ந்து—

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் யாழ். நகரில் தற்காலிக இடத்தில் யாழ். பொது நூலகம் இயங்க இருக்கிறது

யாழ் செயலகத்துக்கு முன்னால் உள்ள வீடமைப்பு அதிகார சபை கட்டடத்தொகுதியின் கீழ் மாடிக் கட்டடத்தில் இந்த நூலகம் இயங்கும்.

இந்தக் கட்டடத்தைப் புனரமைக்கும் பணி தற்போது முழுமூச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ் பொது நூலகத்துக்கென அன்பளிப்பாக பல அமைப்புக்களால் வழங்கப்பட்டு கொழும்பில் தேங்கிக் கிடக்கும் நூல்கள் கொழும்பில் இருந்து எடுத்து வர ஏற்பாடாகியுள்ளது.

பழைய நூலகம் புனரமைக்கப்படும் வரை இந்த இடத்தில் நூலகம் இயங்கும் என தெரிவிக்கப்பட்டது. (உ-3)

**நாளை**

**புரட்டாதி 12**

ஞாயிற்றுக்கிழமை

திதி துவாதசி

பிற்பகல் 4.27 வரை

நட்சத்திரம் ஆயிலியம்

காலை 6.18 வரை.

சுபநேரம்: 9.02–10.32

ராகுகாலம்: 4.32–6.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மூழ்கிய கப்பலின் பெறுமதி ரூ. 9 கோடி!

வடக்கே வருவதற்காக பொருள்கள் ஏற்றப்பட்ட நிலையில் கொழும்பு துறை முகத்தில் மூழ்கிய ''அஸ்ரோரியா'' கப்பலின் பெறுமதி பதினைந்து லட்சம் அமெரிக்க டொலர் [சுமார் ஒன்பது கோடி ரூபா] எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலுடன் சேர்ந்து ''நில்கிரி'' என்ற இழுவைப் படகும் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிங்கப்பூரைச் சேர்ந்த இந்த இழுவைப்படகு 22 வருடத்துக்கு முன்னர் கட்டப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-150-3]

# யாழ். மறை மாவட்டத்தில் புதிய நியமனங்கள்

யாழ். மறைமாவட்டத்தில் சில புதிய நியமனங்களை யாழ். ஆயர் மகா. வந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை செய்துள்ளார்.

இதன்படிவண. பிதா சி.வி. ஜெயக்குமார் யாழ். மனித முன்னேற்ற நடுநிலையப் பொறுப்பாளராகவும், வண. பிதா ஆர்.செ.சகாயநாயகம் ஆயர் இல்ல நிதிப்பொறுப்பாளராகவும், வண. பிதா பி. இருதயதாஸ் முல்லைத்தீவு — கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வராகவும், வண. பிதா எம்.ஈ.பயஸ் நாவாந்துறைப் பங்குத்தந்தையாகவும், வண. பிதா எப். எக்ஸ். கருணாரட்ணம் வவுனிக்குளம் பங்குத்தந்தையாகவும், வண. பிதா அன்ரனிதாஸ் இரணைமடு பங்குத் தந்தையாகவும் நியமனம் பெற்றுள்ளனர். (ஐ-173)

# மரண அறிவித்தல்கள்

## பழனி சின்னத்துரை

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், தர்மபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பழனி சின்னத்துரை அவர்கள் 11-09-97 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், சந்திரசேகரம் (தர்மபுரம்), குணசேகரம் (சவூதி அரேபியா), சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தா, தேவி, சிவராசா (இ. போ. ச., யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஞானசேகரன், ஞானசீலன், ஞானசோதி, ஞானகலாயா, ஞானகௌசலா, ஞானசோபிகா, சிவாஜினி, சிவானந்தன், நிஷாந்தா, சிவதர்சன், சிவதர்சினி, சிவகாந்தன், சிவதனுசியா, சிவதர்சிகா, சிவசொரூபன், சிவப்பிரியா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 12-09-97 வெள்ளிக்கிழமை தர்மபுரத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. சிவராசா
(மருமகன்)
(இ. போ. சபை)

121, 1ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(50139)

## சிதம்பரப்பிள்ளை நடராசா

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நடராசா 21 – 09 – 1997 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27 - 9 - 97 சனிக்கிழமை காலை 10. 30 மணிக்கு அவரின் நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி செம்பாட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(50143)
(காமாட்சி அம்பாள் சங்கத்திற்கு அருகில்)

## கு. வி. அமிர்தலிங்கதுரை

(கு. வி. அச்சக உரிமையாளர்)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 386, மணிக்கூட்டுவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கு.வி. அமிர்தலிங்கதுரை [ஞானசுரபி] 25.9.97 வியாழக்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

இவர் தர்மவதியின் அன்புக் கணவரும், பிரபாகரன் (ரஷ்யா), பிரசாந்தினி, பிருந்தாபன், பிரதாபன் [A/L இந்துக்கல்லூரி], பிரகாசன் [O/L மத்திய கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் K. V. தம்புவின் (முனீஸ்வரா கபே உரிமையாளர்) அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.9.97 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்று கொழும்பு கனத்தை மயானத்தில் காலை 10 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
த. தியாகராஜா
(மைத்துனர்)

386, மணிக்கூட்டுவீதி,
(வெலிங்டன் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
(50134)

# கொழும்புக்கு பொருள்கள்

கொழும்பிலிருந்து ஏற்றி வரப்பட்ட பொருள்களை பருத்தித்துறையில் தற்சமயம் இறக்கிக் கொண்டிருக்கும் 'மாஹோ' கப்பலில் இங்கிருந்து பொருள்களை ஏற்றி கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெங்காயம், புகையிலை, கடலட்டை மற்றும் பொருள்களை இக் கப்பலில் ஏற்ற விரும்புவோர் செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டது.

விபத்து நடந்த இடத்துக்கு உடனடியாக விரைந்தபடையினர் உயிரிழந்த சிப்பாயின் சடலத்தையும், காயமடைந்த சிப்பாயையும், பலத்த சேதமடைந்த அவர்களது மோட்டார் சைக்கிளையும் அவசர அவசரமாக அங்கிருந்து ஏற்றிச் சென்றனர்.

காயமடைந்த சிப்பாய் பின்னர் சாவகச்சேரியில் இருந்து ஹெலி மூலம் பலாலிக்குச் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

விபத்தில் சிக்கிய குடும்பஸ்தரின் சடலம் சம்பவம் நடந்த இடத்திலேயே அன்று மாலை வரை கிடந்தது. சடலத்தில் இருந்து பெருமளவில் இரத்தம் வெளியேறிக் காணப்பட்டது. பின்னர் சடலம் அவ்விடத்தில் இருந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுஅங்கு வைக்கப்பட்டிருந்தது. மரண விசாரணைக்காக அதுநேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டது.

பலியான குடும்பஸ்தரின் மகன் ஒருவன் 1990 ஆம் ஆண்டு சங்கத்தானைப் பகுதியில் இரவு நேரம் நித்திரைப் படுக்கையில் இருந்த சமயம் ''சீ-பிளேனில்'' இருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுக்கையிலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-30-117]

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்)

விவசாய, மீன்பிடி, வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதற்குப் பதில் அளித்த அந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ். குடாநாட்டில் சமாதான நிலை இன்னும் திரும்பியதாகக் கருத முடியவில்லை. 1999 ஆம் ஆண்டில் சமாதானம் ஏற்படலாம் எனக் கருதுகிறோம். அப்போது பெரிய திட்டங்களுக்கு சர்வதேச நாடுகள் உதவிகளை வழங்கும்.

தற்சமயம் சிறிய அளவிலான திட்டங்கள், புனர்வாழ்வுப் பணிகள் ஆகியவற்றுக்கே —சிறிய அளவிலான உதவிகளைத்தான் வழங்க முடியும் —என்று அவர்கள் தெரிவித்தனராம். (உ-3)

## மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்)

எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்ற இந்த அமைதி எதிர்ப்பு நிகழ்வின் பின்னர் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அவர்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் நேரில் கையளித்தனர்.

பின்பு, அவர்கள் மத்தியில் தோன்றி உரையாற்றிய துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மருத்துவ மாணவர்களின் அபிலாஷைகளை — கோரிக்கைகளை — தான் பரிவோடு பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதியளித்தார். (உ-3)

# புகை மூட்டத்தில் சிக்கிய விமானம் மலையில் மோதியது

## சுமாத்திராவில் 234 பேர் பலி!

இந்தோனேசியாவின் பயணிகள் விமானம் ஒன்று சுமாத்திராவின் வடபகுதியில் மலை ஒன்றில் மோதி வீழ்ந்து நொருங்கியதில் அதில் இருந்த 234 பயணிகளும் உயிரிழந்தனர்.

ஜகார்த்தாவில் இருந்து மேடானுக்குச் சென்று கொண்டிருந்த அந்த விமானம் காட்டுத்தீயால் ஏற்பட்ட கரும்புகை மண்டலம் நிரம்பிய பகுதியில் மலையில் மோதியுள்ளது. விமானத்தின் சிதைந்த பகுதிகள் காட்டுப் பகுதியில் சிதறிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''கருடா'' விமான நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த விமானம் புகை மூட்டத்துக்குள் சிக்கியிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. மேடான் விமானத் தளத்தில் தரையிறங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் அதனுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. (ஐ)

# ஊர்காவலரின் சம்பந்தம் குறித்து சரத் முனசிங்க

அம்பாறை சென்றல் முகாம் பகுதி தமிழ்க் கிராமம் மீது இடம் பெற்ற தாக்குதலில் ஊர்காவலர் சம்பந்தப்பட்டு இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது என்று இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் பொலீஸார் சம்பந்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஆனால் இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-21-3)

## திலீபன்...

(முதலாம் பக்கத் தொடர்)

பல இடங்களில் நினைவஞ்சலிக் கூட்டங்களும், கண்காட்சிகளும் இடம்பெற்றன.

இதேவேளை—

நினைவு நாளை ஒட்டி யாழ். குடாநாட்டின் சில இடங்களில் திலீபனின் வர்ணப் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. (ஐ-3-164)

## இணைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

இழுபறியாக இருந்து வந்த விடயங்களின் அதிகாரப் பரவலாக்கல் அலகும் ஒன்றாகும்.

வடக்கு- கிழக்கு இணைந்த — தமிழர் தாயகம் ஒன்றிணைக்கப்பட்ட — நிர்வாக அலகே ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று தமிழ்க் கட்சிகள் விடாப்பிடியாகக் கூறி வந்தன.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு எனத் தனியான நிர்வாக அலகு ஒன்று தேவை என முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது. ஆனால் பிரதான கட்சிகளான ஐ.தே. கட்சி, ஸ்ரீ.ல.சு.க. ஆகியவற்றைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

இணைப்பை பல சிங்களத் தலைவர்களும் அடியோடு எதிர்த்து வந்தனர்.

ஆனால் இறுதியாக தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைக்கு இணங்கிப் போகும் நிலைக்கு அரசுத்தரப்பு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி நிர்வாக அலகு தேவை என்ற கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டதாகவும் தெரிகின்றது.

தீர்வுத் திட்டம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி நாளை ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேச ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் அதற்கு முன்னர் —

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பைச் சந்தித்து முஸ்லிம்களுக்குக் கிழக்கில் தனி நிர்வாக அலகு வழங்கப்படாததால் அவருக்கு ஏற்பட்டுள்ள சீற்றத்தைத் தணிக்கச்செய்து, அவரையும் அந்த முடிவுக்கு இணங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசு தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கேட்டிருப்பதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அஷ்ரப்பின் கருத்தை கூட்டணித் தலைவர்கள் அறிந்து கொண்டு வருவதே நல்லது எனத் தெரிவித்து கூட்டணியுடன் நாளையதினம் நடக்கவிருந்த தமது சந்திப்பை அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஜனாதிபதி ஒத்திவைத்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

அதற்கு முன்னர் கூட்டணித் தலைவர்கள் அஷ்ரப்புடன் விரிவானபேச்சுக்களில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-21)


மனஒளி

நுண்மதி
ஞாபகம்
கருத்தூன்றல்
கல்வியின் நிலை
பாடநூலை வாசிப்பது

மூன்றாவது இதழ் வெளிவந்து விட்டது

தனிப்பிரதிகளுக்கு:

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

உளநோய் சிகிச்சைப்பிரிவு,
யாழ். போதனா வைத்தியசாலை,

சாந்திகம், சுண்டுக்குளி.

[சி/1583]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27 - 09 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை
27 - 09 - 1997 சனிக்கிழமை



வைத்திய ஆலோசனைக்கு ஏற்ப
மூக்குக்கண்ணாடிகள் பெறுவதற்கும்,
சிறந்த முறையில் பற்களைக் கட்டிக்
கொள்வதற்கும் நாடவேண்டிய இடம்
பி. ஜெ. பர்னாண்டோ
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/1418)

கருத்துக் கலசம்

மயூரா

## ஒழுக்கம் தேவை

மேல் நாட்டில் — லண்டனில் — மூன்று தசாப்தங்களுக்குக் கூடுதலாக வாழ்ந்த அன்பர் ஒருவர் விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்துள்ளார். ஒழுக்கம், கட்டுப்பாடு, கண்ணியம், பண்பு, மரபு பேணுதல் ஆகியன நிறைந்திருந்த முந்திய யாழ்ப்பாணத்துத் தலைமுறையைச் சேர்ந்தவர் அவர்.

யாழ். நகரிலும் அதனை அண்டிய ஊர்களிலும் இன்றைய யாழ்ப்பாணச் சந்ததியினர் — இளமட்டங்கள் — நடந்துகொள்ளும் விதம் கண்டு அவர் மனம் வெதும்பினார்.

மேலைநாட்டில் வாழும் எங்கள் வாரிசுகள் அங்குள்ள பழக்க வழக்கங்கள், நடைமுறைகளைப் பின்பற்றி எமது பண்பாட்டையும் சிறப்பு இயல்புகளையும் இழந்து விடுவார்களோ என்ற அச்சம் அங்கு எங்களை வாட்டுகிறது. இது விடயத்தில் நாம் மிகவும் அவதானமாக உள்ளோம். பிள்ளைகளை எமது பண்பாட்டுச் சூழலிலே வளர்ப்பதற்கு மிகப் பெரிய அளவில் முயன்று வருகிறோம்—

அப்போதெல்லாம், யாழ்ப்பாணத்தின் இன்றைய தலைமுறையினர் எங்கள் சமூக மரபுகளையும் பண்பாடுகளையும் கலாசாரங்களையும் கடைப்பிடித்து ஒழுகும் சந்ததியினராகவே விளங்குவர் என்று கருதுவதுண்டு; நம்புவதுண்டு —

ஆனால் நேரில் வந்து பார்த்த போது பெரும் ஏமாற்றமாகி விட்டது. உண்மை நிலை தெரியாத மடையர்கள் ஆனோமே என்று கவலையாக உள்ளது. ஒழுக்கமும் அடக்கமும் நிறைந்த இளஞ் சந்ததியை இங்கு காணமுடியும் என்ற எமது கற்பனை கனவாகியே விட்டது! — என்று விசனப் பட்டார்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய இளைய சந்ததியினர் எமது சமூக மரபுகளையும், வாழ்க்கை முறைகளையும் உதாசீனம் செய்து பண்பாட்டுக் கோலங்களைத் தாறுமாறாக்கியும் சுக்குநூறாக்கியும் சிதைத்துவிட்டு புதிய போக்கில் போகிறார்கள் என்பது கசப்பான உண்மையே. இது குறித்து இந்தப் பத்தியிலும் உதயனிலும் பல தடவை சுட்டிக் காட்டியுள்ளோம்.

தமிழர்கள், யாழ்ப்பாணத்தவர்கள் என்று எம்மைக் கூறிக் கொள்வதற்கு, நமக்கென்று தனித்துவமான மரபுகள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள், வாழ்க்கை முறைகள், வரன்முறைகள் தேவை.

ஆனால் இன்றைய இளைஞர்களிடம் அவற்றைக் காண முடியவில்லை. ஆலயத்தில் கூட அட்டகாசத் தனமாக நடந்து கொள்ளும் அளவுக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பாடு என்பனகரைந்துபோய்விட்டன.

இவர்களைத் திருத்துவதற்கு சமூக மட்டத்திலான பயிற்சிப் பாசறைகள் அவசியம். சமூகவியலாளர்கள், சமூக நலன் விரும்பிகள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் இதில் சிரத்தை கொள்ள வேண்டும்.

# யாழ். மருத்துவ பீடம் தப்பிப் பிழைக்குமா?

'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது' போல என்பார்கள்.

'உலக்கை தேய்ந்து உளிப் பிடியானது' போல என்றும் கூறுவார்கள்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைப் பொறுத்தவரை இந்த இரண்டு உவமேய மொழிகளும் மிகப் பொருத்தமானவைபோலவே தெரிகின்றன.

### ஆரம்பம்

1976 இல் யாழ்.மருத்துவபீடம் தொடங்கப்பட்ட போது, இலங்கையில் உள்ள ஏனைய மருத்துவபீடங்கள் மட்டுமல்லாமல் சர்வதேச மருத்துவக் கல்லூரிகள் பலவும் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியத்துடன் யாழ். மருத்துவ பீடத்தைப் பார்த்தன.

மருத்துவ பீடத்தின் 13 துறைகளுக்கும் தேவையான போதனாசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் போன்ற பதவிகள் அனைத்தும் மிகச் சிறந்த மருத்துவக் கல்விமான்களால் நிரப்பப்பட்டு திறமையான ஆளணி நிர்வாகத்துடன் செயற்படத் தொடங்கியது யாழ்.மருத்துவபீடம்.

ஆய்வுகூடவசதிகள், கட்டட வசதிகள், மூலவள வசதிகள், போதனா ஆஸ்பத்திரி வசதி ஆகியவை உரியளவில் அப்போது கிடைக்காத போதிலும் மிகத் திறமையான போதனாசிரியர்களின் சிறப்பான கவனிப்பு இருந்ததால் சர்வதேச தரத்தில் வரவேற்கத்தக்க திறமைகளுடன் பல நூறு டாக்டர்களை யாழ்.மருத்துவபீடம் உருவாக்கித் தந்தது.

### இழப்பின் ஆரம்பம்

ஆனால் 1980களில் மருத்துவ பீடத்தின் கட்டடங்கள், ஆய்வுகூடங்கள் போன்ற பௌதிக வசதிகள் ஒருபுறம் அதிகரிக்க அதிகரிக்க, மறுபுறத்தில் போதனாசிரியர்கள் பலரை அது மெல்ல மெல்ல இழக்கத் தொடங்கியது.

சட்ட மருத்துவத்துறைப் (Forensic Medicine) பேராசிரியர் சரவணபவானந்தன், சத்திர சிகிச்சைத் துறை (Surgery) பேராசிரியர் கருணைநாதன் போன்றோர் காலமானார்கள்.

சமூக மருத்துவத்துறை (Community Medicine) பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) போன்றோர் ஓய்வு பெற்றனர். (அவர் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகிறார்).

பலபேராசிரியர்கள் மறைந்தனர்; சிலர் ஓய்வு பெற்றனர்; மற்றும் சிலர் வெளிநாடு சென்றனர்.

இவ்வாறு போதனாசிரியர்கள் வளம் குன்றத் தொடங்கியது. 1990 களில் நிலைமை மிக மோசமடைந்து இன்று மருத்துவபீடம் மூடப்படுமா என்ற உச்சக்கட்டத்தை அடைந்து இந்தப்பிரச்சினை பூதாகாரமாகியுள்ளது.

1995ஆம் வருடத்துக்குரிய புதிய மாணவர் அணி யாழ். மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்படுமா? அவர்களுக்குப் போதனை வழங்கத்தக்க வகையில் மருத்துவபீடம் — இழுத்து மூடப்படாமல் — தொடர்ந்து இயங்குமா? — என்ற கேள்விகளே இன்று யாழ்.புத்திஜீவிகள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளன.

### மருத்துவபீடத் துறைகள்

யாழ். மருத்துவபீடத்தைப் பொறுத்தவரை அங்கு முதலாம், இரண்டாம் வருடங்களுக்கு (2nd M. B. B. S.) மூன்று துறைகளும் —

மூன்றாம், நான்காம் வருடங்களுக்கு (3rd M. B. B. S.) ஆறு துறைகளும்—

இறுதி வருடத்துக்கு நான்கு துறைகளுமாக—

மொத்தம் 13 துறைகள் உள்ளன.

முதலாம், இரண்டாம் வருடங்களுக்கு உடற் கூற்றியல் (Anatomy), உடற் தொழிலியல் (Physiology), உயிர் இரசாயனம் (Biochemistry) ஆகிய துறைகளும்—

மூன்றாம், நான்காம் வருடங்களுக்கு நோயியல் (Pathology), மருந்தியல் (Pharmacology), ஒட்டுண்ணியியல் (Parasitology), சட்டமருத்துவத்துறை (Forensic Medicine), நுண் உயிரியல் (Microbiology), சமூக மருத்துவத்துறை (Community Medicine) ஆகிய துறைகளும்—

இறுதி வருடங்களுக்கு குழந்தை வைத்தியம் (Paediatric), பெண்ணோயியல்—மகப்பேற்றியல் (Gynaecology & Obstetric), மருத்துவம் (Medicine), சத்திர சிகிச்சை (Surgery) ஆகிய துறைகளும் அடங்குகின்றன.

இந்த ஒவ்வொரு துறைக்கும் குறைந்தது ஒரு பேராசிரியர், ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர், இரு விரிவுரையாளர்கள் என்ற அடிப்படையில் குறைந்தது நான்கு உயர் போதனாசிரியர்கள் இருக்கலாம்; இருக்க வேண்டும்.

ஆனால் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு மிகக் குறைந்த போதனாசிரியர்களுடன் 'சேடம் இழுக்கும் நோயாளி' போல் 'நித்திய கண்டம்; பூரண ஆயுசு' மாதிரி ஏதோ ஒரு வகையில் இழுபட்டுக் கொண்டு கிடக்கின்றது யாழ். மருத்துவ பீடம்.

### மாணவர் செய்த குற்றமா?

மற்றைய மருத்துவ பீடங்கள் இருக்கத் தக்கதாக யாழ். மருத்துவ பீடத்துக்குள் நுழைந்த குற்றமோ என்னவோ பல்கலைக்கழகக் கல்வியை ஆரம்பித்து ஏழு ஆண்டுகளாகியும் டாக்டர் ஆகாமல் வெளிவர முடியாமல் இழுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் யாழ். மருத்துவ பீட மாணவர்கள்.

மருத்துவ பீடத்துக்குள் நுழைந்து விட்ட எட்டு மாணவர் அணிகள், தமது நான்கு வருடப் படிப்பைப் பூர்த்தி செய்யாமல் ஒரே நேரத்தில் இன்னும் மருத்துவ பீடக் கல்வியில் சிக்குண்டு காத்துக் கிடப்பது எமது சமூகத்தைப் பொறுத்தவரை பெரும் அவலமாகும்.

யுத்தச் சூழ் நிலையும், அதனால் போதனாசிரியர்கள் வெளியேறியமையும் உரிய வசதிகள் கிடைக்காமல் போனமையும், இன்னோரன்ன பிறகாரணங்களும் இந்த அவல நிலைக்கு முக்கியமானவை என்பது கண்கூடு.

ஆனால் யுத்தச் சூழ் நிலை தொடர்ந்தாலும் — அதன் இறுக்கம் சற்றுத்தளர்ந்துள்ள இந்த நிலையில் — மருத்துவ பீடம் ஓரளவுக்கேனும் மூச்சு விடக் கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ள காலத்திலும் — தொடர்ந்து அதன் நிலை மோசமடைவதுதான் பலரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றது; விசனமுறச் செய்கிறது.

### விழிப்புணர்வு

யாழ். மருத்துவ பீடத்தின் அவலநிலை கொழும்பில் மட்டுமல்லாமல் — தமிழர்கள், புத்திஜீவிகள், மருத்துவ வல்லுநர்கள் பரந்துள்ள — பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற இடங்களிலும் பிரசாரப்படுத்தப்பட்டு அது அங்குள்ள தமிழ் மருத்துவப் போதனாசிரியர்கள், மருத்துவர்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வையும் உணர்வலைகளையும் தோற்றுவிக்கவும் தவறவில்லை.

- ப்ரியா -

இந்த விடயத்தில் வெகுஜன தொடர்பு சாதனங்களின் பங்கும் கணிசமானது.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) போன்றோர் கொழும்பில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவை மூலம் யாழ். மருத்துவ பீடத்துக்கு புத்துயிர் அளிக்க வேண்டி விடுத்த பேட்டிகளும், அறிக்கைகளும் கூட நன்கு உதவின.

இதன் விளைவாக — சூடானாட்டின் இராணுவ கட்டுப்பாட்டு நிலைமைகள், அதன் கஷ்டங்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் — தமது சமூகத்தின் ஒரேயொரு மருத்துவ பீடமான யாழ். மருத்துவ பீடத்தைக் காப்பாற்றும் எண்ணத்துடனும், தமது சமூகத்துக்கு இப்போதாயினும் மருத்துவசேவை வழங்க முடியும் என்ற நம்பிக்கையுடனும் மருத்துவ போதனாசிரியர் தரத்தில் உள்ள பல தமிழர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு விருப்பம் கொண்டனர்.

### தெருக்குக் கட்டை போடும் செயல்

இந்த மகிழ்ச்சியான செய்திக்கு மத்தியில், 'தெருக்குக் கட்டை போடுவது போல' அவர்களின் வரவுக்கும் தடை போடும் நடவடிக்கைகளும் ஆரம்பமாகிவிட்டன என்ற அதிர்ச்சித் தகவல்களும் வெளிவந்திருக்கின்றன.

யாழ். மருத்துவ மாணவர்கள் — நீண்ட காலம் தமது கல்வியை, உரிய ஆசான்களுக்குக் கீழ் பூர்த்தி செய்ய முடியாமல் அல்லலுறும் மாணவர்கள் — மத்தியில் பெரும் குழப்பத்தையும், விசனத்தையும் இந்தப் போக்கு ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. விடயம் விளங்கியவர்கள — உண்மையை அறிந்து — சீற்றமும் கொண்டுள்ளனர்.

இப்போது புதிதாக மூன்றே மூன்று 'சேர்ஜன்'களே (சத்திர சிகிச்சை நிபுணர்களே) வந்துள்ளார்கள். இருவர் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நிபுணத்துவப் பிரிவிலும், மற்றைய ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியிலும் பதவி ஏற்க வந்துள்ளனர்.

ஆனால் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வந்த இருவரும் இன்னும் பதவி ஏற்கவில்லை என அறிய முடிகின்றது.

### வாக்குறுதிகள் காற்றில்

அவர்கள் யாழ். மருத்துவ பீடத்துக்குச் சேவையாற்ற வரமுன்னர் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள், சம்பளம், பதவி நிலை தொடர்பான விடயங்கள் கவனித்து நிறைவேற்றப்படவில்லை எனவும் — உதாசீனப் போக்குடன் அவர்கள் நடத்தப்படுகிறார்கள் எனவும்—

வெளிநாடுகளில் — அதிக வருமானத்துடன் — தாம் பேணிய உயர் நிலைகளைக் கைவிட்டு, சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற வந்த இவர்களை அவமதிக்கும் போக்கில் விவகாரங்கள் கையாளப்படுவதாகவும்—

மருத்துவ பீட மாணவர் வட்டாரங்கள் விசனத்துடன் சஞ்சீவிக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

### உள்ளகப் பயிற்சி

இந்த ''சேர்ஜன்'' யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்தால் சித்தியடையும் மருத்துவ மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் இங்கேயே தங்கள் உள்ளகப் பயிற்சியை (Intern Trainee) முடித்துக் கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

1990 க்குப் பின்னர் டாக்

( XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்துக்கு தெற்கில் எதிர்ப்பு தீவிரமாகுகின்றது!

இனப்பிரச்சினைக்குத் தான் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் குறித்து திட்டவட்டமான ஒரு முடிவை எடுப்பதற்கு ஜனாதிபதியும் அவரின் அரசாங்கமும் தீர்மானித்துள்ளது போல் தோற்றமளிக்கும் இவ்வேளையில் —

அத்தீர்வு யோசனைகளுக்கு எதிராகத் தென்னிலங்கையில் நாளுக்கு நாள் எதிர்ப்பு வலுத்து வருவதாகத் தெரிகின்றது.

தமது தீர்வு யோசனைகளை அமைச்சரவைக்கு முன் சமர்ப்பிப்பதற்காக நாளை மறுதினம் மாலை 6 மணிக்கு விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை ஜனாதிபதி கூட்டியிருக்கின்றார்.

அமைச்சரவை அனேகமாக இந்த யோசனைக்கு பூரண ஆதரவு தெரிவிக்கும் என அரசுத்தரப்பு உயர் வட்டாரங்கள் நம்புகின்ற போதிலும் —

அமைச்சரவைக்குள்ளும் — உள் வீட்டிலும் — இந்த விவகாரம் பெரும் இழுபறிகளைத் தோற்றுவிக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தீர்வு யோசனைகள் குறித்து அமைச்சரவை தீர்மானம் எடுத்ததன் பின்னர்—

தீர்வுத்திட்டம் குறித்து இறுதி முடிவு எடுப்பதற்காக அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அடுத்து வரும் வாரங்களில் தொடர்ந்து கூடும் எனக் கருதப்படுகின்றது. அக்கூட்டத் தொடரில் தீர்வுத் திட்ட விடயங்கள் அடங்கிய உத்தேச புதிய அரசமைப்பு சட்ட நகல் இறுதியாக்கப்பட்டு அது உடனடியாக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

புதிய உத்தேச அரசமைப்பு சட்ட நகல் ஒக்ரோபரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும் —

வரவு—செலவுத் திட்டம் மீதான நாடாளுமன்ற விவாதங்கள் நவம்பர் மாதத்தில் முடிவடையும் வரை உத்தேச அரசமைப்பு சட்ட நகல் நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று தெரிகின்றது.

தீர்வுத் திட்டம் தொடர்பான உத்தேச சர்வஜன வாக்கெடுப்பை அடுத்த ஆண்டு மார்ச்சில் நடத்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு தீர்வு யோசனைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் குறித்து அரசாங்கம் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்க—

மறுபுறத்தில் அதை வீழ்த்துவதற்கு — குழி பறிப்பதற்கு —உரிய ஏற்பாடுகளும் மும்முரமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

அரசின் தீர்வுத் திட்ட யோசனைகள் நடைமுறைக்கு வரவிடாமல், அவற்றை இடறி விழுத்தும் வகையில் கால்தடம்போடும் வேலையை ஐ. தே. கட்சியும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் செய்யக் கூடும் எனப் பலரும் எதிர்பார்த்திருக்க —

அந்த வேலையை, சிங்களவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவது தொடர்பாக ஆராய்வதற்கு — சுதந்திரமாக நிறுவப்பட்ட — சிங்கள ஆணைக்குழு ரணிலிடமிருந்து பொறுப்பேற்று விட்டதாக அறியவருகின்றது.

சிங்களவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவது தொடர்பாகத் தான் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் இடைக்கால அறிக்கைஒன்றை இந்த ஆணைக்குழு தயாரித்திருந்தது. அந்த அறிக்கை கடந்த வாரம் வெளியானது.

இந்த அறிக்கை, பொரளை பௌத்த இளைஞர் சங்கத்திலிருந்து பாரம்பரிய சிங்களக் கலாசாரப்படி அகிலஇலங்கை பௌத்த காங்கிரஸ்மண்டபத்துக்கு ஊர்வலமாக யானை மீது வைத்து எடுத்துச் செல்லப்பட்டது. மஞ்சள் உடைதரித்த மூவாயிரம் பிக்குகளும் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் மக்களும் இந்த ஊர்வலத்தில் பங்கு பற்றினர்.

பௌத்த காங்கிரஸ் மண்டபத்தில் — இந்த அறிக்கையை வெளியிட்டு வைக்கும் — வைபவத்தில் ஒட்டுமொத்தமாக சிங்கள சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துத் தரப்பினரும் சமூகம் தந்திருந்தது தான், அந்த ஆணைக்குழுவின் ஆதிக்கத்தை — செல்வாக்கை — வெளிப்படுத்தும் ஆச்சரியமான விடயமாக இருந்தது.

அரசுத் தரப்பின் சார்பிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அமைச்சர் டி. எம். ஜயரத்ன கூட இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றினார்!

டி. எம். ஜயரத்ன ஆட்சியிலிருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டமைப்பின் செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரைத் தவிர, பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சியின் சார்பில் கருணாசேன கொடித்துவக்கு, சுசில் முனசிங்க, எம். எச். முகம்மது ஆகியோரும் —

புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவின்) சார்பில் அதன் தலைவி சிறிமானி அத்துலத் முதலி, எம். பியான ரவி கருணாநாயக்கா ஆகியோரும் —

மல்வத்தை, அஸ்கிரிய பீடங்கள் உட்பட அனைத்து மகா சங்கங்களினதும் பீடாதிபதிகள் உட்பட பெரும் எண்ணிக்கையானோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டமை, ஆணைக்குழுவின் செல்வாக்கையும், அதன் அறிக்கைக்குக் கிடைக்கப் போகின்ற முக்கியத்துவத்தையும் ஓரளவு தெளிவுபடுத்துவதாக அமைந்தது.

ஆணைக்குழுவின் அறிக்கை, இனப்பிரச்சினைக்கு அரசு வைத்துள்ள தீர்வுத் திட்டத்தைக் காரசாரமாகக் கண்டித்துள்ளது.

★ தீர்வுத் திட்டம் மூலம் நாட்டை அரசு எட்டு அல்லது ஒன்பது பகுதிகளாகத் துண்டாடப் போகின்றது.

★ இதன் விளைவாக நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும்.

★ வடக்கு — கிழக்குக்கு அரசு அளிக்கப் போகும் அதிகாரங்கள் அப்பிரதேசங்கள் தம்மை தனி நாடாகப் பிரகடனப்படுத்தவும், அதனை இராணுவ அடிப்படையில் அவை தக்க வைத்துக் கொள்ளவும் வழி சமைத்துவிடும்.

★ பொலீஸ் என்ற போர்வையில் வடக்கு — கிழக்கில் தனக்கென ஓர் இராணுவத்தை பயிற்சியளித்து உருவாக்குவதற்கு வடக்கு — கிழக்குப் பிரதேசத்துக்கு இந்தத் தீர்வுத் திட்டம் மூலம் அரசு உதவியளிக்கின்றது.

★ நாட்டின் ஒற்றுமைக்காகவும், ஐக்கியத்துக்காகவும் தங்கள் உயிரை அர்ப்பணம் செய்த படையினர், பொலீஸாரின் அளப்பரிய தியாகத்தை இந்தத் தீர்வுத் திட்ட யோசனை மூலம் அரசு கேள்விக்குறியாக்கி உதாசீனப்படுத்தியுள்ளது.

★ தீர்வுத் திட்டம் மூலம் சமாதானத்தை எட்ட முடியும் என அரசு கூறுகின்றது. ஆனால் புலிகளை ஒழிக்காமல் எந்த வகையிலும் சமாதானத்தை எட்ட முடியாது. இந்தத் தீர்வு யோசனைகளை தாம் நிராகரிப்பதாக புலிகள் ஏற்கனவே அறிவித்தும் விட்டனர்.

★ ஆகவே "சமாதான யோசனைகள்" என்று அரசு கூறும் திட்டங்கள் சமாதானத்தைக் கொண்டுவரப் போவதில்லை.

★ எனவே நமது நாட்டின் இறைமை, ஐக்கியம், சுயாதிபத்தியம், பிரதேசம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும், நாடு துண்டாடப்படாமல் இருப்பதை உறுதி செய்வதிலும் அக்கறைஉள்ளவர்கள், அரசின் தீர்வுத் திட்டத்தினால் ஏற்படக் கூடிய ஆபத்தை நன்கு உணர வேண்டும்.

★ அரசாங்கத்தின் பிரசாரத்திற்கு எதிராக வலுவுள்ள எதிர்ப்பிரசாரம் நடத்தி, அரசின் உத்தேச திட்டத்தை முறியடிக்க முன்வர வேண்டும்.

—இவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில் வலுவுள்ள அமைப்பாக உருவாகியுள்ள சிங்கள ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றது.

## உள்ளும் புறமும்

குறுமுனி

அரசின் தீர்வுத் திட்டத்தைக் குழப்பும் வகையில் சிங்கள ஆணைக்குழு இவ்வாறு ஒருபுறம் செயற்பட—

மறுபுறத்தில் தீர்வுத் திட்டத்தை எதிர்க்கும் சிங்கள அரசியல் தலைவர்கள், தீர்வுத்திட்டத்தை நிறைவேற விடாது தடுப்பதற்கான பொதுத் தந்திரோபாயத்தை — உத்தியை — வகுப்பதற்காக ஒன்று கூடி ஆராயத் தொடங்கியிருக்கின்றார்கள்.

சிங்களத் தீவிரவாதக் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும், புதிய ஜனநாயக ஐக்கிய முன்னணி (லலித் பிரிவு) தலைவியான சிறிமானி அத்துலத்முதலியும் கடந்த வார ஆரம்பத்தில் ஒன்றாகச் சந்தித்து நீண்ட நேரம் பேசினர்.

அடுத்த நாள் இரவு 9 மணியளவில் ஐக்கியதேசியக் கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க, கொழும்பு பிளவர் டெரஸில் உள்ள சிறிமானி வீட்டுக்குச் சென்றார். சிறிமானியின் நம்பிக்கைக்குரிய அரசியல் உதவியாளரான ரவி கருணாநாயக்கா எம். பியும் மற்றும் லலித் அணியின் முக்கிய பிரமுகர்களும் அங்கு ரணிலை வரவேற்றனர்.

நீண்ட நேரம் பேச்சுக்கள் நடந்தன. அரசு தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது எடுக்க [illegible] இரு தரப்பும் முக்கியமாக ஆராய்ந்ததாகத் தெரிகின்றது.

சுமார் இரண்டு மணி நேரப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இரவு 11 மணிக்கு மேல் ரணில் புறப்பட்டுச் சென்றார்.

அதற்கு அடுத்த நாள் காலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவுக்குரவி கருணாநாயக்கா சகிதம் சிறிமானி அத்துலத் முதலி சென்றார்.

அங்கு மூடிய கதவுகளுக்குப் பின்னால் ஐ. தே. க. தலைவர் ரணில், கட்சித் தவிசாளரும் கொழும்பு மேயருமான கரு ஜெயசூரிய, சிறிமானி அத்துலத் முதலி, ரவி கருணநாயக்க ஆகியோர் பேச்சுக்களை நடத்தினர்.

தீர்வுத் திட்டத்தை எதிர்க்கும் விடயத்தில் கூட்டு நடவடிக்கைத் திட்டம் ஒன்றையே எதிர்க்கட்சிகள் விரும்புவதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் —

எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பை எப்படியாயினும் முறியடித்து, தீர்வுத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசு விடாது முயன்று வருகின்றது.

இதற்கான பிரசார நடவடிக்கையாக அரசினால் முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தித் திட்டம், வெண்தாமரை இயக்கம் போன்றவை எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

இதற்காக அண்மையில் ஜனாதிபதி ஆரம்பித்து வைத்த சமாதான ஊர்தியும் ('தவளம') எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

அனுராதபுரத்தில் 'சமாதான ஊர்தி' ஆடம்பரமாக — ஆர்ப்பாட்டமாகத்தான் புறப்பட்டது. ஆனால் தென்னிலங்கையில் அது செல்லும் இடங்களில் புதிதாக மக்கள் திரளுவதாக இல்லை.

அரசுத் தரப்பு எம். பிக்களே தமது பிரதேசத்தில் 'சமாதான ஊர்தியை' வரவேற்கும் பொறுப்பிலிருந்து நைஸாக நழுவிக் கொண்டு, தமது பிரதேச மாகாண சபை உறுப்பினர்களின் தலையில் அந்தப் பொறுப்பைச் சுமத்தி வருகின்றார்கள்.

அரச நிகழ்ச்சிகளுக்கு கூட்டம் திரட்டுவதற்காக பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தக் கூடாது என்று கல்வி, உயர்கல்வி அமைச்சரின் பணிப்புரை இருக்கத் தக்கதாக —

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்கு 'சமாதான ஊர்தி' வந்த போது, அதனை வரவேற்க சனக் கூட்டம் வராததால், பாடசாலை மாணவ, மாணவியர் வீதிகளுக்கு அழைத்து வரப்பட்டு, திரண்ட சனக் கூட்டம் வந்ததாகக் காட்ட முயற்சி எடுக்கப்பட்டது.

கடந்த வாரம் புதன் கிழமை சமாதான ஊர்தியை வரவேற்பதற்காக கொழும்பில் பெரும் எண்ணிக்கையான பாடசாலை மாணவர்கள் — கடும் மழையில் நனைந்தபடி — வீதியில் — வரிசையில் — காத்து நின்றனர்.

சமாதான ஊர்தியை வரவேற்க அரசுத் தரப்பு வாடகைக்கு ஆள் பிடிப்பதாகக் கூறுகின்றது ஐ. தே. கட்சி.

'சமாதான ஊர்தி' முயற்சி பிசுபிசுத்துப் போவது ஒருபுறமிருக்க —

தீர்வு யோசனைகளுக்கு எதிராக அரசுத் தரப்புக்குள் எழக் கூடிய எதிர்ப்பை நசுக்கும் திட்டம் குறித்து மறுபுறத்தில் அரசு உயர் பீடம் ஆராய்ந்து வருகின்றது.

இந்த வகையில் —

அரசுக்குள் இடம் பெற்றிருக்கும் சிறிமானி அத்துவத் முதலி, அவரது ஆதரவாளரான ரவி கருணநாயக்க ஆகிய இரு எம். பிக்களையும் அரசுத் தரப்பிலிருந்து விலத்துவது குறித்து அரசு உயர்பீடம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. அடுத்து வரும் நாள்களில் இது பற்றிய அறிவிப்பு வெளிவரக் கூடும்.

★ ★ ★

### நீதித்துறையில் தலையீடு

அரசமைப்பைத் திருத்துவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு ஆதரவை நாடாளுமன்றத்தில் பெறமுடியாத நிலையில் இருக்கும் அரசாங்கம், சர்வஜன வாக்கெடுப்பு போன்ற குறுக்கு வழிகள் மூலம் அரசமைப்பைத் திருத்த முடியுமா என்று ஆராய்ந்து வருவது தெரிந்ததே.

தற்போதைய அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு மாறான வழியில் அரசமைப்பை மாற்றுவதற்கு அரசு முயற்சித்தால் உயர் நீதிமன்றம் மூலம் அதற்கு தடை உத்தரவு வாங்க முடியும் என்பதே சட்ட வல்லுநர்களின் கருத்தாகும்.

எனவே தனது முயற்சிக்கு தடையாக இருக்கக் கூடியது உயர் நீதிமன்றமே என்பது அரசுக்குத் தெரியும்.

எனவே இந்தத் தடையைத் தாண்டுவதற்கு அரசு புதிய வழிமுறை ஒன்றை நாடுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பதவியில்—தனக்கு வேண்டியவர்களை—அல்லது தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசமைப்பை மாற்றும் அரசின் வழிமுறையுடன் இணங்கிப் போகக் கூடியவர்களை —நியமிப்பதன் மூலம் இந்தத் தடையைத் தாண்டலாம் எனக் கருதப்படுகிறதாம்.

அரசமைப்பை மாற்றும் வழி முறை போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் உயர்நீதிமன்றத்தின் முன்னால் வரும்போது ஏழு நீதியரசர்களை அல்லது ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றமே அந்த விடயங்களை ஆராய்வதுவழமை.

ஆகவே உயர்நீதிமன்ற நீதியரசர்களாக —மேற்படி விடயத்தில் அரசின் கருத்துடன் ஒத்துப் போகக்கூடிய எண்ணத்தை உடையவர்கள்—ஒரு சிலரை நியமிப்பது தனக்கு உயர்நீதிமன்றத்தில் சாதகமான முடிவைப் பெற்றுத் தரும் என அரச உயர்பீடம் கருதுகின்றது.

வழமையாக மேல் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் வெற்றிடங்களுக்கும் —

மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் மூத்த நீதியர

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விரைந்து ஓடி வா



வெள்ளைக் கொக்கே! வெள்ளைக் கொக்கே!
விரைந்து ஓடி வா!
துள்ளும் மீனைக் கொத்தித் தின்ன
பறந்து ஓடி வா!

கறுப்புக் காக்கா! கறுப்புக் காக்கா!
கரைந்து பறந்து வா!
பருப்புச் சோறு படைத்திடுவேன்
பகிர்ந்து உண்ண வா!

நீலமயிலே! நீலமயிலே!
நடனம் ஆடி வா!
கோல முகிலைக் கண்டு நீயும்
குதித்து ஓடி வா!

பச்சைக் கிளியே! பச்சைக் கிளியே!
பறந்து ஓடி வா!
கொச்சை மொழி நான் பேசிடவே
அருகில் ஓடி வா!

-த. திலீபன்-




# மனித விலங்கு

ஊருகின்ற எறும்பைப் பார்
உழைப்பதிலே உணர்வைப் பார்......
சேருகின்ற காகம் பார்
சேர்த்துண்ணும் அழகைப் பார்...
நன்றியுள்ள நாயைப் பார்
வாலை ஆட்டும் குணத்தைப் பார்...
ஆறறிவு விலங்கைப் பார்
ஆளாளுக்கு சண்டை பார்...!

வளைந்து கொடுக்கும் நாணல் பார்
வரும் கெடுதி விலகும் பார்...
குலை குலையாய் இளநீர் பார்
குடித்து மகிழ உதவும் பார்...
ஓலை தரும் பனையைப் பார்
ஓய்ந்த பின்னும் சேவை பார்... ஆனால்
ஆறறிவு விலங்கைப் பார்
அவருக்கு அறிவு தந்தது யார்.....?

—சாளின் நவரட்ணம்.
(திருக்குடும்பக் கன்னியர் மடம்)

# சுட்டியான குட்டிப் பூனை

குட்டிப்பூனை காயும் பாலை
எட்டிப் பார்த்ததாம்!
சட்டிக்குள்ளே தலையை விடத்
திட்டம் போட்டதாம்!

அம்மா பூனை சொன்ன புத்தி
அதை மறந்ததாம்!!
சும்மா பாலைப் பார்த்து நாக்கை
தொங்க விட்டதாம்!

வேகமாக சட்டிப் பாலில்
தலையை விட்டதாம்!
பாவம் கொதித்த பாலில் குட்டி
வாயும் வெந்ததாம்!

அவசரமாய் முடிவெடுத்தால்
கெடுதி நேருமோ?
அதனையிந்தப் பூனைக் குட்டி
கதையும் சொல்லுமோ?

அ. ஷ[illegible]
[ஆண்டு [illegible]
மானிப்பாய், இந்துக்கல்லூரி].

# எண் பாட்டு

ஒன்று ஒன்று ஒன்று
உலகில் இறைவன் ஒன்று.
ஒன்றும் ஒன்றும் இரண்டு
உலகில் சாதி இரண்டு.

இரண்டும் ஒன்றும் மூன்று
இனிக்கும் தமிழும் மூன்று.
மூன்றும் ஒன்றும் நான்கு
முயலின் கால்கள் நான்கு.

நான்கும் ஒன்றும் ஐந்து
நம்கை விரலும் ஐந்து.
ஐந்தும் ஒன்றும் ஆறு
நாவின் சுவைகள் ஆறு.

ஆறும் ஒன்றும் ஏழு
ஆகும் சுரங்கள் ஏழு.
ஏழும் ஒன்றும் எட்டு
சிலந்திக்குக் கால்கள் எட்டு.

எட்டும் ஒன்றும் ஒன்பது
இருக்கும் மணிகள் ஒன்பது
ஒன்பதும் ஒன்றும் பத்து
உள்ள திசைகள் பத்து.

ச. ராஷ்மி
ஆண்டு 3,
யா/ நெல்லியடி. மெ. மி. த. க. பா.

# தேசிய பறவைகள்

உலக நாடுகள் சிலவற்றின் தேசியப் பறவைகள் வருமாறு:-

★ இலங்கை — காட்டுக்கோழி
★ இந்தியா — ஆண்மயில்
★ பர்மா — மயில்
★ டென்மார்க் — வானம்பாடி
★ கனடா — வாத்து
★ ஜேர்மனி — வெள்ளைக் கொக்கு
★ கொலம்பியா — பருந்து
★ அமெரிக்கா — கழுகு
★ இங்கிலாந்து — ரொபின்
★ மலேசியா — மாயா
★ பெல்ஜியம் — செஸ்ட்ரல்
★ தென்னாபிரிக்கா — நீலக்கொக்கு
★ வடஅயர்லாந்து — முத்துச் சென்னி

தொகுப்பு;- சி. காயத்திரி,
ஆண்டு— 8,
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

# சர்வதேச குறியீடுகள்

1. ஒலிவ் மரத்தின் இலை — சமாதானம்
2. புறா — சமாதானம்
3. சக்கரம் — வளர்ச்சியைக் குறிக்கும்
4. தாமரை — பண்பாடு, நாகரிகம்
5. கறுப்புத்துணி — துக்கம்
6. கறுப்புக் கொடி — எதிர்ப்பு
7. எலும்பு நடுவில் மண்டையோடு — ஆபத்து
8. சிவப்பு விளக்கு — ஆபத்து, மருத்துவமனை
9. செஞ்சிலுவை — மருத்துவமனை, சங்கம்
10. செம்பிறை — அரபுநாடுகளில் செஞ்சிலுவைக் குறி
11. கையில் தராசு ஏந்தி — கண் கட்டப்பட்ட பெண் — நீதிதேவதை
12. சிவப்புக் கொடி — புரட்சி
13. அரைக்கம்பத்தில் கொடி — இரங்கல்
14. தலைகீழாக கொடி — துன்பம்
15. மேல் நோக்கி செங்குத்தாக கொடி — சமாதானம்
16. வெள்ளைக் கொடி — சமாதானம்
17. மஞ்சள் கொடி — தொற்று நோய்

(பௌத்தர்கள் துக்கத்துக்கு வெள்ளைக் கொடி கட்டுவர்.)

-தர்மலிங்கம் திவாகரன்,
(ஆண்டு — 4, கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலயம்)

# நொடிப் பொழுது

1. இடி இடிக்கும்; மின்னல் மின்னும்; ஆனால் மழை பெய்யாது. அது என்ன?
2. ஒற்றைக் காதுள்ளவன் மீது உரசினால் சுருக்கு அது என்ன?
3. பகலில் உறண்டவன்; இரவில் புரண்டவனுக்கு உறு துணையானவன். அவன் யார்?
4. கணுக்கணுவாய் இருப்பான்; அணுவணுவாய் இனிப்பான். அவன் யார்?
5. தண்ணீரில் தாவும் கப்பல்; தரையில் குதிக்கும் கப்பல். அது என்ன?
6. தட்டினால் தாளமும் வரும்; சேதியும் வரும். அது என்ன?
7. ஓட்டுக்குள்ளே இருப்பான்; வீட்டுக்குள் தினம் வருவான். அவன் யார்?
8. இளவயதில் கண் இருக்கும்; கிழவயதில் அது இருக்காது. அது என்ன?
9. சூடானவன்; சுவையானதைத் தருவான். அவன் யார்?
10. எங்கள் வீட்டுப் பெண்ணுக்கு வாய் நிறைய பற்கள். அவள் யார்?

தொகுப்பு: ஏ. பிறேமினி.

# மூளைக்கு வேலை!

1. கீழேயுள்ள படத்தில் ஒவ்வொரு வகையான பழமும் வெவ்வேறு மதிப்புடையவை. ஒவ்வொரு வரிசையில் இருக்கும் பழங்களின் மதிப்புக்களும் கூட்டில் காட்டப்பட்டுள்ளன. இடது புற வரிசையில் உள்ளது மட்டும் விடுபட்டுப் போய்விட்டது. அதனைக் கண்டு பிடிக்கவும்.




2.



இந்தப் படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

3. கீழேயுள்ள படத்தில் மூன்று சதுரங்கள் அடுக்கப்பட்டுள்ளன. காகிதத்தின் மேல் வைத்த பேனாவை (அல்லது பென்சிலை) எடுக்காமல் மூன்று கட்டங்களையும் உங்களால் வரைய முடியுமா? ஒரு கோட்டை இன்னொரு கோடு வெட்டவோ, ஒரே கோட்டை இரு முறை வரைவதோ கூடாது.



4. பின்வரும் சொற்களில் ஒன்று பொருத்தமற்றது. அது எது?

வப்பு
வால்
தா
லம்
றுப்பு

5. ஒன்று தொடக்கம் 9 வரையான எண்கள் ஒவ்வொன்றையும் நான்கு தடவைகள் பயன்படுத்தி கீழேயுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்ய வேண்டும். இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் கூட்டினால் முப்பது வரவேண்டும். உங்களால் இயலுமா? முயன்று பாருங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3 | | |
| | 5 | | | | |
| 7 | | 8 | | 6 | |
| | | | | | 2 |
| | | 4 | | | |
| 1 | | | | | 9 |

(விடை XI ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓஸோன் ஓட்டைகள் பூமியை விழுங்குமா?

கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்னர் பூமியின் வடமுனைப் பகுதியில் ஆய்வு நடத்தச் சென்ற விஞ்ஞானிகள் குழு ஒன்றே முதன் முறையாக இந்த எச்சரிக்கையை வெளியிட்டது.

ஐரோப்பாவுக்கு மேற்கே வளிமண்டலத்தில் பாரிய துவாரம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. சூரியனில் இருந்து வெளிவரும் 'அல்ரா வயலற் இன்பிரரெட்' கதிர்களின் நேரடித் தாக்கத்தில் இருந்து பூமிப் பந்தைக் கவசம் போன்று காத்து வரும் ஓஸோன் மண்டலத்திலேயே துவாரம் ஏற்பட்டிருக்கின்றது என்பதுதான் அந்த எச்சரிக்கை.

இத் துவாரத்தின் ஊடாக அல்ரா வயலற் கதிர்கள் நேரடியாக பூமியை வந்தடைகின்றன.

இதன் காரணமாகப் புவியில் வெப்பம் அதிகரிக்கும்; துருவப்பகுதிகளில் உள்ள பாரிய பனிப்பாறைகள் உருகத் தொடங்கும்; இதனால் சமுத்திரங்களின் நீர் மட்டம் மேலும் ஒரு மீற்றர் வரை உயரும்.

இதன் விளைவால் பசுபிக் சமுத்திரத்தில் உள்ள ஏராளமான சிறுதீவுகள் நீரில் மூழ்கும்; பல இடங்களில் கடற் பெருக்கு ஏற்படும்; கடலிலும் தரையிலும் வாழும் அரிய உயிரினங்கள் பல அழிவுறும். — இவ்வாறெல்லாம் அடுத்தடுத்துப் பல எச்சரிக்கைகளை விடுத்தனர் அந்த விஞ்ஞானிகள்.

செய்தி அறிந்து உலக மக்கள் விழித்தனர்; சிறிய தீவுகள் கிலிகொண்டன; உலகத் தலைவர்கள் சிந்திக்கத் தொடங்கினர்; சூழல் பாதுகாப்புக் குழுக்கள் அபாயக் குரல் எழுப்பத் தொடங்கின.

ஆனால் ஓஸோன் படலத்தில் ஓட்டைகளை ஏற்படுத்தக் காரணமான மனித நடவடிக்கைகள் மட்டும் தொடர்ந்தன.

ஓஸோன் மண்டலத்தை எவ்வாறு பாதுகாக்கலாம்? அதில் ஏற்பட்ட ஓட்டைகளை அடைக்க வழி யாது? என்றெல்லாம் ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஓஸோன் படை என்றால் என்ன? அது எவ்விதம் பூமியைப் பாதுகாக்கிறது? அதில் ஓட்டைகள் ஏற்படக் காரணம் என்ன?

நமது பூமியைச் சூழ்ந்து பல வாயுக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் படையையே வளிமண்டலம் என்கிறோம்.

புவி ஈர்ப்பு சக்தி காரணமாக இந்த வளிமண்டலம் அதைச் சூழ்ந்து காணப்படுகின்றது. புவியில் உயிர் வாழ்க்கைக்குச் சாதகமாக அமைந்த எல்லா நிலைமைகளும் இந்த வளிமண்டலம் தந்த கொடை ஆகும்.

வளிமண்டலத்தில் சுமார் 78 வீதமான வாயு நைதரசன் ஆகும். சுமார் 21 வீதம் ஒட்சிசன் ஆகும். வளிமண்டலத்தில் இந்த நைதரசனும், ஒட்சிசனும் சேர்ந்து 99 வீதத்தைக் கொண்டிருக்கின்றன. எஞ்சிய ஒரு சத வீதத்திலேயே ஏனைய எல்லா வாயுக்களும் உள்ளன. இவற்றில் காபனீரொட்சைட்டும் நீராவியும் அடங்கும்.

வளிமண்டலத்தில் மிகக் குறுகிய அளவில் காணப்படும் நீராவியே பூமியில் காலநிலை, வானிலை என்பவற்றின் தோற்றத்துக்கும் மாற்றத்துக்கும் காரணமாகும்.

ஒட்சிசன் இன்றி புவியில் உயிரினங்கள் எதுவும் வாழ முடியாது.

உயிரினங்களின் தொடர்ச்சியான உயிர்ப்பு நிலைக்கு ஒட்சிசன், காபனீரொட்சைட்டு, நைதரசன் என்பன உதவுகின்றன. மனிதன் உட்பட உயிரினங்கள் அனைத்தும் ஒட்சிசனை சுவாசித்து, காபனீரொட்சைட்டை வெளிவிடுகின்றன. தாவரங்கள் காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து உணவுப் பொருளைத் தயாரித்து ஒட்சிசனை வெளிவிடுகின்றன.

தாவரங்கள் தமக்குத் தேவையான நைதரசனை வேர்கள் மூலம் மண்ணில் இருந்து பெறுகின்றன. இவ்வாறு பூமியின் இயக்கத்துக்கு வளிமண்டலம் உதவுகிறது.

வளிமண்டலத்தில் புவியை அண்டிக்காணப்படும்ஒட்சிசன் வழக்கமாக இரண்டு அணுக்கள் இணைந்ததாக $(O_2)$ அமைந்திருக்கும். இதற்கு அடுத்த நிலையில் — ஒட்சிசனின் மூன்று அணுக்கள் ஒன்றிணைவதால் — ஓஸோன் $(O_3)$ உருவாகுகின்றது.

இந்த ஓஸோன் வாயுவானது பூமியைச் சுற்றி ஒரு படையாக அல்லது படலமாகக் காணப்படுகின்றது.

## "பச்சை வீட்டு விளைவு"

சூரியனின் கதிர்கள் பூமியை நேரடியாகத் தாக்காது தடுப்பதும் வளிமண்டலமே ஆகும். அது பூமியை நோக்கி வரும் சூரியக் கதிர்களை சிதறச் செய்தும் தெறிக்கச் செய்தும், உறிஞ்சியும் அதன் செறிவைக் குறைத்து விடுகிறது. இதன் மூலம் பகலில் பூமிக்குத் தேவையான அளவு வெப்பம் கிடைக்கிறது. இதே போன்று இரவு வேளைகளில் பூமியில் இருந்து வெப்பம் முழுவதும் வெளியேறி விடாமல் கவசமாகத் தடுப்பதும் வளிமண்டலமே ஆகும்.

வளிமண்டலத்தின் இச் செயலை "பச்சை வீட்டு விளைவு" என்பர்.

சீரற்ற காலநிலை நிலவும் பகுதிகளில் தாவர வகைகளை வளர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் கண்ணாடியினான மூடிய அமைப்பு முறையையே 'பச்சை வீடு' என அழைக்கின்றனர்.

பயிர் வகைகளுக்கு அந்தக் கண்ணாடி வீடு அளிக்கின்ற பாதுகாப்பையே பூமிக்கு வளிமண்டலம் வழங்குகிறது. எனவேதான் வளிமண்டலத்தில் இச் செயலையும் 'பச்சை வீட்டு விளைவு' என்கின்றனர்.

இந்தப் "பச்சை வீட்டு விளைவை" ஏற்படுத்துகின்ற வளிமண்டலப் படைகளில் மிக முக்கியமானது ஓஸோன் படை. வளிமண்டலம் புவியின் மேற்பரப்பில் இருந்து 800 கிலோ மீற்றர் உயரம் வரை பரவியிருப்பதாக விண்வெளி ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இந்தப் பரந்த வளிமண்டலம் மாறன் மண்டலம், படை மண்டலம், அயன மண்டலம் என மூன்று பிரதான படைகளைக் கொண்டுள்ளது.

## மாறன் மண்டலம்

புவியின் மேற்பரப்புக்கு மிக நெருங்கியதாகக் காணப்படும் இப்படையேகால நிலை, வானிலை மாற்றங்களுக்குக் காரணமாகும். வெப்பநிலையும், அமுக்கமும் இப்படையில் மேலே செல்லச் செல்ல படிப்படியாகக் குறைந்துசெல்லும்.

## படை மண்டலம்

மாறன் மண்டலத்துக்கு அடுத்ததாக அதற்கு மேலாக அமைந்துள்ளது படை மண்டலம் ஆகும். இங்கு வெப்பநிலை எங்கும் ஒரே சீராக இருக்கும்.




## அயன மண்டலம்

படை மண்டலத்துக்கு மேல் அமைந்துள்ளது அயன மண்டலமாகும். இங்குஉயரே செல்லச் செல்ல வெப்பநிலை அதிகரித்துச் செல்லும்.

கீழே உள்ள முதலாவது படையான மாறன் மண்டலத்துக்கும், அதற்கு அடுத்த படையான படை மண்டலத்துக்கும் இடையே ஓஸோன் வாயுவைக் கொண்ட சிறப்பான ஒரு மென்படை காணப்படுகிறது. அதனையே ஓஸோன் படை என்பர்.

அளவில் மிக மெல்லியதான இப்படை ஆற்றும் தொழிற்பாடுகள் மிக முக்கியமானவை ஆகும்:

ஞாயிற்றுக் கதிர்களில் ஊதா நிறமான அல்ரா வயலட் கதிர்கள் தீங்கானவை. பூமியை நோக்கி வரும் அந்தக் கதிர்களைத் தடுத்துத் [illegible] புவியில் வெப்ப நிலையைச் சீராக்கும் முக்கிய பணியை இந்த ஓஸோன் படலம் செய்கிறது.

உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வேறு எந்தக் கதிர்களும் பூமியின் மேற்பரப்பை அணுகவோ அல்லது மாசு ஏற்படுத்தவோ இந்த ஓஸோன் படை அனுமதிக்காது.

பூமிப் பந்தின் தனித்துவத்தைப் பேணும் ஓஸோன்படையின் நற்செயலுக்கு மனிதனின் நடவடிக்கைகள் எதுவுமே நன்றி செலுத்தத் தவறிவிட்டன.

பல்வேறு நடவடிக்கைகள் மூலம் வளியை மாசடையச் செய்யும் மனிதன் ஓஸோன் படையில் ஓட்டைகளை ஏற்படுத்திவிட்டான்.

அணுவாயுத சோதனை, தொழிற்சாலைகள், வாகனங்கள் வெளிவிடும் புகைகள், கழிவுகள் மற்றும் நச்சு வாயுக்கள் என்பன ஓஸோன் படையின் பரம எதிரிகளாகும். குறிப்பாக குளிரூட்டிகளுக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்களின் விளைவு இதில் முக்கியமானதாகும்.

மனித நடவடிக்கைகளால் உருவாகும் நச்சுவாயுக்களும், தடித்த வாயுக்களும் வளிமண்டலத்தில் கலந்துவிடுகின்றன. இதனால் ஓஸோன் படை குழப்பமடைகிறது.

தீங்கு விளைவிக்கும் சூரியக் கதிர்கள் பூமியை வந்தடையாது தடுக்கின்ற ஓஸோன் படை குழப்பமடைகிறபோது உயிரினங்களுக்குத் தீங்கு வருவது தவிர்க்கமுடியாததாகிறது.

வளிமண்டலத்தை ஊடுருவிச் செல்கின்ற விண்கலங்கள், ஏவுகணைகள் வளிமண்டலத்தில் சேர்க்கின்ற புகைகள் ஓஸோன் படையைச் சிதைத்துவிட்டன.

இதனால் ஏற்படப்போகும் விளைவுகள் என்ன?

பூமியை வந்தடையும் தீங்கான சூரியக் கதிர்களால் உயிர் வாழ்க்கை ஸ்தம்பிக்கலாம்; பல்வேறு உடல் தாக்கங்கள் விளையலாம்; காலநிலை மாறுதல்களும், இயற்கை அழிவுகளும் தோன்றலாம்; வெப்பம் அதிகரித்து, பனிப்பாறைகள் உருகி, கண்டங்களை கடல்கொள்ளும் ஆபத்தும் நேரிடலாம்.

ஓஸோன் படலத்தில் ஏற்பட்ட இந்த ஓட்டைகளை அடைக்க வாய்ப்புண்டா?— இது குறித்து விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர். வளிமண்டலத்தை மாசுபடுத்தும் மனித நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும் என்பதையே அவர்கள் வலியுறுத்துகின்றனர். மனிதனின் அழிவு நடவடிக்கைகளை நிறுத்தாமல் ஓட்டைகளை அடைக்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியளிக்கப் போவதில்லை.

நெடு. வி. ரமணன்

ஓட்டைகள் காணப்படும் பகுதிகளுக்கு ஓஸோன் வாயுவை பலூன்கள் மூலம் செலுத்திப் பரவச்செய்யும் திட்டம் ஒன்றையும் விஞ்ஞானிகள் ஆய்வுசெய்து வருகின்றனர்.

புவி நடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள், வெள்ளப் பெருக்குகள், சூறாவளிகள், கொடிய பஞ்சங்கள்போன்று இந்த ஓஸோன் படை ஓட்டைகளும் இயற்கை அழிவு எனக் கூறுவோரும் உள்ளனர்.

சூரியனில் ஏற்படும் மாறுதல்கள், அதன்வெப்பக் கதிர் வீச்சில் ஏற்படும் மாறுதல்கள் போன்றவை ஓஸோன் படையில் காலத்துக்குக் காலம் ஏற்படுத்திவந்த பாதிப்புக்களின் விளைவே இது என்றும்—

மனிதர்களால் கண்டறியப்படாமல் நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது என்றும் சிலர் கூறுகின்றனர்.

இயற்கை தன்னைச் சமப்படுத்திக் கொள்ளும் போது இந்த ஓட்டைகள் தானாகவே அடைபட்டுப் போகும் என்று சிலர் வாதிடுகின்றனர்.

குளோரோ புளோரோ காபன் (Chloro Fluro Carbon) என்ற இரசாயனச் சேர்வைகளே ஓஸோன் படலத்தைத் தாக்கி அதில் உள்ள ஓஸோனை ஒட்சிசனாக மாற்றுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

குளிரூட்டிகளின் பாவனையின் போது இந்த குளோரோ புளோரோ காபன்கள் அதிகம் வெளிவிடப்படுவதாகவும் —

அவை வளிமண்டலத்தில் கலந்து ஓஸோன் படலத்தைச் சிதைப்பதாகவும் —

ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நவீன விஞ்ஞான உலகில் குளிரூட்டி வகைகளின் பாவனை இன்றியமையாததாகவும், அதிகளவிலும் இருப்பது ஓஸோன் படை அழிவுக்கு முக்கிய காரணமாக உள்ளது.

இது தவிர, நவீன அதிவேக ஜெட் விமானங்கள், அணு உலைகள் போன்றவை வெளியேற்றும் நச்சு வாயுக்களும் ஓஸோன் படை அழிவுக்கு முக்கிய காரணமாக அமைகின்றன.

ஓஸோன் படையின் அடர்த்தியில் ஏற்படும் ஒரு வீதக் குறைவால் பூமி மீது சூரியனின் ஊதாக் கடந்த கதிர்களின் ஊடுருவல் இரண்டு வீதம் அதிகரிக்கும்; அத்தோடு சுமார் நாலரை லட்சம் மக்களுக்கு தோல் புற்றுநோயை ஏற்படுத்த அது வழி செய்யும்.

அதிர்ஷ்டவசமாக கறுப்புத் தோல் உடையோர் இத்தகைய தோல் புற்று நோயால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வளிமண்டலத்தில் ஊதாக் கடந்த கதிர்களின் ஊடுருவல் 25 வீதம் அதிகரித்தால் சோயா தாவரத்தின் விளைவு 25 வீதம் குறைகின்றது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு ஓஸோன் படை அழிவினால் ஏற்படக் கூடிய ஆபத்தை ஓரளவுக்கு விளக்குவதாக உள்ளது.

கடந்த நூறு வருடங்களில் பூமியின் ஓஸோன் படை அழிவால் புவியின் வெப்பநிலை 0.5° செல்ஸியஸ் அதிகரித்திருப்பதாக அறியப்பட்டுள்ளது. இந்த வீதத்தில் ஓஸோன் படை அழிவு தொடர்ந்தால் அடுத்த 30 முதல் 40 வருடங்களில் புவிச் சூழல் வெப்ப நிலை 1° அல்லது 2° செல்ஸியஸ் அளவுக்கு மேலும் அதிகரிக்கும். அது புவியின் இயற்கைச் சமநிலைப் பேணலை அடியோடு குழப்பி விடும் என நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

எது எவ்வாறாயினும் மனிதன் இயற்கைச் சூழலை வெற்றி கொண்டு அதன் எசமானாக அல்லது பங்காளியாக மாறப்பார்க்கிறான். மனித முயற்சிகள் அவனை அந்நிலைக்கு இட்டுச்செல்லலாம். ஆனாலும் இயற்கையின் இரகசியங்களைச் முழுவதும் புரிந்தவர் யார்?

ஓஸோன் படலத்தை பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த வகையில் கடந்த 16 ஆம் திகதி இந்தத் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# சோதனைகள்...

**- தாட்சாயணி -**

வித்யாபாலினி ஓர் அவஸ்தையை உணர்ந்தாள். அடி வயிற்றில் சின்னதாய் வலி. நெருக்கியடித்த சனங்களுக்கிடையே ஒற்றைக் கையை மேல் 'பாரி'லும், மற்றதை 'சீற்'றிலும் இறுகப் பற்றியபடி, ஓடிக்கொண்டிருக்கும் யாழ்ப்பாண வீதியை அர்த்தமற்ற வெறிப்புடனும், கை நழுவி விடக்கூடாதென்ற கவனத்துடனும் பார்த்தபடியிருந்தாள், நெற்றியில் ஒரு துளி வியர்வை துளிர்த்திருந்தது. இந்த பஸ்ஸிற்குள் சனங்கள் கூடத்தான் என்றாலும் வெளியில் வீசிய இதமான காற்றுக்கு யாருக்கும் நெற்றி வியர்க்கவில்லை.

சனங்கள் ஆரவாரமாய்க் கதைத்துக் கொண்டிருந்தார்கள் — அங்காலை ஏதோ பிரச்சினை நடந்துவிட்ட மாதிரி, ஒவ்வொரு 'செக்கிங் பொயின்ரிலும்' இனி இறங்கித்தான் போகவேண்டுமென்று.

ஒரு விஷயத்தில் பார்த்தால் இது நல்லது தான். முன்பென்றால் ஒரு இடமும் 'செக்கிங்' தொல்லை இல்லாத போது இப்படிப் 'பெரிய' பஸ்களும் இல்லை. குறைந்த காசில் போகவும் முடியாது. சின்ன மினிபஸ்களிலும், தட்டிவான்களிலும், மூச்சுவிடமுடியாதபடி சனங்களை அடைத்துக் கொண்டு செல்லும்போது, நெருக்கித் தள்ளி நிற்பவர்களுக்குக் கடைசி ஊரில் இறங்குகிற வரை நிம்மதியாக மூச்சு விடமுடியாது. ''ஏன் இப்படி அடைகிறான்'' என்று கண்டக்டர்களை மனதிற்குள் திட்டித் தீர்த்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான். அப்போதெல்லாம் இவள் போகிற அளவு தூரமே தானென்றாலும் நிறையப் பேர் கைதடியிலிருந்து, யாழ்ப்பாணம் வரை சைக்கிளில் போவதை அவள் கண்டிருக்கிறாள். பேசாமல் பட்டென்று பஸ்ஸை விட்டுக் குதித்து ஒரு சைக்கிளில் ''ஹா''வென்று காற்றை உள்வாங்கி உல்லாசமாய்ச் சென்றாலென்ன? களைப்பே தெரியாமல் நண்பிகளோடு போகலாம் என்று நினைத்தாலும் அப்போது வீட்டில் அதற்கு அனுமதி கிடைத்ததில்லை. (இப்போதும் கூடத்தான்) சைக்கிள் ஓட்டிச் சக்தியை வீணடித்தால் எப்படிப் படிப்பதாம்? இப்போது படித்தகாலம் போய் வேலைக்குப் போகிறபருவம். ஆனாலும் வேறு ஏதேதோ காரணங்கள் சொல்கிறார்கள். ஊரில் நடக்கிற விபரீதங்கள்.. ம்... எப்போதுதான் எல்லாவற்றுக்கும் விடிவு வருமோ?

இப்பவும்தான் பஸ்ஸைத் தாண்டிப் பல சைக்கிள்கள் போகின்றன. தெரிந்த முகங்களும் இருக்கின்றன. ஆனால் இப்போது பெண்பிள்ளைகள் முன்புபோல அதிக எண்ணிக்கையில் போவதாய்த் தெரியவில்லை. அப்படிச் செல்பவர்கள் கூட ஆண் துணையோடுதான் போகிறார்கள்.

பஸ் நின்றுவிட்டது. ''எல்லாரும் இறங்கிப் போங்கோ, இறங்கிப் போங்கோ...''— கண்டக்டரின் சத்தம் ஒரே தொனியில் கேட்டுக் கேட்டுப் பழகிப் போன ''ரேப் றெக்கோடர்'' மாதிரி ஒலிக்கிறது. ஆறுதலாய் ஒருதரம் காற்று வாங்கலாம். அவள் பார்க்கிறாள். எந்த இடம் இது?

''யாழ்நகர் வரவு நல்வரவாகுக'' வளைவுத்தூண் அலங்கரிக்கும் இடம். ''அப்பாடா கடைசிச் செக்கிங் தான்.'' மனதுக்குள் ஒரு ஆறுதல். நெருக்கித்தள்ளி இறங்குவதற்கு அவள் உடல் நிலை சீராய் இருக்கவில்லை. இடிப்பவர்கள் முதலில் இறங்கட்டும். கொஞ்சம் காத்திருந்தபோது இருக்கைகளில் இருந்தவர்கள் நிற்பவர்கள் இறங்குமுன் இடித்துப் புடைத்துக்கொண்டு எழுந்தார்கள். இவளுக்கு எரிச்சலாய்க் கிடந்தது. இருப்பானேன்? பிறகு இடித்துத் தள்ளுவானேன்? நிற்பவர்கள் இறங்கும் வரை காத்திருப்பதுதானே! என்று ஒரு கோபம் எழுந்தது. பின்னால் வருபவர்கள் தள்ளும் முன் கீழே இறங்கிவிட வேண்டும். சுள்ளென்று வயிற்றில் ஒரு முழங்கை இடித்தது. ''ஐயோ அம்மா...'' வாய் வரை வந்த வார்த்தைகளைக் கஷ்டப்பட்டு விழுங்கினாள். கீழ் உதட்டினை அழுத்திக் கடித்து வேதனையை அடக்கினாள். கொஞ்சம், கொஞ்சமாய் வேதனை அடங்கும் வரை காத்திருக்க முடியாது. இடித்தே விழுத்தி விடுவார்கள். கால் பெருவிரலுக்குள் சேலை மிதிபட்டது. காலை விலக்கிச் சேலையை ஒற்றைக் கையால் உயர்த்திப் பிடித்தபடி இறங்கி நடந்தாள். கால்களுக்கிடையே ஈரம் பிசுபிசுத்தது. மெதுவாய் நடந்த போது காற்று இதமாய்த் தடவிக் கொடுப்பது போலிருந்தது.

இவளுக்கு முன்னால் போன பெண்கள் ஆண் வரிசையில் இணைந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

பொம்பிளையளுக்கு அங்கால்ப்பக்கம் என்று இவையளுக்குத் தெரியாதோ? என்று யோசித்தபடியே தான் அந்தப்பக்கம் போகலாமோ? என்று நினைத்தாள். ஒரு பெண் சிப்பாய் தன் அரண் வாயிலில் நின்று இடுப்பில் கை வைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். வரச்சொன்னால் போவோம் என்று இவளும் ஆண் வரிசையில் இணைந்தாள்.

சட்டென்று அந்தப்பெண் சிப்பாய் சிங்களத்தில் கத்தினாள். கையைக் காட்டிக் கூப்பிட்டாள். திடீரென்று மிரண்டு போனார்கள் பெண்கள். ''அங்கால் பக்கமாப் போங்கோ'' என்று வித்யாபாலினி அவசரமாகச் சொல்லிவிட்டுத் தானும் அவர்கள் பின்னால் இணைந்து பெண்கள் பகுதிக்குப் போனாள். முதலில் ஆண்கள் பின்னாலேயே போன இரண்டு இளம் பெண்களை — அவர்கள் இன்று தான் புதிசாய் பஸ்ஸில் வந்திருக்க வேண்டும். நடைமுறை தெரியாதவர்களாய் இருந்தார்கள் — நிறுத்தி வைத்து அந்தச் சிப்பாய் வாய்க்கு வந்தபடி திட்டினாள்.

இவளது முறை வந்தபோது ஐ.சி. காட்டினாள். ஒன்றும் பேசாமல் விட்டுவிட்டான். மற்றவள் பொலீஸ். மேலிருந்து கீழே வரை ஒரு இடம் பாக்கியில்லாமல் தடவிக்கொண்டு வந்தாள். இவளுக்குச் சிலீரென்றது. முதல் முறை இப்படித் தடவும் போது கூச்சமாய், அருவெறுப்பாய்த்தானிருந்தது. பிறகு கொஞ்சநாளில் பழகிப்போனது. ஆனால் இந்த நிலையில் இதுதான் முதல் தடவை. மற்ற இடங்களில் ''ஐடென்ரிக்காட்'' பார்த்துவிட்டுத் தடவாமலே விட்டுவிட்டார்கள். அந்தப் பெண் பொலீஸ் இவளைத் தடவிக் கொண்டு வந்தவள் இடுப்புக்குக்கீழே தடவிவிட்டு கேள்விக் குறியோடு ''ம்...'' என்று முகத்தைச் சுருக்கியபடி அவளைப் பார்த்தாள். வித்யா சங்கடத்துடன் நெளிந்தாள். ''மெ...ன்சஸ்...'' திக்கியபடி சொன்னாள் அவள். அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை. போகச் சொல்லித் தலையாட்டினாள். இவள் ஒரு நிம்மதியோடு வெளியே வந்தாள். கொஞ்சநேரத்தில் கற்குவியலுக்கு அருகேயும், பிள்ளையார் வாசலுக்குப் பக்கத்தில் நின்ற மர நிழலின் கீழும் சனங்கள் காத்திருந்தார்கள். வெயிலாய்த்தான் கிடந்தது. என்றாலும் மரநிழலின் கீழ் போகாமல் கற்குவியலருகே நின்று கொண்டாள்.

''எங்களை அதாலை வரச் சொல்லியிருந்தால் அதாலை வந்திருப்பமே. கையைக் கட்டிப் பார்த்துக்கொண்டிருந்திட்டு இப்ப எங்களுக்குத் தான் பேச்சு...''

அங்கு நின்ற இளம் பெண்களிலொருத்தி - அழுகையுடனும் ஆத்திரத்துடனும் குமுறிக்கொண்டிருந்தாள்.

அதைப்பற்றியே சனங்கள் பிரலாபித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வாய்க்கு அவல் கிடைத்து விட்டது.

''அது ஏன் தெரியுமோ பிள்ளை —அப்படிப் பேசியவள், வடிவான பெட்டையளைத் தங்கட ஆம்பிளையள் திரும்பிப்பார்த்திடுவான்களோ எண்டு பயம். நீங்கள் அவன்களை மயக்கிப் போடுவீங்களோ வெண்டு...''

ஒரு கிழவி வாயை நெளித்து நெளித்துச் சொன்னாள். கூட்டம் 'கொல்'லென்று சிரித்தது. வித்தியாவின் அவஸ்தை குறைந்து முகத்தில் லேசாய் புன்னகை அரும்பியது. பேச்சு வாங்கியவள் மட்டும் முகத்தை ''உர்''ரென்று வைத்து இன்னும் திட்டிக்கொண்டிருந்தாள். ''பிசாசு'' என்று முணுமுணுத்தாள். கூட்டத்தின் சிரிப்பைக்கேட்டு சாவடிக்குள்ளிருந்த அந்தப் பெண் சிப்பாய் வெளியே வந்து எட்டிப்பார்த்தாள். அதற்குள் பஸ் நகர்ந்து அருகே வரவே சனங்கள் அடுத்த பிரச்சினையை எதிர்நோக்கி இடித்துத் தள்ளத் தொடங்கினார்கள். ஓடும் பஸ்ஸில் தாவியேறித் தம் திறமையை நிரூபித்துக் கொண்டார்கள். அவளால் இப்போது ஓடி இடம் பிடிக்க முடியவில்லை. இந்த நிலையில் ஒரு 'சீற்' கிடைத்து இருப்பதென்றால் அது உலக அதிசயம் தான். ஆனால் அது முடியாது. இத்தனை பேரோடு இடித்து ஏற ஏலாது. ஆனாலும் நிற்கும் இடமாவது வசதியாய்க் கிடைத்துவிட வேண்டும். யாருடைய முழங்கையும் இடிக்காமல், யாருடைய செருப்பும் கால்களை அழுத்தி மிதிக்காமல், எந்த ரோமியோவும் நெரிசலோடு, நெரிசலாய் உடம்பில் ஒட்டாமல் ஓர் இடம் கிடைத்தால் எவ்வளவு நல்லது. அதுவே போதும் இப்போதைக்கு. தற்செயலாய் திரும்பிப் பார்த்தாள். தூரத்தில் அந்தப் பெண் சிப்பாய் இன்னும் இங்கேயே கோபத்துடன் பார்ப்பதை உணர்ந்து அவள் திரும்பவும் கூப்பிட்டு விடக்கூடாதே என்ற எச்சரிக்கை உணர்வுடன் படக்கென்று வாசல் கம்பியைப் பற்றித் தொற்றிக்கொண்டு விட்டாள்.

ஒருமாதிரி மூலைக்கரையில் ஒதுக்கமாய்ப் போய்த் தனியிடம் பிடித்துக்கொண்டாள் (நிற்பதற்குத் தான்). நின்றபடியே வெளியே [illegible]டாள். சீற்றில் இடம் பிடித்தவர்கள் இந்த உலகத்துக் கவலையே இல்லாதவர்கள் போல் நிற்பவர்களை ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துவிட்டு தங்கள், தங்கள் பிரச்சினைகளை அருகில் உள்ளவர்களிடம் பகிரத் தொடங்கிவிட்டார்கள்.

வாசலில் கண்டக்டர் சொல்லிக்கொண்டான். ''மீசாலையிலே கிளைமோர் வெடிச்சதாம் ... நாலுபேர் செத்துப்போனாங்களாம்...''

''ஓ ...இதுக்குத் தானோ இந்த ஆரவாரம்'' மெல்லப் புதிர்விட ஆரம்பித்தது.

''புத்தூர் சந்தியிலை ஓர் இயக்கப்பெட்டையை கிரனைட்டோட பிடிச்சவங்களாம் ... பஞ்சாபியோடை திரிஞ்சவளாம்...''

இவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். பஸ்ஸில் யாரும் பஞ்சாபியில் இல்லை. நல்லவேளை இங்கே ஒருவரும் பிடிபடப் போவதில்லை. ஒரு மூச்சு நிம்மதி வந்தது. அந்தப் பிடிபட்ட பெண் யாராயிருக்குமென்று எல்லோரும் தலையும், வாலும் வைத்துக் கதைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

''நானும் ஒருநாள் கண்டனான்; அம்மன் கோயிலடியிலை ரெண்டுபேராத் திரிஞ்சவளவை...''

அவரவர் தத் தம் கற்பனைகளை விரித்துவிட்டார்கள். ''உஷ் பேசாதை; பொது இடம்...''

யாரோ மற்றவளை அடக்கினாள்.

வித்தியாவிக்குப் புதினமாக இருந்தது. ஒருவரை, ஒருவர் தெரியாதவர்கள் கூட இவ்வளவு நெருக்கமாய்க் கதைக்கிறார்கள். கதைப்பதற்கு விஷயம் இல்லையா என்ன? எங்கும் ஒரே பிரச்சினை தானே! வீட்டுக்கு வீடு வாசல்படி.

அவளுக்கு சுபாங்கியின் ஞாபகம் வந்து போனது. அப்பால் ஒரு காட்டில் இப்படித் தானே அவளும் திரிந்து கொண்டிருப்பாள். இனி எப்போது அவளைக் காணமுடியுமோ...?

இவ்வளவு நேரமும் பேசாதிருந்த ஒரு அம்மாள் சட்டென்று வாயைத் திறந்தாள்.

''சண்டை பிடிக்கிறதெண்டா எங்கையேனும் காட்டுக்கை நிண்டு பிடிக்கிறதுக்கு இஞ்சை சனம் இருக்கிற இடத்துக்கு ஏன் வருதுகள்...?''

எல்லோர் பார்வையும் அவள் மீது படிந்தது. சட்டென்று மௌனம். கொஞ்சநேரம் அவள் ஆத்திரம் தீரத் திட்டித் தீர்த்தாள். அவர்களைத்தான், இவர்களைத்தான் என்றில்லாமல் இரண்டு பக்கத்தையும் திட்டித் தீர்த்தாள். கண்களில் குளம் மிதந்து கொண்டிருந்தது.

அந்த அம்மாளின் மகனை ஒரு சுற்றிவளைப்பின் போது கொண்டுபோய் விட்டார்கள். அதற்குப் பின் எத்தனை பேரின் கையைக் காலைப் பிடித்துக் கெஞ்சியும் இன்னும் அவன் வீடுவரவில்லை.

அந்த அம்மாளை அடிக்கடி கலங்கிய கண்களுடன் கண்டது வித்தியாவுக்கு ஞாபகம் வந்தது. அந்த அம்மாளின் அனுதாபக் கதையைக் கேட்பதற்கு சனங்கள் கூடிக் கொண்டார்கள்.

வித்தியா தற்செயலாய்த் திரும்பிய போது இரண்டு மூன்று பேரின் பார்வை அவள் மீதுபடர்ந்து கொண்டிருந்தது. அவளுக்கு உள்ளே குளிர் பிடித்துக் கொண்டது. பீதியுற்றாள். இனம் புரியாத கலக்கம். என்ன...? ஏதும் அசம்பாவிதம் நடந்துவிட்டதா? சட்டென்று பின்புறச் சேலையைத் திரும்பிப் பார்க்கத் தோன்றியது: அவர்கள் பார்வையின் முன் அப்படிச் செய்யவும் பிடிக்கவில்லை. கவனிக்காதது போல் நின்று கொண்டாள். ஆனாலும் கண்கள் பயத்துடன் அவர்களைத் திரும்பிப் பார்த்தன. இவ்வளவு சன நெருசலுக்குள் தன் சேலை எப்படி அவர்கள் கண்ணிற்படும் என்று யோசிக்கிற அளவிற்கு அவள் நிலைமை இல்லை. சற்றுத் தள்ளி நின்றவன் சொன்னான் ''அக்கா உங்கட தலையிலை வைக்கல் தும்புகள் ஒட்டிக் கிடக்கு...''

''ஓ'' அவள் தன்பயத்துக்காக தானே வெக்கிய படி தலையில் கைவைத்துத்தடவி அந்த வைக்கோல் கற்றையைத் திரட்டிவெளியே எறிந்தாள். இது எப்போது என் தலையில் வந்தது என்று யோசித்தாள்.

முன்னுக்கு ஆரவாரம் தொடங்கியிருந்தது.

யாரோ சிறுமி 'சத்தி' எடுத்து விட்டதற்காக கண்டக்டர் சத்தம் போட்டு திட்டிக் கொண்டிருந்தான்.

இவளுக்கும் லேசாய் வாய்க்குள் உமிழ்நீர் ஊறத் தொடங்கிவிட்டது. ஐயோ! எடுத்துத் தொலைக்கும் போல் இருக்கிறதே! இந்த இடத்தில் எப்படிச் சரிக்கட்டுவது? ஆண்டவனே துணையிரு என்றுவேண்டிக் கொண்டாள். ஜன்னலால் எட்டிவீதியின் கரையில் துப்பப் பயமாயிருந்தது. யாராவது றோட்டில் போகிறவர் மேற் பட்டால் அதை விடப் பெரிய வினை வேண்டாம்.

திடீரென பஸ் வேறு பக்கம் திரும்பியது.

''என்னவாம்... என்னவாம்...'' சனங்கள் குசுகுசுத்தார்கள். ''மீசாலையிலையும் பிரச்சினையெண்டபடியால் இப்ப நாவற்குழியிலையும் செக்கிங்காம்...!''

''கடவுளே இனிப் பனை மட்டும் எத்தினை இடத்தை ஏறி இறங்க வேணும்'' ஒரு பெண் அலுத்துக் கொண்டாள்.

இவளுக்கு இதுதான் கடைசி ''செக்கிங் பொயின்ற்''. அப்பாடா என்ற நிம்மதி இருந்தது. இறங்கியவுடன் பளீரென்று கரையோரமாய்ப் போய்த் துப்பிவிட்டு வந்தாள். வரிசையில் இணைந்து கொண்டாள். மறுபடியும் ஒரு பயம் எட்டிப்பார்த்தது. என்ன கேட்கப் போகிறார்களோ? வேலைக்குப் போய் அலுங்கிக் களைத்த முகமும் தொய்ந்த உடலுமாய் அவள் களைத்திருந்தாள். மிக மெதுவாய் கியூ நகர்ந்து கொண்டிருந்தது. சற்றுத் தள்ளி மாட்டு வண்டிகள் நிறையக்கொண்டு வந்திருந்த பொச்சு மட்டைகள் முழுவதையும் ஒவ்வொன்றாய் எடுத்து நிலத்தில் போட்டுக் கொண்டிருந்தான் ஒரு சிறு பையன். அவ்வளவு சுமையை ஏற்றதற்கான பயமும், வேதனையும் அவன் முகமெங்கும் அப்பிக்கிடந்தது. எதிரே நின்ற ஓர் இராணுவ வீரன் மேற்பார்வை செய்துகொண்டிருந்தான். இவர்கள் பஸ்ஸுக்கு முன்னால் கார்களும், மோட்டார் சைக்கிள்களும் ஒவ்வொன்றாய் நிறுத்தப்பட்டு நகர்ந்து கொண்டிருந்தன. பாழடைந்து கிடந்த பெரிய சுவரில் புதிதாய்க் கிறுக்கப்பட்ட சிங்கள எழுத்துக்கள் தெரிந்தன. முன்னே பல பேர் போய் விட்டார்கள். இவள் வரிசைக்குள் தன் ஒழுங்கு மாறாமல் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டாள். தகரத் துண்டுகளால் அடைக்கப்பட்டிருந்த சாவடிக்குள் நுழைந்து ஒவ்வொருவராய் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். தன் முறை வந்ததும், இவள் கைப்பையைத் திறந்து காட்டி.

( X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் மனோவலிமை மூலம் துப்பறியும் பெண்மணி!

**கொலைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட கொலைகாரர்களை — வேறு தடயமின்றி — தனது மனோவலிமை மூலம் மட்டும் — கண்டறியும் திறமை படைத்த ஒரு பெண்மணி குறித்து சில ஆண்டுகளுக்கு முன்னர் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்தது. அப்போது வெளியான இத்தகவல்கள் இங்கே பிரசுரமாகின்றன.**

லியோனெட்டா ஷில்லிங் என்ற அமெரிக்கப் பெண்மணி மெரிலாண்டில் உள்ள தனது வீட்டில் சமையலறைக் கத்தியால் பதினொரு முறை பயங்கரமாகக் குத்திக் கொலை செய்யப்பட்டார். அமெரிக்கப் பொலீஸாருக்கு பெரிய சவாலை ஏற்படுத்திய கொலைச் சம்பவம் இது.

கொலைகாரன் புத்திசாலித்தனமாக எந்தத் தடயத்தையும் விட்டு வைக்கவில்லை.

## நான்ஸி மேயர்

உடனே பொலீஸார் ஓஹியோ மாநிலத்தைச் சேர்ந்த நான்ஸி மேயரின் உதவியை நாடினார்கள்.

நான்ஸி மேயர் மூன்று குழந்தைகளுக்குத் தாய். 48 வயதான சாதாரணக் குடும்பத் தலைவி.

அமெரிக்கப் பொலீஸாருக்கு, பெரும் சவாலாக இருந்த — பெரிய பெரிய துப்பறியும் நிபுணர்களால் கூடக் கண்டு பிடிக்க முடியாத — கொலை வழக்குகளை, விவகாரங்களை, தன் அபார மனோவலிமையால் கண்டு பிடித்துச் சாதனை புரிந்திருப்பவர் நான்ஸி மேயர். இவ்வாறு இவர் கண்டு பிடித்து அம்பலப்படுத்திய கொலை விவகாரங்கள் இருபதுக்கும் அதிகம்.

## போட்டோவே போதும்

கொலை செய்யப்பட்ட லியோனெட்டா ஷில்லிங்கின் ஒரு போட்டோ மற்றும் அந்தப் பிரதேசத்தின் வரைபடம் ஒன்று ஆகியவை மட்டும் நான்ஸியிடம் கொடுக்கப்பட்டது.

கொலை நடந்த இடத்துக்கு வந்து கண்களை மூடிக்கொண்டு மனதைத் தீவிரமாய் ஒருநிலைப்படுத்தினார் நான்ஸி. அவரது விரல்கள் லேசாக போட்டோவை வருட, நான்ஸியின் மனத்திரையில் நேரில் டி. வி. பார்ப்பதுபோல் காட்சிகள் தெளிவாக ஓடின.

லியோனெட்டாவின் வீட்டுக்கு ஒரு வாலியன் வருவதும் பணம் கேட்பதுமாக இருந்தான். அவர் பணம் கொடுக்க மறுக்கவே, வாக்குவாதம் முற்றி, கண்ணிமைக்கும் நேரத்தில் சரேலென்று அந்த ஆள் சமையலறைக் கத்தியை எடுத்து 'சதக்... சதக்...!' என்று குத்தினான்.

விநோதமான தன் மனநிலையிலிருந்து விடுபட்டுச் சாதாரண நிலைக்கு வந்த நான்ஸி, ஆவலாய் காத்துக் கொண்டிருந்த பொலீஸ் அதிகாரிக்கு 'க்ளு' கொடுத்தார். அவர் குறிப்பெடுத்துக் கொண்டார்.

''கொலையாளி — இளம் வாலிபன்... லியோனெட்டாவுக்கு நெருங்கிய உறவு, போதைமருந்துக்கு அடிமையானவன். பணத்துக்காக லியோனெட்டாவை அடிக்கடி தொந்தரவு செய்ய... அவர் கோடுக்க மறுத்ததனால் ஆத்திரத்தில் கொலை செய்திருக்கிறான்...'

இது நான்ஸி கொடுத்த தகவல்.

லியோனெட்டாவுக்கு நெருங்கிய சொந்தக்காரனான கிவெஷ்ஃபிங்கை ஒரு வாரத்தில் அமெரிக்க பொலீஸ் கைது செய்தது. நான்ஸி சொன்ன தகவல்களையே நீதிமன்றத்தில் தன் வாக்குமூலத்திலும் அவன் கூறினான்!

## சிறுவயது முதலே அபாரசக்தி

நான்ஸிக்கு இந்த அபார சக்தி தனக்குள் சிறுவயதில் இருந்தே இருந்தது வெகு நாள்களுக்கு தெரியாது. அவருடைய அப்பா மனநல நிபுணராக இருந்தும் அவரால் தன் மகளுக்கு அப்படி ஓர் அபூர்வ சக்தி இருந்ததைக் கண்டு பிடிக்க முடியவில்லை. நான்ஸி சிறுவயதில் அவர் தந்தையோடு பல வெளி நாடுகளுக்குப் போயிருக்கிறார். ஒருமுறை மருத்துவ சம்பந்தப்பட்ட ஒரு மாநாட்டில் கலந்து கொள்ள பிரேஸிலுக்குச் சென்றிருந்தார். அங்கு ஒருவர் போர்ச்சுக்கீசிய மொழியில் பேசிக்கொண்டிருக்கும்போது அந்த மொழி தெரியாத நான்ஸி அந்த மனிதரின் கண்களையே உற்று நோக்கியிருக்கிறார். அந்தப் பேச்சின் அர்த்தம் நான்ஸியின் மனதில் தெளிவாகப் புரிந்ததாம்!

## கொலைகாரர்களை அம்பலப்படுத்திய திறமை

அதற்குப் பிறகு தன் மனதை ஒருநிலைப்படுத்தி, தன் விநோத சக்தியைக் கையாளக் கற்றுக்கொண்ட நான்ஸி, மனோதத்துவத்தில் நாட்டம் கொண்டு தியானம் உள்ளுணர்வு ஆகியவற்றில் வகுப்புகளும் கருத்தரங்குகளும் நடத்த ஆரம்பித்தார்.

அப்போது ஒரு முறை இவரது கருத்தரங்குக்கு வந்திருந்த உயர் பொலீஸ் அதிகாரி கேணல் இர்வின் ஸ்மித்துக்கு கண்டுபிடிக்க முடியாத சில வழக்குகளில் துப்பறியும் நிபுணர்களுக்கு இவருடைய அற்புத சக்தியை உபயோகப்படுத்தலாமே என்ற யோசனை தோன்றியது.

## ஆரம்பத்தில் போலி என்றனர்

ஆரம்ப நாள்களில் துப்பறியும் நிபுணர் லீராய் லேண்டன் தன் வழக்கில்—

நான்ஸியை உபயோகப்படுத்தியபோது சக அதிகாரிகள் அவரைச் சரியான பைத்தியம் என்றார்கள். FBI ஏஜெண்ட் பால்பெல் 'சுத்த போலி' என்று நான்ஸியை வர்ணித்து, தன்னுடைய அடுத்த பெரிய வழக்கு என்னவென்று சொல்ல முடியுமா என்று சவால் விட்டார்.

நான்ஸி சிறிது நேரம் கண்களை மூடி மனதை ஒரு நிலைப்படுத்தி, ''என் கண் முன்று பல ஆண் — பெண் மற்றும் குழந்தைகளின் நூற்றுக்கும் மேற்பட்ட சடலங்கள் தெரிகின்றன. ஆனால் யாரும் பலவந்தத்தாலோ ரத்தக் காயத்தாலோ சாகவில்லை. எல்லா சாவுகளுக்கும் ஒரு மனிதனே காரணம்... இதுதான் உங்கள் அடுத்த வழக்கு'' என்றார். சரியாக ஒரு வருடம் கழித்து 1978 இல் நான்ஸிக்கு FBI ஏஜெண்ட் பால்பெல்லிடமிருந்து போன் வந்தது.

''உங்களைத் தவறாகக் குறைத்து மதிப்பிட்டுவிட்டேன். மன்னிக்கவும்... கயானாவில் வண. ஜிம் ஜோன்ஸ் எல்லோரையும் பரலோகம் அழைத்துப் போவதாகச் சொல்லித் தன் நானூறு சீடர்களையும் குழந்தைகளையும் சயனைட் கொடுத்துக் கொன்ற வழக்கில் தற்போது நான் வேலை செய்து கொண்டு இருக்கிறேன்...''

அதிலிருந்து நான்ஸியைப் பற்றிய கேலிகளும் விமர்சனங்களும் நின்றுபோயின.

## மயங்கி விழுந்தார்

ஒரு முறை துப்பறியும் நிபுணர் லீராய் லேண்டன் ஒரு கொலைவழக்கைத் துப்பறிய நான்ஸியை காரில் அழைத்துப் போகும்போது திடீரென்று நான்ஸி மயங்கி விழுந்தார். பின்பு சுய நினைவுக்கு வந்ததும் இரண்டு பயங்கரமான கொலைகாரர்கள் இருக்கும் வீட்டை தான் இருந்த கார் கடந்து வந்தபோது தீய எண்ண அலைகளால் தன் சக்தி முழுவதும் இழந்து விட்டதைப் போல் உணர்ந்ததாகக் கூறினார். எதிர்பாராத விதமாகக் கிடைத்த அந்தத் தகவலின்படி இரண்டு படுபயங்கரக் கொலைகாரர்களைப் பிடித்து, நெடுநாள்களாகக் கண்டுபிடிக்கப்படாமல் இருந்த பல தொடர் கொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தார் லீராய் லேண்டன்.

## காணாமற் போன நபர்களையும் கண்டுபிடித்தார்

நான்ஸி—கொலைக் கேஸுகளை மட்டுமல்லாமல் மர்மமான முறையில் காணாமல் போன பலரைக் கண்டுபிடித்துமிருக்கின்றார். 21 வயதான மைக்கேல் ஓர் இடத்தில் காரை வனாந்திரமாக நிறுத்திவிட்டுக் காணாமல் போனபோது அவன் தந்தை நான்ஸியின் உதவியை நாட... மைக்கேலின் போட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு மனதைத் தீவிரமாய் ஒருநிலைப்படுத்தினார் நான்ஸி. மனத்திரையில் மைக்கேலின் உடல் சிதைவுகள் கிடக்கும் இடம் தோன்றியது. பின்னணியில் ஒரு சிறிய குன்றும் டி. வி. டவர் ஒன்றும் வீணாகப் போடப்பட்ட எண்ணெய் டிரம்களும் தெரிந்தன.

1992 இல் மைக்கேலின் கபால ஓடும் கிழிந்த உடைகளும் பூட்ஸும் அவர் சொன்ன அதே இடத்தில் ஒரு குன்றின் அடிவாரத்தில் கண்டெடுக்கப்பட்டன! ஆனால் மைக்கேலின் மரணத்துக்கான காரணத்தை நான்ஸியால் சொல்ல முடியவில்லை.

## நான்ஸியின் பயம்

நான்ஸிக்குள் எப்போதும் ஒரு பயம் உண்டாம். 'வயதாகிப் போனால் கண் பார்வை மங்கிவிடுவது போல் என்னிடமிருந்து இந்தச் சக்தி ஒருவேளை போய்விடுமோ' என்பதுதான் அந்தப் பயம். இதுவரை இந்த அற்புதசக்தி எப்படி வேலை செய்கிறது என்று தன்னாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை என்கிறார் நான்ஸி. மூளையில் உள்ள செல்களில் சிறிய சிறிய அறைகளில் இந்தச் செய்திகள் சேமிக்கப்பட்டு ஏதோ ஒரு வகையில் தான் வெளியே கொண்டுவருவதாக உணர்கிறார். ஒருவேளை இந்தச் சக்தி தன்னைப் போல் எல்லா மனிதர்களிடமும் ஒளிந்திருக்கலாம். முயற்சித்தால் எல்லோராலும் இது முடியக்கூடும் என்று நம்புகிறார்.

ஒருமுறை துப்பறிவாளர் ஒருவர், குதிரைப் பந்தயத்தில் ஜெயிக்கப்போகும் குதிரையை நான்ஸியிடம் கேட்டு அதில் பணம் கட்டினார். 'ஜாக்பாட்டில்' திடீரென கோடீஸ்வராகி விட்டார் அந்த நபர். அவர் நான்ஸிக்கு பெரிய தொகையை அன்பளிப்பாகக் கொடுக்க... வாங்க மறுத்துவிட்டார் நான்ஸி.

இதைப்போல் நிறையப் பேர் ஏராளமான பணம் கொடுத்து இவரைத் தங்கள் வழிக்குப் பயன்படுத்த முயற்சிக்க... நான்ஸி என்றுமே தன் அற்புத சக்தியை துஷ்பிரயோகப்படுத்தவில்லை.

''ஆண்டவன் எனக்குக் கொடுத்த மகத்தான பரிசைக் கேவலம் பணத்துக்காக விற்றுப் பிழைப்பு நடத்த நான் விரும்பவில்லை... ஒரு தொடர் கொலைகாரன் அடுத்த கொலையைச் செய்யாமல் தடுத்துப் பல உயிர்கள் என்னால் காப்பாற்றப்படும் போதும்—தொலைந்து விட்ட குழந்தை மீண்டும் கிடைக்கும் போது — பெற்றோர்கள் அடையும் ஆனந்தத்தைக் காணும்போதும் — நான் மிகுந்த ஆத்மதிருப்தி அடைகிறேன்'' — என்றார் நான்ஸி.

துப்பறியும் நிபுணர்களாலும் கூடக் கண்டுபிடிக்க முடியாதவற்றை நான்ஸி நொடிப் பொழுதில் தனது அபரிமிதமான இந்தச் சக்தியினால் கண்டு பிடிப்பது துப்புத்துலக்கும் வழக்கறிஞர் மத்தியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விஞ்ஞானத்தின் மூலம் பல விந்தைகள் புரியும் இன்றைய மகோன்னதமான உலகில் எவராலுமே கண்டுபிடிக்க முடியாத கொலைகாரர்களைக் கூடக்கண்டு கொள்ள இந்த சக்திவழிகோலியுள்ளது.

நான்ஸி இதனால் பெருமையோ அகங்காரமோ கொள்ளவில்லை. நெடு நாள்களாகக் கண்டு பிடிக்கப்படாமலிருந்த பல தொடர்ச்சியான கொலைகளுக்கு தன்னுடைய இந்த அபூர்வ சக்தியின் மூலம் முற்றுத் தரிப்பு வைக்கப்படுவதை எண்ணி மனதில் மகிழ்ச்சி கொண்டார்.

எதிர் காலத்தில் நடக்கப் போவதையும் முன்னர் நடந்தவற்றையும் எந்த விதமான தடயங்களோ, சாட்சிகளோ இல்லாமல் கண்களை மூடியபடியே கண்டு பிடிக்கும் இந்த அபார சக்தி நான்ஸிக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்துள்ளது என்று கூறின் மிகையாகாது. ★

## விருத்தத்தில் என் வ...

அந்தோ! எம் சோதரரே வன்னி மக்கா...
அனைவர்க்கும் நெல்மூட்டை அளி...
உந்தியிலே பசித்தீயா? உலகத் தாரும்...
ஊமைகளாய் நின்றாரா? ஊரை வி...
வந்தோமே நாமன்று வன்னிக் கென்று...
வாருங்கள் என்றெம்மை வாரிச் செ...
பந்திவைத்துப் பசிபோக்கிப் பார்த்த நீ...
பசிக்குதென்றா கையேந்தி நின்றீ ...

அட்சயபாத் திரத்திற்கே பசிக்கும் வேளை...
ஆண்டவனே பார்த்தாநீ நின்றாய்...
கட்டிலுக்கு மரந்தந்த மக்கள் பாரும்...
கட்டாந் தரைமீது கிடந்தார் யாரு...
எட்டியும்மைப் பார்க்கவில்லை உங்கள்...
எருமைக்குப் பஞ்சமென்றா?! காலன்...
விட்டுவிட்டான் தன்னெருமை இதனைப்...
வீண்சாக்கு வீண்சாக்குப் பல செ...

வயலெங்கும் எலும்போடு தசையின் நா...
வாழ்வளித்த கடல்மீதும் நிற்கும்...
அயலெங்கும் ஷெல்மாரி கிபிரின் சீற்றம்...
அம்மாபரல் எனமழலை பசித்துக்...
முயல்போல ஆங்காங்கே குழிகள் தோ...
முடங்கித்தான் வாழ்ந்தாலும் பிறை...
செயலற்று வாழ்வதிலும் சீறும் நாகம்...
செறிந்துள்ள காட்டினிலே சிறப்புக்...

முண்டாசுக் கட்டொன்று முறைத்த பா...
முறுகிவிட்ட உடலிலிருந்து வடியும்...
துண்டொன்று தோளில்; ஏர்பிடித்த கா...
துணிவுக்குத் துணிந்த மானம் பே...
பண்டார வன்னியனுன் கொள்ளுப் ...
பறங்கிக்கு கொள்ளிவைத்த வன்னி...
கண்டரவனை மண்போல் குவித்தீர் நெ...
கவனச்சோ றின்றில்லை இதுயார்...

பனடோலும் பத்துருபா வாங்கிப் போட...
படுசுத்த நீரில்லை சேறும் கூட...
கனவில்லை காரணமோ தூக்கம் இல்ல...
கண்ணயர்ந்தால் யாரனைக்கு காவ...
உணவில்லை உயிர்கூட இன்றும் உ...
உடலுக்குச் சொந்தமில்லை உம்ம...
மண்மில்லை உலகுக்கு; மறதி இல்லை,...
மனச்சாட்சி இன்றிந்த மனிதர்க் கி...

அலையோடு கரைசெய்யும் பேரிற் சிக்...
அகப்பட்ட குச்சிகளாய் கட்டில்...
தலைமீது கைவைத்து நின்றீர் இன்று...
தரைப்பாதை திறப்புக்குப் பாலம்...
தலையற்ற உடல்தானா? தமிழர் என்ற...
தனிப்பெயரைக் கொண்டார்க்கிறைவ...
விலையென்ன ஷெல்துண்டுச் சிதறல் தா...
விதியிங்கு எழுதுபவன் பிரம்மன்...

-ச. முகு...

## மாற்றம்

அந்தநாள் என் நெஞ்சம் மறக்குமா...
அக்கணத்தின் அவலமும் அச்சமும்...
சிந்தையுள் கொடுஞ் சிற்பமாய் நிற்...
திடுமென அது தேயுமா? இல்லையா...
இந்த வீதிதான்...ஆம் இதே வீதிதான்...
இன்றும் போல் விழா அன்றும் நடந்...
வந்து சுற்றின 'வானக் கழுகுகள்';...
வரிசை வரிசையாய் ஐந்தாறு 'தும்பி...

சாமி தூக்கி உள் வீதியைச் சுற்றை...
தரை தகர்வதாய்ச் சத்தம் எழுந்தது...
பூமி ஓர் கணம் ஆடி அதிர்ந்தது;
புகை அயலினை மூடிக்கவிந்தது;
''சாமியே துணை'' வாய்கள் இறை...
தட தடவென 'பவனி' விரைந்தது.
மாமரத்தடிப் பக்கமாய்...விண்ணோக்...
மழை எழுந்ததாய் வெடிகள் முழங்கி...

கொம்பு காவி நான் அண்ணாந்து
நோக்கி...
கூதலற்றும்...நடுங்கிய வானிலே
ஐந்து 'யந்திரச் சக்கர வாகங்கள்'
ஆரோகணித்தன! சிவப்பு விளக்குக...
மின்ன மீண்டும் இரையினைத் தேடி...
பண்ணைப் பக்கம் விரைந்தன! சா...
கொண்டு சேர்க்குமுன் கூட்டம் கலை...
குருதிச் சொட்டு 'பின்றோட்டை' நிலை...

இந்த வீதிதான், ஆம் இதே வீதிதான்...
அன்றும் போல் விழா இன்றும் நடந்...
குண்டு பீச்சிய பட்சியும் வந்தது.
கூடை கூடையாய்ப் பூக்களைக் கொ...
இன்று சாமியைத் தூக்கி நடக்கையி...
பட்சி தூவிய செம்மலர்......வீதியில்
புன்னகைத்தது! வாய்கள் ரசித்தன.
புழுதி மண்கூட மெல்லச் சிரித்தது!

-அருண...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...என் வருத்தம்

...வன்னி மக்காள்
...ல்மூட்டை அளித்த உங்கள்
...உலகத் தாரும்
...ரரா? ஊரை விட்டு
...ன்னிக் கென்று
...மை வாரிச் சென்று
...கிப் பார்த்த நீங்கள்
...யேந்தி நின்றீ ரய்யோ?

...பசிக்கும் வேளை
...தாநீ நின்றாய் கோழை
...மக்கள் பாரும்
...கிடந்தார் யாரும்
...ல்லை உங்கள் காட்டில்
...ன்றா?! காலன் நொந்து
...மை இதனைப் போல
...க்குப் பல சொன்னீர்.

...டு தசையின் நாற்றம்
...தும் நிற்கும் கூற்றம்
...கிபிரின் சீற்றம்
...லை பசித்துக் கேட்கும்
...க குழிகள் தோண்டி
...ந்தாலும் பிறரை வேண்டி
...சீறும் நாகம்
...னிலே சிறப்புக் கண்டீர்.

...முறைத்த பார்வை
...ிருந்து வடியும் வேர்வை
...ஏர்பிடித்த காளை
...ந்த மானப் பேழை
...கொள்ளுப் பாட்டன்
...வைத்த வன்னிக் காட்டான்
...குவித்தீர் நெல்லை
...லை இதுயார் கொள்ளை?

...வாங்கிப் போடப்
...சேறும் கூட
...தூக்கம் இல்லை
...னைக்கு காவல் இல்லை.
...இன்றும் உங்கள்
...ில்லை உம்மைப் பார்க்க
...மறதி இல்லை;
...த மனிதர்க் கில்லை.

...ம் போரிற் சிக்கி
...ய் காட்டில் விக்கித்
...ன்றீர் இன்று
...க்குப் பாலம் உங்கள்
...தமிழர் என்ற
...ண்டார்க்கிறைவன் வைத்த
...ிச் சிதறல் தானா?
...ன் பிரம்மன் தானா?

-ச. முகுந்தன்-

## ...ம்

...மறக்குமா?
...அச்சமும்
...மாய் நிற்குதே...
...இல்லையாம்!
...த விதிதான்.
...ன்றும் நடந்ததாம்.
...கழுகுகள்';
...று 'தும்பிகள்'.

...ச் சுற்றையில்
...எழுந்தது;
...ர்ந்தது;
...விந்தது;
...கள் இறைஞ்சிடத்
...ரைந்தது.
...ண்ணோக்கி
...ள் முழங்கின.

...ணார்ந்து
...நோக்கினேன்.
...னிலே
...ாகங்கள்'
...விளக்குகள்
...னைத் தேடின!
...ந்தன! சாமியைக்
...ட்டம் கலைந்தது.
...ட்டை' நிறைத்தது.

...விதிதான்.
...ன்றும் நடந்ததாம்.
...வந்தது.
...ளைக் கொட்டிற்று.
...நடக்கையில்
...வீதியில்
...ரசித்தன.
...சிரித்தது!

-அருணன்-

## கவிதை

வார்த்தைகளில் அழகு!
வரிகளிலே மெருகு!
கோர்க்கும் நடைதனிலே
குழைவு!
மரபுக் கவிதையே!
நான் உன்னை
நேசிக்கிறேன்.
உன்னைத் தருபவனே
உண்மைக் கவிஞன்.
உன்னாலே தான்
தமிழ் வாழ்கிறது.
எனினும்,
பாக்கள்
பண்டிதர்க்கு
மட்டுமல்ல,
பாமரர்க்கும்
புரிவதாகப்
படைக்கப்படல்
வேண்டும்.
அந்த வகையிலே,
புதுக்கவிதையையும்
போற்றுகின்றேன்.

-உடுவில் அரவிந்தன்-

## விதி

காலத்தின்
வேகத்தில்
கடின உழைப்பின்றி
சோம்பலின்
குகைக்குள்
குறட்டை விட்டவன்
தன் — தோல்விக்கு
தோஷம் நீக்க
செய்யும் பூசையில்
சொல்லும்
மந்திரத்தின்
பெயர் — விதி.

—என். விஜயசுந்தரம்—

## ஊரடங்குச் சட்டம்

கதிரவன் மறைவினில்
நம் மண்ணில்
உதயமாகும்
செயற்கைக் கோள்.
உயிரைக் காக்கவென
உலகெல்லாம் ஓதிவிட்டு
செய்து விடப்பட்ட
ஊரடக்கும்
செயற்கைக் கோள்.

மனிதர்க்கு மட்டுமல்ல
நாய்க்கும் நடு நிசி
கட்டுண்ட வாழ்வு.
காலம் மீறினால்
கனத்த வேட்டுக்கள்
கலகலக்கும்.
காகம் கருக்குருவி
யாவுமே விலக்கல்ல.

ஊரடங்கும் வேளை
செயற்கைக் கோள்
எடுத்த படம்
மீண்டும்
''உதயன்'' வரவினில்
வெளியாகும்.

ஈன்றவள்
இரத்தப் போக்கில்
இறந்த செய்தி ......
இதயத்தின் அடைப்பில்
இறுதி மூச்சு விட்ட
சோகங்கள்......

இன்னும் எத்தனை...
வைத்தியத்தின்
வாசல் எட்ட
ஊரடங்கு
கனத்த நேரம்.

உயிரைக் காக்க
விடுத்த — செயற்கை
ஊரங்குச் சட்டம்.

—நல்லை. விஜயன்—

## புதுமைப் பெண்

பாப் முடி...
லிப்ஸ்டிக் உதடு...
ஜீன்ஸ், டி ஷர்ட்...
போதை விழிகள்...
கசியும் புன்னகை...
புகையும் சிகரெட்...
குதிகால் செருப்பு...
தமிழிங்லீஷ்
பாரதியின் புதுமைப்
பெண்ணைக் கொன்ற
நவீன தமிழ்ப் பெண்!

- தமிழக சஞ்சிகை ஒன்றிலிருந்து -

## மரணம்!

மரணத்தை நான்
நேசிக்கிறேன்.

அது இயல்பாக வருமென்றால் ...

ஒரு மலரில் தெரியும் பூந்துகளாய் ...
வானுரசி வீசும்
மெலிந்த மேகமாய் ...
சொட் டென்று விழும்
முதலாவது மழைத்துளி
மணலோடு கரைவுறுதலாய் ...

இயல்பாய் வரும் மரணமெனில்
அதை நான் நேசிக்கிறேன்!

மரணத்தை நான் வெறுக்கிறேன்.
சம்மதமில்லாமலே
புணரப் பார்க்கிற காமுகனாய் ...
வெடிமருந்தின் கரிய நெடியாய் ...
சூடான குருதித் துளியில்
தன் தாகம் தீர்க்கும்
நரவேட்டைக் காரனாய் ......

வரும் குரூரமான மரணத்தை
நான் வெறுக்கிறேன்.

- தாட்சாயணி -

## மௌனக் குமுறல்!

வெடிமுழக்கம்
கேட்கும்
நொடி சுணக்கம்
இன்றி
குடி இழக்கும்
வாழ்வு
மிடி கொடுக்கும்.
இடம் பெயர்வில் கழியுதடா பகலிரவு —
தமிழ்
இனத்திற்குச் சொந்தமடா நல்குரவு!

கண்பட்டதே
நெஞ்சு
புண்பட்டதே
குருதி
மண் தொட்டதே
சோகம்
விண்முட்டுதே
பழுத்த பின்தான் குருத்துக்களும் மரணம்—
எங்கள்
பல்லவியும் ஆகியதேன் சரணம்?

இரவும் வரும்
நல்ல
யுரமும் வரும்
கொடிய
அரவும் வரும்
தாய்மை
வரவும் வரும்
ஊரடங்கில் வேகிறதே வாழ்க்கை பரிதி
உதித்தவுடன் பிணவறையில் யாக்கை!

மாலை இடை
பூவாய்
சாலைத் தடை
நிற்கும்
வேலைப் படை
தருமோ
நாளை விடை
உயிரினையும் சுட்டெரிக்கிறதே கேள்வி—
நெஞ்சில்
ஊமையாய் நிகழ்கிறதோர் வேள்வி.

போர் கொல்லுமா
இல்லை
பார் வெல்லுமா
தமிழ்
தேர் செல்லுமா
இனிமை
ஊர் மெல்லுமா?

எனத் தூளியிலே ஆடுந்துள்ளி ஆசை—அதை
எடுத்துரைக்க மௌனந்தான் பாஷை!

உச்சிற்கிழான்-

**கவிதை முற்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியம் வென்றிடும்

இன்றெங்கள் தேசம்
இருண்டு கிடக்கிறது.
சென்றிகள் எங்கும்
செறிந்து விளங்கிறது.
சென்ற வழி யெலாம்
தடைகளே தோன்றுது.
நின்ற நிழல் தரும்
மரங்களும் மறைந்தன.

பச்சைப் பசேலென
விளங்கிய வயல்கள்
பிச்சைக் காரர் போல்
வெறுமையின் இருப்பிடம்.
உச்சமான பனந்
தோப்புகள் மறைந்து
கச்சை அவிழ்ந்த
வெளியெனத் தோன்றும்.

ஊரடங்கு நேரம்
ஊளையிடும் நாய்கள்
மாரடைப்பு மகப் பேறு
மருந்தகம் செல் வழியில்லை.
பேரரவு தீண்டின்
பின்பென்ன வழியுண்டு?
சேர வரும் உறவினரும்
சேர்ந்திருக்க முடியாது.

அயலவர் உறவினர்
அரிதாகிப் போயினர்.
சுய தொழி லற்றோர்
தொகையாய்ப் பெருகினர்.
பயனுடை வாழ்வினை
எது விதம் காண்பர்.
உயர்வுக்கு வழிதர
ஒருவனின் துணைவரும்.

போருக்கு வந்த
துப்பாக்கி எல்லாம்
ஊருக்குள் வந்து
உயிரையும் வாங்கும்,
நேருக்கு நேராகக்
கண்ட அவலங்கள்
யாருக்குத் தெரியுமோ!
யாரறி வார்கள்?

பண்டுநம் பெருமையைப்
பேசியோர் பலருண்டு.
தொண்டுகள் புரிந்திட
வந்தோரும் உண்டு.
கண்டு நம் நிலையைக்
காசினிக் கெல்லாம்
விண்டவர் உண்டு;
விடிவுதான் இல்லை.

புத்தரின் போதனை
நித்தமும் பேசுவர்.
யுத்தத்தை நிறுத்திட
எத்தனம் அவர்க்கிலை.
பித்தமும் தெளிந்திடின்
சித்தமும் மாறிடும்,
சத்தியம் வென்றிடும்
காலமும் வந்திடும்.

"அளவை வே. ஆ."

## எல்லாமே வேடங்கள்

எல்லாமே வே ங்கள்;
காட்டிடுவார் போலிப்பாசங்கள்.
பணம் இருக்கு மென்றாலோ
பல்லக்கில் ஏற்றிடுவார்;
கணப் பொழுதுமே
கண் கலங்க விடமாட்டார்.
குணமற்ற துட்டனையும்
கும்பிட்டு மதித்திடுவார்.
துட்டு இல்லை என்றால்...
தூய மனிதனையும்
தூசெனவே மிதித்திடுவார்.
அவர் நல்மனங்களையும்
காலாலே உதைத்திடுவார்.
இல்லத்து நல்லாளும்
பணம் என்றால் பல்லிளிப்பாள்;
ஈட்டுகின்ற செல்வம்
குறை வென்றால் முணு முணுப்பாள்.
பாயிலே படுத்து விட்டால்
துடிப்பது போல நடிப்பாள்.
பாடையிலே சென்று விட்டால்
ஒப்பனைக்குக் கத்திடுவாள்.
உறவென்ற உணர்வுகளின்
முதலாளி பணம் தானே!
ஊரறிய அவர்தானே
பெரு மனிதர் நம்மிடையே.
பணம் என்றால்
பிணமும் வாய் திறக்கும்.
பார் மீதும் நடக்கின்ற
பகற் கொள்ளை இதுதானே!
சத்தியமும் இவனிடத்தில்
சறுக்கியே விழுந்து விடும்.
அசத்தியம் தான் இங்கு
ஆட்சியும் புரிந்து விடும்.
அத்தனையும் இவனின்றி
அணுவும் அசையாது.
ஆதலினால் கூறுகின்றேன்
எல்லாமே டேவங்கள்;
பணத்திற்காய் காட்டிடுவார்
போலிப்பாசங்கள்!

- தேவகி -

# நறள் வெள்ளம்

விசும்பு — ஆகாயம் — இதிலிருந்து துளித் துளியாய் வீழ ஆரம்பிக்கும் மழை சோ வெனப் பொழிகிறதே. இதை இடைஞ்சல் என்று சினப்பாரும் இருக்கிறார்கள். அவசர உலகில் ஆலாய்ப் பறப்பவர்களுக்கு மழை வேண்டுமா ........?

மழை தவறினால் கிராமத்தில் விவசாயிகளுக்கு மட்டுமா துயரம்? துன்பம்? உலகமே ஒரு பாலைவனம் ஆகி விடும்; தாவர ஆடைகளைக் களைந்து — பூமி பிறந்த மேனியுடன் — புழுதிப் படலம் போர்த்த கோலம் கொண்டுவிடும்.

மரங்கள் மடிந்து விடும்; பச்சை நிறமென்றால் என்ன என்று கேட்கும் நிலை வரும்; அனற்காற்று வீசி ஆயிரம் கொடுமை தரும்; பசும் புல்லின் நுனியைக் கூட இவ்வுலகில் காண முடியாத நிலைமை ஏற்படும்.

இதைத்தான் —

**விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது**

என்றார் வள்ளுவர்.

—0016

எனவே இதற்காக நீ மழை வேண்டித் தவம் இயற்றல் வேண்டா! கோயிலிலே சினிமாக் கச்சேரியைக் கெடுக்க மழை வந்து விடாமல் — பிள்ளையாருக்கு நேர்த்தி வைத்து 1000 மோதகம் லஞ்சம் கொடுக்கவும் வேண்டா!

மழையைக் கெடுக்கும் வகையில் இயற்கையுடன் மோதாமல் இருந்துவிடு. அது போதும்! மரங்களையும் காடுகளையும் அழித்து நீர்ச் சுழற்சியைக் கெடுக்காதே.

கடலை நம்பி மழையைக் கைவிடலாமா? அரசனை நம்பி புருஷனைக் கை விட்ட கதையாகி விடுமல்லவா?

நெடுங்கடலிடம் நீரைக் கொள்கின்ற மேகம் நகர்ந்து, மோதி, மின்னி, இடித்து வெடித்ததால் தடிந்தெழிலி எனப் பெயர்கொண்டு மழையாய்ப் பொழிகிறது.

இவ்வாறு பொழியாத போது நிலம் மட்டுமா? கடலுமே கூட தன் நீர்மை குறையும் உப்புத்தான் விளையும்; உலகம் கருவாடு போடப்படும்.

**நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்**

—0017

(வான் சிறப்பு)

- அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## (27 - 09 - 1997 முதல் 03 - 10 - 1997 வரை)




மாற்றம்:

சந்திரன் - கடகம்.

இந்திய அரசியலில் அரசபீடங்கள் மாற்றம் அடையும். இலங்கையின் அரசியலில் மேல் நாட்டவர்கள் பேச்சுவார்த்தைகளைத் திணிக்க முயல்வார்கள். சில பழைய புகழ் பெற்ற அரசியல்வாதிகள் மறைய இடம் உண்டு. மக்களின் மனோபாவம், மாணவர்களின் சிந்தனையில் புதிய ஓட்டம் ஏற்படும். அரச அதிகாரிகளின் அவல நிலைகள் சர்வசாதாரணமாகும். உலகில் கிழக்கின் போக்கு மேற்கிற்குப் பிடிக்காது. ஐ. நா. சபையில் மேற்கு ஆதிக்கம் செலுத்துவதில் கண்ணோட்டமாயிருக்கும்.

**மேடம்:** நீங்கள் எடுத்த மூச்சில் பல காரியங்களைச் செய்யக் கூடியவர். கிட்ட வந்து எட்டப் போகும் சந்தர்ப்பங்களைப் பார்த்துப் பார்த்து ஆவேசப்பட்டு என்ன தான் செய்ய முடியும்? ஐந்து சதம் இலாபம் வேண்டாம்; ஐம்பது ரூபா வரட்டும் எனப் பல சந்தர்ப்பங்களை இழந்து விடக்கூடாது. வருவது வரட்டும் எனக் காரியங்களைச் சாதகப்படுத்த முயல வேண்டும். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். காசு தானாக வரும். வருவதை விடாது அனுசரித்துப் போகப் பாருங்கள். காலத்திற்குத் தகுந்த ஓட்டம் ஓடவேண்டும். விருப்பு, வெறுப்பு எதிலும், அசதி, உடலில் களைப்பு. வயிற்றில் நோ ஏற்பட இடமுண்டு. உறவினர் வரவு, தூரத்துச் செய்தி நல்லபடி இருக்கும் என எதிர்பார்க்காதீர்கள். நண்பர்கள் கழுத்தறுப்பர். கொஞ்சம் நிதானமாக இருங்கள். உறவும், பகையும் மாறி மாறி வரும் உலகில் அச்சுவினி ஒரு தனிப் போக்கு. பரணிக்குப் புதுத் திட்டப்பார்வையும், கார்த்திகைக்கு ஒளிமயமான மாற்றங்களும் சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் தேடி ஓடி வரும். காலநேரம் அறிந்து சமாளித்துக் கொள்ளவும். உங்களால் அது நிச்சயம் முடியும்.

**இடபம்:** என்ன உங்களுக்குப் பயமாம்? எல்லோரையும் அதட்டி உருட்டி விடும் நீங்கள்—எதற்குப் பயப்படவேண்டும்? பயப்படுவதனால் காரியங்கள் தாமதமடையும். என்ன மறைமுக எதிரிகளால் வேதனையா? கொஞ்சம் நிதானமாகப் போங்கள். சிரித்துச் சிரித்துப் பேசி வேதனை தரும் மனிதர்கள் நம் மத்தியில் இல்லாமல் இல்லை. இருப்பினும் உங்கள் முயற்சியால் அவை எல்லாம் தாமதமடையும். உங்கள் வாக்குச் சாதுரியத்தால் சமாளித்துக் கொள்ளல் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் கடும் உழைப்பு வேண்டும்.

# சோதிட சஞ்சீவி

கண், கைகால் வலி ஏற்படும். ஆனால் பயப்படத் தேவையில்லை. எதிர்ப்பாலரால் ஏட்டிக்குப் போட்டியான கலகங்கள் ஏற்படும். பணச் செலவு அதிகரிக்கும். புத்திரரால் யோசனைகள், அலைச்சல்கள் வர இடம் உண்டு. சமாளித்துக்கொள்ளவும்.

**மிதுனம்:** உங்கள் குடும்பத்தில் எதிர்ப்பாலாரால் கொஞ்சம் யோசனை வரத்தான் செய்யும். இருந்தாலும் வீடு வாசலை விட்டு ஊரை விட்டு ஓடவேண்டி வராது. அடிக்கடி உடம்பில் உஷ்ணபீடைகள் கொடுக்கும். எதைச் செய்தாலும் திருப்திவராது. செய்வதெல்லாம் வீணாகும் நிலை ஏற்பட்டாலும் சும்மா இருக்க முடியுமா? நாம் ஏதோ இயங்கியபடிதானே இருக்க வேண்டும்? உங்கள் தேவைகளை மெல்ல மெல்லப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். காலம் வரும், காலம் வரும் என யோசிக்க வேண்டாம். உங்களுடன் உறவாடுபவர்களுடன் கொஞ்சம் கவனமாக இருங்கள். திடீர் நட்பு ஆபத்துக்களை தொழில்ஸ்தானத்தில் கொடுக்கலாம். அதிக லீவுகள் எடுக்காமல் பார்த்துக் கொள்ளவும்.

**கடகம்:** உங்கள் தகுதிக்கேற்ப தொழில்ஸ்தானத்தில் நன்மைகள், சிறப்புக்கள் ஏற்படும். படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்து உச்சம் அடைய உங்களால் முடியும். ஆயினும் திசைமாறும் அலையால் அடிக்கடி இப் பூவுலகில் பாதை மாறிப் போக நேரிடும். இருப்பினும் உண்மைகளை உணர்ந்து நன்மை தரும் பாதைக்கு அடிக்கடி வந்து போவீர்கள். சாந்தி, சமாதானம் உங்கள் தொழில் ஸ்தானத்தில் ஏற்படும். பெரியவர்கள் உதவுவார்கள். மனைவி அல்லது கணவன் வழியினர் உதவியும், உபத்திரவமும் மாறி மாறித் தருவர். பொறுமையால் நிதானம் இழக்காமல் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். உணர்ச்சிவசப்படுவதனால் எந்த விதமான நன்மையும் நமக்கு ஏற்படாதல்லவா? அயலவர்கள் எவராயினும் கொஞ்சம் அவர்களைப்பற்றி அறிந்து வைத்திருங்கள்.

**சிங்கம்:** உங்களுடன் நல்லவர்கள், பெரியவர்கள் அல்லது படித்தவர்கள் தொடர்புகொள்ளுவார்கள். வாக்குச் சாதுரியத்தால் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுங்கள். குடும்பத்தில் எதிர்ப்பாலாருக்காக செலவுகள் அதிகரிக்க வேண்டி வரும். காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளல் வேண்டும். இப்படித்தான் வாழவேண்டும் என தனிப் பாதையில் செல்லும் உங்களுக்கு தெய்வீக சக்தி பொருந்தியவர்களின் தொடர்பு ஆலோசனைகள் அடிக்கடி நற் பலன்களைக் கொடுக்கும். பாசத்தினால் தடுக்கப்பட்டாலும் பரந்தாமன் பரமபிதா அன்பர்களின் தொடர்புகளை நிறுத்

## மகாதேவா ஜோதிடம்

தக்கூடாது அல்லவா? தொழில் ஸ்தானம், கல்விக்கூடம் சிறப்புக் கொடுக்கும். அட்டமத்துச் சனி பலதடைகளை, பயத்தை, தாமதங்களைக் கொடுக்காமல் விடாது. காலமறிந்து செயற்படுவதனால் நன்மைகள் ஏற்படும்.

**கன்னி:** நீங்கள் தாமரை இலையில் தண்ணீர் போல இக்காலத்தில் தத்தளிப்பீர்கள். எதை எடுத்தாலும் சற்று தடை, தாமதங்கள் ஏற்படத் தான் செய்யும். நிதானமாக இருத்தல் வேண்டும். நாம் நினைத்தது எல்லாம் நடக்கிறதா? ஏதோ கலாசார வாழ்வில் நாமும் இவ்வுலகில் வாழுகின்றோம் எனச் சிந்தித்து உங்கள் பாதையில் நீங்கள் மெல்ல மெல்ல நிதானமாக முன்னேற வேண்டும். அத் [illegible]

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 17



சொற்சிலம்பம் இல. 17
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..................................................

விலாசம் : ..................................................

..................................................

———————— இங்கே வெட்டுக ————————

### முடிவு திகதி: 03 - 10 - 1997

**இடமிருந்து வலம்**

1. பத்திரிகைக்கு இவர்களுடன்தான் தொடர்பு. 4. ஏதிலி. 7. கடிதம். 8. ஓரிடத்தில் வசி. 9. வேலையாள் எஜமான் மீது வைத்திருக்க வேண்டியது 12. ஊர்வன வகையைச் சேர்ந்தது. 14. முடிவு. 16. துவி. 17. ஒரு கிழமை நாள். 18. சத்தம். 20. நோயாளிக்குப் பணிவிடை செய்பவர். 21. சதுரத்தின் பக்கங்கள். 23. தீமையல்ல. 24. பெண்.

**மேலிருந்து கீழ்**

1. தர்க்கம். 2. சபை. 3. கற்கப்படுவது. 4. இறந்தவருக்குச் செலுத்துவது. 5. ஒரு நோய். 6. மூன்று. 8. போட்டிக்கு விடுவது. 10. மங்களம். 11. தலைமுறை. 13. முகத்தில் வருவது. 14. மத்திய கிழக்கு நாடுகளின் நகரங்களில் ஒன்று. 15. சுயநலம் தொடங்குவது இந்த எண்ணத்தில் தான். 16. வீடு 18. மலையின் உச்சியில் இருப்பது. 19. சூரியன். 21. தன்மை ஒருமைப் பெயர், 22. தசரதன் மருமகள்.

### சொற்சிலம்பம் இல. 15 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சபர்மதி. 5. வளை. 6. மிதமிகு. 7. துக்கம். 9. பாதிரி. 11. கரிசனை. 12. தசம். 14. ரம்பை. 17. பசி. 18. யோகம். 20. சர்ப்பம். 21. தும்பி. 22. பின். 23. மா.

**மேலிருந்து கீழ்**

1. சமிபாடு. 2. பகுதி. 3. மது. 4. திக்கம். 5. வம்சம். 8. கரி. 10. ரிதம். 13. சபையோர். 14. ரசி. 15. கம்பன். 16. ஆறு. 17. பத்து. 19. சுப்பி. 20. சபி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு :- கே. இராஜகோபால்,
'பொன்மனை',
தொல்புரம், சுளிபுரம்.

★ இரண்டாம் பரிசு :- திருமதி ச. லிங்கமூர்த்தி,
அ மி. பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

★ மூன்றாம் பரிசு :- ச. கருணாகரன்,
91, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 16 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தவறான சிகிச்சை முறையால் குழந்தையின் கை துண்டிப்பு!

வயிற்றுப் போக்குக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 11 மாத ஆண் குழந்தைக்குத் தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதால் அந்தக் குழந்தையின் இடது கையைத் துண்டிக்க நேரிட்டது.

இந்தச் சம்பவம் திருச்சியில் கடந்த வாரம் இடம் பெற்றிருக்கின்றது.

தவறான சிகிச்சைக்கு ரூ. 98 லட்சம் (இந்தியப் பணத்தில்) நஷ்டஈடு கேட்டு தேசிய நுகர்வோர் மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.



சிகிச்சைக்கு முன்பு இரு கைகளுடன் குழந்தை நிரஞ்சன். சிகிச்சைக்குப் பின்பு துண்டிக்கப்பட்ட இடது கையுடன்.

திருச்சி, திருவானைக்காவில் கணபதி நகரைச் சேர்ந்தவர் என்.இ. கணேஷ்குமார். பொறியியல் பட்டதாரியான இவர் அரபு நாட்டில் கப்பல் நிறுவனம் ஒன்றில் நிர்வாகப் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி குமாரதேவி. இவரும் பொறியியல் பட்டதாரி.

இவர்களது ஆண் குழந்தை நிரஞ்சனுக்கு 28-10-96 இல் வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

உடனே திருச்சியில் உள்ள கிங்ஸ்லி கிட்ஸ் மருத்துவமனையில் குழந்தை அனுமதிக்கப்பட்டது.

குழந்தையைப் பரிசோதித்த டாக்டர் கிங்ஸ்லி ஜெபகுமார் இங்குள்ள சீ கார்ஸ் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிப்பதாகக் கூறினார். இதை குமாரதேவி ஒப்புக் கொண்டார்.

தவறான இடத்தில் குழந்தைக்கு ஊசி செலுத்தப்பட்டது. இதையடுத்து, சிறிது நேரத்தில் குழந்தையின் கை வீங்கியது. டாக்டர் கிங்ஸ்லி வந்து பார்த்து இதனால் பிரச்சினை ஏதும் இல்லை என்று கூறிவிட்டார்.

இதற்குள் கை கருநீலமாக ஆனதுடன் ஆங்காங்கே கொப்புளங்களும் ஏற்பட்டன. இதனால் அதிர்ச்சியடைந்த குமாரதேவி குழந்தையை சென்னைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கலாம் என பல முறை கேட்டுக் கொண்டும் டாக்டர்கள் அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு குழந்தையின் கையில் ரத்த ஓட்டம் நின்றது.

பிறகு 3-11-96 இல் குழந்தையின் கை துண்டிக்கப்பட்டது.

துண்டிக்கப்பட்ட கை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது சுத்த ரத்தம் செல்லும் குழாய்க்குள் மருந்து செலுத்தப்பட்டிருப்பது தெரியவந்தது.

குழந்தைக்கு அசைவுகளுடன் கூடிய செயற்கைக் கை பொருத்தும் வசதி இந்தியாவில் இல்லை என்பதால் அமெரிக்காவுக்குச் சென்று பொருத்த வேண்டும்.

வளர்ச்சிக்குத் தகுந்தாற் போல் ஒன்றரை ஆண்டுகளுக்கு ஒருமுறை செயற்கைக் கையை மாற்றவேண்டும் என்பதால் அதற்குரிய செலவுக்காக ரூ. 98 லட்சம் தேவைப்படும்.

இத்தொகையை, தவறாக சிகிச்சை அளித்த டாக்டர் கிங்ஸ்லி ஜெபகுமார், சீ கார்ஸ் மருத்துவமனை நிர்வாகிகள் மற்றும் டாக்டர் செந்தில்குமார் ஆகியோர் தர வேண்டும் எனக் கேட்டு தேசிய நுகர்வோர் மன்றத்தில் மனுச் செய்யப்பட்டுள்ளது.

புகாரை ஏற்றுக் கொண்ட மன்றம் விளக்கம் கேட்டு மூவருக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

## இப்படியும் நபர்கள்!

தமிழக சஞ்சிகைகள் அண்மையில் நடந்த இந்தத் திடுக்கிடும் சம்பவம் குறித்து செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. அதன் விவரம் வருமாறு:-

டெல்லிக்குப் பக்கத்தில் 'கைரா' என்ற கிராமம். அங்கு 106 வயதுக் கிழவி ஒருத்தி தன்னுடைய பேரனுடன் ஒரு வீட்டில் வசித்து வந்தார். ஒரு நாள் இரவு கிழவியின் அறையில் இருந்து அலறல் எழுந்தது. பக்கத்து அறையில் இருந்து பேரன் ஓடிவந்தான். பாட்டி உடை எல்லாம் கலைந்து அலங்கோலமாகக் கிடந்தாள். பேரன் போட்ட கூச்சலில் ஊர்மக்கள் திரண்டு வந்து பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்டவனைப்பிடித்து யார் என்று பார்த்தால் பக்கத்துவீட்டுக்காரன். வயது ஐம்பது. ஆறுகுழந்தைகளின் தந்தையாம்.

ஊர் ஜனங்கள் போட்ட தர்ம அடியில் ஆள் ஆஸ்பத்திரியில்!

இந்தத் தகவலைவெளியிட்டுள்ள சஞ்சிகை எது தெரியுமா? 'குமுதம்' வார இதழ் தான்.

அச்சஞ்சிகை வெளியிட்டுள்ள மற்றொரு தகவல்:-

பிரான்ஸில் ஒரு கிராமத்தில் பாடசாலை மாணவி ஒருத்தியை இரண்டு, மூன்று பேர் சேர்ந்து கெடுத்து விட்டார்கள். குற்றவாளிகளை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதனையடுத்து ஊருக்குள் இருக்கும்—பதினைந்து வயது முதல் முப்பத்தைந்து வயது வரையுள்ள அனைத்து ஆண்களையும் டி. என். ஏ. சோதனைக்கு உட்படுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெண்ணின் அவயவத்தில் இருந்து அப்பெண்ணைக் கெடுத்தவனின் விந்து வகை எடுத்து டி. என். ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னரே ஊரில் உள்ள அனைத்து இளைஞர்களையும் டி.என்.ஏ. (மரபியல் அணுக்கள் — நிறமூர்த்தங்கள் பற்றிய) சோதனைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தப் பரிசோதனையில் யாராவது இளைஞனின் டி. என். ஏ. அந்தப் பெண்ணின் அவயத்தில் இருந்து எடுக்கப்பட்ட விந்தின் டி. என். ஏ. உடன் ஒத்துப் போனால் அவனே குற்றவாளி.

இந்த அடிப்படையிலேய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் ஊர் மக்கள் இந்த உத்தரவுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். யாரோ தப்புச் செய்ததற்காக தாங்கள் ஒவ்வொருவரையும் சோதிப்பது தவறானது என்பது, அவர்கள் வாதமாம். ★

## பாப்பராசிப் படை!

இளவரசி டயானாவின் மரணத்துடன் 'பாப்பராசி' படை பற்றிய செய்திகள் பரவலாக அடிபடத் தொடங்கி விட்டன. யார் அந்த பாப்பராசிப் படையினர்?

எந்த நிறுவனத்தையும் சேராமல் தனிப்பட்ட முறையில் படம் எடுக்கும் கமராக்காரர்களே இவர்கள். கமராவும் கையுமாக — ஊன், உணவு, உறக்கமின்றி — பிரபலங்களுக்குப் பின்னால் அலைந்து அவர்களுக்குத் தெரியாமல் அவர்களின் இரகசிய நடவடிக்கைகளைப் படம் எடுத்து அம்பலப்படுத்துபவர்கள்தான் இந்தப் பாப்பராசிப் படையினர்.

1950 இல் எடுக்கப்பட்ட பிரெஞ்சு சினிமா ஒன்றில் இத்தகைய கதாநாயகன் வருகின்றான். 'பேப்பராசோ' என்ற இத்தாலிய வார்த்தையிலிருந்துதான் பப்பராசி என்ற வார்த்தை உருவானது. இவர்களின் முழு நேரப்பணியே பிரபலங்களைத் துரத்துவதுதான்.

இவ்வாறு டயானாவை விடாது துரத்திய போட்டோகிராபர் ஒருவர் டயானாவும் அவரது காதலர் அல்பெய்ட்டும் கடற்கரை மணலில் சேர்ந்திருந்த காட்சியை படம் பிடித்து நாலு லட்சம் டொலர் சம்பாதித்துக் கொண்டார்.

இந்தப் பாப்பராசிப் படைக்குப் போக்குக் காட்டி விட்டுத் தப்புவதற்காக வேகமாகக் காரில் சென்ற சமயமே டயானாவின் கார் விபத்துக்குள்ளாகி சுக்காலாகியது.

## துணுக்குத்தகவல்

☐ அமெரிக்காவில் — குறிப்பாக ஹொலிவூட்டில் — இப்போது புதிய 'பாஷனாக' வந்திருக்கும் பெண்களின் உடைக்குப் பெயர் 'டியூப் டிரஸ்'

நெஞ்சிலிருந்து தொடை வரை கையும் காலும் இல்லாமல் உடம்பை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருக்கும் இந்த உடை, அணிவதற்கும் கழற்றுவதற்கும் மிக இலகுவானதாம். உருவினால் 'டக்' என்று வந்து விடுகின்றதாம்.

★ ★ ★

☐ இங்கிலாந்தில் ஒருவரின் வீட்டில் திடீர் திடீரெனப் புதிது புதிதாகப் பொம்மைகள் முளைக்க ஆரம்பித்தன. எங்கிருந்து வந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியாத வீட்டுக்காரர்கள், பில்லி, சூனியம் என்று பயப்பட ஆரம்பித்துவிட்டார்கள். திடீரென யார் அதற்குக் காரணம் என்பது அம்பலத்துக்கு வந்தது. யார் தெரியுமா? வீட்டுப் பூனை தான்.

அடுத்த வீட்டிலிருக்கும் பொம்மைகள், வீடியோ கஸெட் போன்ற பொருள்களை திருட்டுத் தனமாகத் தூக்கித் தனது எஜமான் வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கும் திருவிளையாடலைப் புரிந்து வந்திருக்கின்றது அந்தப் பூனை.

'பூனையின் வேட்டையாடும் புத்திதான் இந்தத் திருட்டு வழியில் திரும்பியிருக்கின்றது' என்கின்றனர் விலங்கு வைத்திய நிபுணர்கள்.

## ஒலியின் வேகத்தை விஞ்சும் கார்

படத்தைப் பார்த்தால் இது ஏதோ புதுவகை விமானம் என நினைத்தால் ஏமாந்து போவீர்கள். ஏனென்றால் இது ஒரு புதுவகைக் கார். மினுமினுக்கும் கறுப்பு வர்ணத்தில் மிக நீ... ள... மா... ன உடலமைப்புக் கொண்ட இந்தக் கார் இங்கிலாந்துத் தயாரிப்பு. 'சுப்பசொனிக் ஸ்பீட்' கார் (எஸ். எஸ். ஸி.) எனப் பெயரிடப் பட்டுள்ளது.

இது சாலையில் செல்லும் போது இக்காரின் 'ஹோர்ன்' சத்தம் நமக்குக் கேட்டு நாம் வழிவிடு முன்னர் அது நம் அருகில் வந்து விடும். ஆம். ஒலியின் வேகத்தை வீட அதிவேகமாகச் செல்லும் உலகின் முதல் நான்கு சக்கர வாகனம் இதுதான்.

ஒலியின் வேகம் விநாடிக்கு 331 மீற்றர். ஆனால் இந்த ''சுப்பசொனிக் ஸ்பீட்'' காரின் வேகமோ விநாடிக்கு 333 மீற்றர்.

ஆச்சரியப்பட வைக்கும் இக்காரை சமீபத்தில் பரிசோதித்துப் பார்த்தார்கள். இன்னும் ஒரிரு மாதங்களில் நெவாடோவில் இக்கும் பாலைவனத்தில் வெள்ளோட்டம் விடவும் திட்டமிட்டுள்ளனர்.



மிகப் பெரிய "சுப்பசொனிக்" கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை...

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அட்டையையும் காட்டிக்கொண்டாள். முன்பே அறிமுகமான அவள் கொஞ்சம் சிரித்தாள். மற்றவள் புதியவளாகவும், காண கடூரமானவளாகவும் தோற்றமளித்தாள்.

முதலிலிருந்து நடந்தவாறே; கழுத்துக்குக் கீழ் தொடங்கி அக்குள், மார்பு, வயிறு என்று மிக அழுத்தமாக அமுக்கிக் கொண்டே வந்தவள் அந்த இடத்தைத் தொட்டவுடன் நின்றாள். ஒன்றும் பேசாமல் வித்யாவின் கண்களைக் குரூரமாய்ப் பார்த்தாள். ''மென்சஸ்'' அவள் கேட்க முதலே மெதுவாக முணுமுணுத்தாள். அவள் பட்டென்று இவள் சேலையைத் தூக்கினாள்.

மற்றவள் இவளுக்கு முதலே தெரிந்தவள். பணிவோடு (இவளை உறுக்கியவள் அவளை விட மேலிடம் போல ...) இவளை ஏதோ சுட்டிச் சொன்னாள். அவள் கேட்கவில்லை. முதலாமவள் கண்களால் ஆறுதல் சொல்லிப் பரிவாய்ப் பார்த்தபடி வெளியே நின்றவர்கள் உள்ளே வராமல் வாசலுக்குக் குறுக்கே நின்று கொண்டாள். வெளியிலொரு சசமுசா பரவுவதை இந்த வேளையிலும் அவளால் உணர முடிந்தது. அந்தப்பெண் சிப்பாய் இழுமேறிருந்த நுனிச் சேலையைக் கொத்தாய்த் திருகி முழங்காலுக்கு மேல் உயர்த்தினாள். இவளுக்கு சில்லென்று ஒரு பயம் உடல் முழுக்கப் பரவியது.'' கழட்டு கழட்டு'' ஒரே வார்த்தையால் அதட்டினாள் தயங்கித் தயங்கி கழற்றினாள். மற்றவள் இதைப் பார்க்க விரும்பாமல் அப்பால் திரும்பி நின்றாள். கொத்தாய் பற்றிய கையை அருவருப்பால் நழுவ விட்டாள் அவள். வித்யாவுக்கு அவமானமாயிருந்தது. இடுப்பில் கைவைத்துப் ''போ'' என்றாள். வெளியே போன போது அவளும் பின்னால் வந்து எதிர்ப்புறப் புற்படுக்கையில் துப்புவதும், பின் அவளைப்பார்த்துச் சிரித்த இராணுவ வீரனுக்கு இவளை மேலும், கீழும் ஏற இறங்கப்பார்த்தபடி கோபமாய் ஏதோசொல்லிக் கொண்டு போவதும் தெரிந்தது. எல்லாரும் அவளையே பார்த்தார்கள். கூனிக் குறுகிப் போய்க் கூட்டத்திற் கலந்தாள். அந்த இராணுவ வீரன் இன்னும் சிரித்த படியிருந்தான். பெண் சிப்பாய் அவனருகே நின்று கோபமாய் சடசடத்தபடியிருந்தாள். என்ன சொல்லியிருப்பாள்...? நெற்றி வியர்த்தது. உள்ளூர இன்னும் அவமானம் குறையவில்லை. அந்தத் தகரச் சாவடியின் கீழ் பாகம் அடைக்கப்படாமல் உள்ளேயிருந்த பெண்ணின் கால்கள் தெரிந்தன. வாசலில் தொங்கிய சாக்கு காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. உள்ளேயிருந்தவள் கைப்பையை விரித்துக் காட்டுவது அந்தக் கணப் பொழுது அசைவிற் தெரிந்தது. அவளுக்கு முகத்தைப் பொத்திக்கொண்டு எங்காவது ஓட வேண்டும் போலிருந்தது. எல்லார் பார்வையும் தன்மேல் குத்திட்டு நிற்பது போல ...

ஏன் ... ஏனிந்தச் சோதனைகள்? தொண்டைக்குழிக்குள் ஒரு விக்கல் கரிப்பாய் எழுந்து திக்கியது.

அந்தச் சத்தி எடுத்த சிறுமி ......

மகனைத் தொலைத்த தாய் ......

பேச்சு வாங்கிய இளம் பெண்கள் ...

கனிவாய் நோக்கும் ஒன்றிரண்டு கன்னியாஸ்திரிகள்...

மீசாலையில் கிரனைட்டோடு பிடிபட்ட பஞ்சாபி போட்ட பெண் ...

இடம்பிடிக்க ஓடும் சனங்கள் ...

இவைபற்றிய எல்லாப் பிரச்சினைகளையும் மறந்துபோய் இனி அவளைப் பற்றி அலசப் போகிறார்கள் ...

பஸ்ஸுக்குள் நெரியுண்டு ஏறியபோதும் எப்போதும் போல அவள் கடைசியாய் ஏறினாள்.

வழக்கம்போல் நிற்பதற்கு இடம் தேடிய போது வெற்றிலைக் காவியேறிய சிவப்புச் சொண்டுகளுடன் ஒரு வயதான பெண் எழும்பினாள்.

''இஞ்சை வா பிள்ளை இதிலை இரு......''

வித்யா திரும்பிப் பார்த்தாள். சாவடியில் அவளுக்குப் பின்னாலேயே வந்து இவள் உள்ளே நிற்கும்போது உள்ளே வராமல் மற்றவளால் தடுக்கப்பட்டபெண்.

''உனக்குத்தான் ஓடி வந்து இடம்பிடிச்சனான்? பிள்ளை நீ உப்பிடியெண்டா முதலிலேயே சொல்லிப் போட்டு பஸ்ஸுக்கை இருந்திருக்கலாம் ...''

ஆதரவாய்க் கரம் பற்றி அமரவைத்தாள். அந்தக் கரத்தில் அன்பு முழுவதும் கரைந்து வழிவதாய்ப்பட்டது அவளுக்கு.

''சனியன் பிடிச்சவள், என்ன வேலை செய்து போட்டாள் ...'' சலிப்போடும், களைப்போடும் அவள் முன் சீற்றில் சாய்ந்து முகம் கவிழ்ந்தாள்.

''ஓம் ... நீ படுபிள்ளை ...''

புதியவள் அத்தோடு நிறுத்திக் கொண்டாள்.

எதுவுமே நடக்காதது போல் கண்களை மூடி உடம்பை வசாய்க் கொண்டு வர முயன்றாள். முடியவில்லை. வயிற்றுக்குள் சின்னதாய் ஒரு வலி இன்னும் வெருட்டிக் கொண்டிருந்தது. ''சூடான திரவத்துளி'' உடலை விட்டு வெளியேறுவதை உணரமுடிந்தது. இதயமும் கழன்று விழுந்தால் நல்லது போலிருந்தது.

''கைதடி ...கைதடி...இறக்கம் ...''

ஒரு நிமிஷத்தில் கைதடி வந்து விட்டது.

''தாங்கஸ் அம்மா. நீங்கள் இருங்கோ ...''

அவசரமாய் அந்த பஸ்ஸை விட்டு இறங்கினாள். நெஞ்சை அடைத்த வெறுமையோடு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். ★

# பணம் பாதகம் செய்யும்!

ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் இருந்தார்.

அவர் அந்த ஊரில் இருந்த இளைஞர்கள் சிலரை ஒன்று சேர்த்து உபதேசம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அவர், ''பணத்தை அற வழியில் தேடவேண்டும். தகாத வழியில் சேர்க்கும் பணம் வந்த வழியிலேயே திரும்பிப் போய்விடும். அது மட்டுமல்ல, பணம் நண்பர்களைக் கூட விரோதிகளாக மாற்றி விடும்!'' என்று கூறினார்.

இளைஞர்களில் ஒருவன் எழுந்து, ''பெரியவரே! நீங்கள் விவரம் தெரியாமல் பேசாதீர்கள். இதோ பாருங்கள், இங்கே நாங்கள் நான்கு பேர் இருக்கிறோம். நாங்கள் நான்கு பேரும் இணை பிரியாத நண்பர்கள். எந்தப் பணமும் எங்கள் நட்பை எதுவும் செய்துவிட முடியாது!'' என்று சொல்லி சவால் விட்டான்.

அங்கிருந்த மற்றவர்களும் அந்த இளைஞனின் கருத்துக்கு ஆதரவாகத் தலையாட்டினார்கள்.

பெரியவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

அதன் பிறகு ஒரு நாள்...

வழக்கம்போல் இந்த நான்கு நண்பர்களும் ஒரு மலையடிவாரத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

எனக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பதுதான் முறை!'' என்று மற்றொருவன் கூறினான்.

''உனக்கும் முன்னால் நான்தானே பார்த்தேன்!'' என்றான் இன்னொருவன்.

சிறிது நேரம் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு ஆளுக்கு ஆள் அங்கே கிடந்த இரும்புக் கம்பிகளைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ள, அந்த அடிதடியில் ஓர் ஆள் இறந்து விட்டான். இன்னொருவனுக்கோ பலமான காயம்!

இறந்தவனைப் பார்த்ததும் மற்ற மூன்று பேரும் ஒரு சமரசத்துக்கு வந்தார்கள்.

''சரி, நடந்தது நடந்து விட்டது. இனிமேல் நடக்க வேண்டியதைப்பற்றி யோசிப்போம். இவன் இறந்து போனது நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஆதலால் இவனை இரகசியமாக இங்கேயே புதைத்து விடுவோம். நாம் மூன்று பேரும் இவற்றைப் பங்கு போட்டுக் கொள்வோம்!'' என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அதற்குள் அவர்களுக்குப் பசிக்க ஆரம்பித்துவிட்டது.

ஒருவனை சாப்பாடு வாங்கி வருவதற்காகப் போகச் சொன்னார்கள். ஆரம்பத்தில் அவன் மிகவும் தயங்கினான். 'திரும்பி வருவதற்குள் இவர்கள் இரண்டு பேரும் இருப்பதை எல்லாம் சுருட்டிக் கொண்டு ஓடி விட்டால் என்ன செய்வது?' என்ற தயக்கம் அவனுக்கு. இருந்தாலும் மற்ற இரண்டு பேரும் அவனிடம், ''அப்படியெல்லாம் செய்ய மாட்டோம். தைரியமாகப் போய் விட்டு வா!'' என்று உறுதி



பக்கத்தில் ஒரு மலைக் குகை இருந்தது. அதில் ஒரு சாது தியானம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு சமயம் அவர் கண்ணைத் திறந்து பார்த்தார்.. அவ்வளவுதான்! அலறியடித்துக்கொண்டு குகையை விட்டு வெளியே ஓடி வந்தார்.

''மரணம் என்னைத் துரத்துகிறது! மரணம் என்னைத் துரத்துகிறது!'' — என்று சொல்லிக்கொண்டே வேகமாக அவர் ஓடினார்.

இளைஞர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

'ஏன் இந்த சாது இப்படி கத்திக்கொண்டு ஓடி வருகிறார்?' என்று நினைத்துக் கொண்டே அந்த நான்கு இளைஞர்களும் குகைக்குள்ளே சென்று பார்த்தார்கள். அங்கே போய்ப் பார்த்தால்...ஓர் ஆச்சரியம்! விலை மதிக்க முடியாத வைரங்கள், வைடூரியங்கள், முத்துக்கள், தங்கக்காசுகள், குவியல் குவியலாகக் கிடந்தன!

'இவ்வளவு பெரிய செல்வக் குவியல்களைப் பார்த்து விட்டு இந்த ஆள் இப்படி அலறியடித்துக் கொண்டு ஓடுகிறாரே!'' என்று நினைத்து இளைஞர்கள் சாதுவுக்காகப் பரிதாபப்பட்டார்கள். அந்த நான்கு இளைஞர்களும் அங்கே கிடந்த நகைகளையும் வைரங்களையும் ஆசை ஆசையாகக் கைகளால் அள்ளி அள்ளிப் பார்த்தார்கள்.

''சரி...இதை இப்படியே நான்கு பங்காகப் போட்டால் ஆளுக்கு எவ்வளவு கிடைக்கும்?'' என்று ஒருவன் கேட்க ஆரம்பித்தான்.

''நான்தான் இதை முதலில் பார்த்தேன். அதனால்

சொல்லி ஒருவாறு அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்கள்.

அவன் கிளம்பிச் சென்றான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு குகையில் அடிபட்டிருந்தவனுக்கு மூச்சுத் திணற ஆரம்பித்தது, ''தண்ணீர் ...தண்ணீர்!'' என்று சொல்லி முணுமுணுத்தான்.

அவன் படும் மரணாவஸ்தையை அருகில் இருந்தவன் கண்டும் காணாதவன் போல் இருந்து விட்டான். அவனும் இறந்து விட்டால் ஒரு பங்கு குறையுமே என்ற எண்ணம் இவனுக்கு!

சாப்பாடு வாங்கச் சென்றவன் விரைவில் திரும்பி வந்தான். தான் குகையில் விட்டுச் சென்ற இருவரில் ஒருவன் இறந்து போயிருப்பதைப் பார்த்தான். ''இவன் எப்படி இறந்து போனான்?'' என்று குகையில் இருந்தவனிடம் கேட்டான்.

அதற்கு அடுத்தவன், ''இப்படித் தான் செத்துப் போனான்!'' என்று சொல்லிக் கொண்டே அவன் தலையில் இரும்புக் கம்பியால் ஓங்கி ஓங்கி அடித்தான். அவ்வளவு தான்! அந்த அடியால் சாப்பாடு வாங்கிக் கொண்டு வந்தவனும் துடிதுடித்து இறந்து போனான்.

இப்போது மீதி இருந்தது ஒரே ஒரு ஆள்தான். அவன், ''அப்பாடா! தொல்லை விட்டது!'' என்று நினைத்தான்.

அவசர அவசரமாக அவன், வெளியே போனவன் வாங்கிக்கொண்டு வந்திருந்த சாப்பாட்டை சாப்பிட்டான். விரைவில் நகை நட்டையெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பி

(XI ஆம் பக்கம் பார்க்க)

# இந்த வார இராசி...

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடையமுடியும். தொழில் ஸ்தானத்தில் இரவு பகல் எனப் பலன்கள் மாறி மாறி நடக்கும். நண்பர்கள் வீண்பழி சுமத்தலாம். பொருள் செலவை நிதானப்படுத்துங்கள். தூரத்துச் செய்தியால் நன்மைகள் ஏற்படச் செய்யும். புதிய இடமாற்றங்களால் சிலர் நன்மைகள் அடைவார்கள்.

**துலாம்:** வாழ்க்கையில் முன்னேறத் துடித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு, வரும் சவால்களை சமாளித்துக் கொள்வது கஷ்டமல்ல. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள், நண்பர்களின் உதவிகள் இருக்கும். குடும்பத்தில் கலகலப்பும், சுபமங்களப் பேச்சுக்களும் கொடுக்கும். சகோதரர்களுக்காகவும், புத்திரர்களுக்காகவும் அதிக பொருளைச் செலவு செய்வீர்கள். பொருள் வரவும் திடீரென வராமல் இராது. தூரதேசத்துப் பிரயாணத்தைத் தவிர்க்கவும். எக்காரியங்களையும் அதிகம் கதைக்காமல் செயற்படுத்துங்கள். வெற்றி கிடைக்கும். இடமாற்றங்கள் செய்ய வேண்டாம். அதனால் அதிக கஷ்டங்கள் ஏற்படச் செய்யும்.

**விருச்சிகம்:** உங்களுக்கு கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். அதற்காக அடைபட்ட பாதைகளால் செல்லாதீர்கள். எதிலும் துடிப்பு மிக்க உணர்ச்சிகரமான சிந்தனைகள் கொண்ட நீங்கள் அளவறிந்து பேசவும். உங்கள் இடம்பிகம் மற்றவர்களை பொறாமை கொள்ளச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் நல்ல பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் வரும் எதிர்ப்புக்களைச் சமாளித்துக் கொள்ளுங்கள்.

இடமாற்றம் சிலருக்கு நன்மைகள் தரும். புதிய பொறுப்பு, பொருள், சிறப்பு, நண்பர்கள் உதவிகள் என்பன சர்வ சாதாரணமாகும். சனீஸ்வரனுக்கு இந்த இராசிக்காரர்கள் எள்ளெண்ணெய் எரித்து வழிபட்டுவரச் சிறப்புக்கள் வரும்.

**தனுசு:** உங்களுக்கு எவர் எதைச் சொன்னாலும் எதிலும் வெற்றியும் காரிய அனுகூலமும் ஏற்படும். இது வரை எதிர்த்தவர்கள் உதவிகள் செய்வார்கள். தேவையற்ற பொறுப்புக்களால் கவலைப் படுவீர்கள். பொருள் விஷயங்களில் நிதானமாக இருக்கவும். காலில் காயம், கைப்பொருள் விலகல், வாகனச் செலவு என அவ்வப்போது சில தடங்கல்கள் வரத்தான் செய்யும். கொஞ்சம் அவதானமாக இருக்கவும். உத்தராடம் நட்ஷத்திரகாரர் சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து ஏழைகளுக்குத் தான தர்மங்கள் செய்து வரவும்.

**மகரம்:** எதைச் செய்தாலும் திருப்தி ஏற்படாது. அலைச்சல், பொருள் விரயம் கொடுக்கும். காணிபூமிக்காக செலவு செய்யவேண்டி வரும். வீட்டுச் செலவுகளைக் கட்டுப் படுத்துங்கள். மறைமுகச் சத்துராதிகள் தொல்லை கொடுக்கலாம். இடமாற்றங்கள் பொதுவாக நன்மைகளைத் தரும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள், மாற்றங்கள் உருவாகும். அயலவர்களுடன் நிதானமாக இருக்கவும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். உங்கள் வாக்கால் கலகங்கள் ஏற்படலாம். நிதானமாக இருக்கவும். சகோதரர்களுக்கு நன்மைகள் இடமாற்றங்கள் ஏற்படவும் இடம் உண்டு. தூரதேசச் செய்தி களை நம்பி இருக்க வேண்டாம்.

**கும்பம்:** நீங்கள் உங்களை பெரியவர்கள் என மற்றவர்கள் நினைக்க வேண்டும் என அடிக்கடி சிந்திப்பீர்கள். எதையும் போராடிப் பெறும் காலமாகும். செலவுகள் அதிகரிக்கும். புதிய திட்டங்களை நிதானப்படுத்தவும். புதிய பேச்சுக்கள், சிறுமாற்றங்கள், ஆலய தரிசனங்கள் ஓரளவு நிம்மதி கொடுக்கும். சனீஸ்வரன் தாக்கம் சர்வ சாதாரணமாகும். எள்எண்ணெய் எரித்து, ஏழைகளுக்கு தானதர்மங்கள் செய்யுங்கள். உங்களது மனப்பாரத்தை ஆண்டவனிடமே முறையிடலாம். மனிதர்களிடம் முறையிட்டால் உங்களைக் கேலி செய்வார்கள். பெற்றோர், சகோதரர்கள் நற்செய்திகளைக் கொண்டுவருவார்கள்.

**மீனம்:** கலகம் பிறந்து தான் நியாயம் பிறக்கும். உலகத்தவர்களை நம்பி, நம்பி மோசம் போகும் நீங்கள் ஏழரைச்சனி நடக்கும் காலத்திலாவது பொருளில் நிதானமாக இருக்கவும். குடும்பத்தவர்கள் உதவிகள் செய்வார்கள். தொழில் ஸ்தானத்தில் பலதும் பத்தும் நடக்கும். சமாளித்துக் கொள்ளுங்கள். உங்கள் காரியங்களில் நிதானமாக இருக்கவும் மற்றவர்களின் அலுவல்களில் தலையிட்டு அவமானப்படவேண்டாம். குடும்பத்தினரின் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நிதானமில்லாத போக்குகளால் சில இழப்புக்கள் ஏற்படலாம். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மருத்துவ பீடம்...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

டர்கள் கணேசரட்ணம், பொன்னம்பலம் போன்றோர் யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து சத்திரசிகிச்சைப் போதனைகளை நடத்தி வந்தனர். இவர்களில் டாக்டர் பொன்னம்பலம் காலமானார். டாக்டர் கணேசரட்ணம் மட்டும் ஏனைய டாக்டர்களின் உதவியுடன் 1995 ஒக்ரோபர் வரை யாழ். ஆஸ்பத்திரியில் பணி புரிந்தார்.

அதற்குப் பின்னர் மருத்துவபீட மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கக்கூடிய ''சேர்ஜன்கள்'' எவரும் இருக்கவில்லை.

இப்போது மூன்று 'சேர்ஜன்' கள் வந்திருப்பதால் முன்னைய நிலை போலல்லாது தற்போது குறைந்தது இருபத்தைந்து மாணவர்களாவது இங்கேயே உள்வாரிப் படிப்பை (Intern Training) பெறக்கூடிய வாய்ப்புக் கிட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் அந்தளவு எண்ணிக்கையான மாணவர்கள் ஒரே நேரத்தில் உள்வாரிப் படிப்பை அல்லது பயிற்சியைப் பெறுவதற்கான வசதியை வழங்குவதற்கு யாழ். போதனா ஆஸ்பத்திரி நெகிழ்ந்து கொடுக்குமா என்பது வேறு விடயம்.

### மாணவர் எதிர்பார்ப்பு

இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரியில் உள்ளகப் பயிற்சி பெறும் யாழ். மருத்துவ பீட மாணவர்கள், இப்பயிற்சி தங்களின் பட்ட மேற்படிப்புக்கு (Post Graduate Studies) போகும் போது மதிப்புக்குரியதாக (Recognition) இருக்க வேண்டும் என விரும்புவார்கள். அது இயற்கையே.

அத்தகைய மதிப்புக்குரிய உள்ளகப் பயிற்சி கிடைக்க வேண்டுமாயின் அதனை வழங்குபவர்—தலைமை வகிப்பவர் — ஒரு பேராசிரியராக விளங்க வேண்டும்.

ஆனால் யாழ்ப்பாணத்துக்குப் பணியாற்ற வந்த மூன்று புதியவர்களில் ஒருவருக்குத் தானும் பேராசிரியர் பதவி கொடுக்க யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் தயாரில்லை என்றும் —

அதற்குப் பல சாக்குப் போக்குகளைச் சொல்லி சமாளிக்கின்றார்கள் எனவும் —

மருத்துவ பீட மாணவர்கள் சிலர் வேதனையுடன் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

### புதியவர்களின் தகுதி, தரம்

தற்போது யாழ். வந்துள்ள சேர்ஜன்களில் ஒருவர் M.B.B.S., F.R.C.S. (General Surgery), F.R.C.S. (Neuro Surgery), Ph.D. ஆகிய பட்டங்களைப் பெற்றவர். மற்றையவர் M.B.B.S., F.R.C.S. பட்டங்கள் உள்ளவர். ஆஸ்பத்திரியுடன் இணைக்கப்பட்ட சேர்ஜன் M.B.B.S. M.S., F.R.C.S. ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

இந்தத் தரம் இருந்தும் அவர்களுக்கு பேராசிரியர் பதவி வழங்காமல் — பல பேராசிரியர் பதவி வெற்றிடங்கள் இருந்தும் — இழுத்தடிப்பதன் நோக்கம் என்ன?

மொத்தம் பதின்மூன்று பேராசிரியர்களாவது இருக்க வேண்டிய யாழ். மருத்துவ பீடத்தில் ஆக இரண்டு பேராசிரியர்களே தற்போது உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கவுன்ஸில் கவனிக்குமா?

பேராசிரியர் பதவி வழங்குவதற்கு வழக்கமாக சில விதிமுறைகள் உள்ளன என்பது உண்மைதான். ஆனால் சுய நிர்வாக அதிகாரம் கொண்ட யாழ். பல்கலைக்கழகம் போன்றவை தங்கள் தேவைக்கு ஏற்பவும் — தம்மிடம் உள்ள திறமைசாலிகளின் தகுதிக்கு ஏற்பவும் — இந்த விதிமுறைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்து அதற்கு ஏற்ப பேராசிரியர் நியமனங்களை வழங்க முடியும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இன்று கூடவிருக்கும் யாழ். பல்கலைக்கழக கவுன்ஸில், அங்கு பிரசன்னமாகும் நிர்வாகிகளின் சாக்குப் போக்குகளைக் கேட்டு, வாயை மூடிக் கொண்டு வந்து விடாமல் இந்த விவகாரத்தில் ஆழமாக இறங்கினால் நல்ல முடிவை எடுக்கலாம் என்று குறிப்பிட்டனர் சில மருத்துவ மாணவர்கள்.

### அசாத்தியத் திறமை

புதிதாக வந்த சேர்ஜன்களில் ஒருவர் ஏற்கனவே தமது விரிவுரைகளை ஆரம்பித்து விட்டார். அவரின் அசாத்தியத் திறமை, போதிக்கும் பாங்கு ஆகியவை குறித்து மருத்துவ பீட மாணவர்கள் வியப்புத் தெரிவித்துள்ளனர். அத்தகைய திறமையுள்ளவர்களை எப்படியும் மருத்துவபீடம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே மாணவர் அவா.

அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேதனம் அளிக்கப்பட வேண்டும்; பதவி நிலை வழங்க வேண்டும். அவர்கள் இந்த இரண்டையும் எதிர்பார்க்காவிட்டாலும் கூட அவர்களை அகௌரவப்படுத்தாமல் இருப்பதற்கு இவை அவசியம்.

### விளைவு விபரீதமாகும்

உரிய மதிப்பு — கௌரவம் அளிக்கப்படாத காரணத்துக்காக அவர்கள் திரும்பிச் செல்வார்களானால் —

அத்தகவல் குடாநாட்டுக்கு வெளியே பரவுமாளால் —

அதன் விளைவு விபரீதமாக இருக்கும்; இனிமேல் வேறு யாரும் — தகுதியுடைய தமிழர்கள் — வெளிநாட்டில் தமக்குள்ள உயர்நிலை, வசதி போன்றவற்றைத் தூக்கி எறிந்து விட்டு யாழ். மருத்துவ பீடத்துக்குப் பணியாற்ற வராத ஆபத்து நிலைதான் எதிர்காலத்தில் ஏற்படும்; நிரந்தரமாக மருத்துவ பீடத்தை மூடும் நிலையும் நிச்சயமாகலாம்.

### மேலும் நன்மைகள்

தற்போது இங்கு வந்துள்ள மூன்று 'சேர்ஜன்'களும் தொடர்ந்து இங்கு பணிபுரிவார்களாயின் மருத்துவ பீடத்தையும் யாழ். ஆஸ்பத்திரியையும் பொறுத்த வரை பல நன்மைகள் கிட்டும்.

சத்திர சிகிச்சைத்துறை, நோயியல்துறை போன்றவை முற்றாக — தடையின்றி — போதிக்கப்படும். நரம்பியல், நரம்பியல் சத்திரசிகிச்சை, எலும்புமுறிவு (Neurology, Neurosurgery, Orthopaedic) போன்றதுறைப் போதனைகளும் சிறப்பாகநடைபெறும்.

உடற் கூற்றியல் துறை பரீட்சையை இங்கேயே நடத்த முடியும். தவிரவும், வேறு துறைகளில் உள்ள குறைகளை நிவிர்த்தி செய்யவும் வாய்ப்புக் கிட்டும்.

வெளிநாடுகளில் அண்மைக்காலம் வரை சேவையாற்றிய சேர்ஜன்கள் இங்கு பணியாற்றினால் பல நவீன தொழில்நுட்பங்களை (Advanced Sophisticated Medical Technics) இங்கு அறிமுகப்படுத்தவும் வாய்ப்புக் கிட்டும்.

உதாரணமாக Computerised Tomography, Magnetic Resonance Imaging போன்றவற்றைப் ... அவை தொடர்பான கல்வி யாழ். மருத்துவ பீட மாணவர்களுக்குக் கிட்டவும் கூட வாய்ப்பு ஏற்படும்.

இதுவரை காலமும் சிகிச்சைக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்ட Neuro Surgery (நரம்பியல் சத்திர சிகிச்சை) தொடர்பான நோயாளர்கள் கூட இங்கேயே சிகிச்சை பெறவும் வசதி ஏற்படும்.

அத்தோடு —

வெளிநாடுகளில் இருந்து இங்கு நேரடியாக வந்திருக்கும் சேர்ஜன்கள் அங்கு மருத்துவத் துறையில் பலருடனும் தொடர்பு வைத்திருப்பவர்கள்; அத்தகையோர் மத்தியில் செல்வாக்கு மிக்கவர்களாகத் திகழ்பவர்கள். இவர்களை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் மேலும் பல — திறமையான- தேர்ந்த — போதனாசிரியர்களை பிரிட்டன் போன்ற நாடுகளில் இருந்து தருவிக்கவும் வாய்ப்புகள் ஏற்படும்.

எனவே வந்த சேர்ஜன்களை இங்கேயே தக்க வைத்திருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தவிரவும் —

மேலும் பல மருத்துவப் போதனாசிரியர்கள் யாழ். மருத்துவ பீடத்துக்கு உதவும் நோக்குடன் இங்கு வர விருப்பதாகத் தெரிகின்றது.

ஆஸ்திரேலியாவிலிருந்து உடற் கூற்றியற்றுறை போதனாசிரியர் டாக்டர் மகேசன், கொழும்பிலிருந்து மருத்துவத்துறைப் போதனாசிரியர் டாக்டர் சண்முகநாதன் போன்றோரும் யாழ். மருத்துவபீடத்தில் இணைந்து பணியாற்ற விரும்பி விண்ணப்பித்திருப்பதாக அறிய முடிகின்றது.

இன்று குடாநாடு, கல்வியைப் பொறுத்தவரை ஓரளவு வழமைக்குத் திரும்ப முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் வெளிநாடு சென்ற எமது போதனாசிரியர்கள் திரும்பி வருவதாக இல்லை. வந்தவர்கள் மதிக்கப்படவில்லை; உரிய பதவி, கௌரவம் வழங்கப்படவில்லை. இழுத்தடிப்பு நடக்கின்றது. நியாயம் பிறக்க வேண்டும். — என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் எழுவது யாழ். கல்விச் சமூகத்தை வேதனைப்படுத்துவதாக உள்ளது.

''மருத்துவ பீடத்துக்கு போதனாசிரியர்கள் போதும். இதற்கு மேல் வந்தால் ஏற்கனவே இருப்பவர்கள் குழம்பி விடுவார்கள்'' — என்ற பாணியில் யாழ். பல்கலைக்கழக உயர் நிர்வாகிகள் கருதுவதாக வெளியான செய்தியும் மனவேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய கருத்துக்களைக் கூறுவது அல்லது வெளியிடுவது —

இங்கு இதுவரை காலமும் — இவ்வளவு கஷ்டத்துக்கு மத்தியிலும் — சிறப்பான — ஒப்பற்ற — சேவை புரிந்த போதனாசிரியர்களின் சேவையையும், பணியையும், நற்பண்புகளையும் அகௌரவப்படுத்துவதாகவே அமையுமே தவிர வேறில்லை.

பிரதி பலனை எதிர்பாராமல் கஷ்டத்துக்கு மத்தியில் பணியாற்றிய அந்த ஆசான்கள் —

தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்காக யாழ். மருத்துவ பீடத்துக்கு நல்ல போதனாசிரியர்கள் கிடைப்பதற்குக் குறுக்காக நிற்கின்றார்கள் என்று பேச்சு எழுவதே மிகத்தவறானது. தற்போதுள்ள மருத்துவ பீட விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் எவரும் அத்தகைய குறுகிய புத்தி உடையவர்கள் ... அழுத்திக் கூறுகின்றார்கள் மருத்துவ பீட மாணவர்கள்.

அவர்களின் சேவையை மெச்சி, அவர்களை கௌரவிக்கும் அதேவேளையில் போதனாசிரியர்கள் இல்லாத துறைகளுக்கு திறமையான— தேர்ந்த — போதனாசிரியர்களை கையை அகல விரித்து வரவேற்க நாம் தயாராக இருக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள் அந்த மாணவர்கள்.

மருத்துவ பீடத்துக்கு உரிய பௌதீக வளங்களைத் திரட்டித் தருவதில் தம்மால் இயன்ற அனைத்தையும் செய்து வரும் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை, மருத்துவபீடத்துக்கு உரிய போதனாசிரியர்களைப் பெற்றுத்தருவதிலும் முன்னின்று செயற்பட வேண்டும் என்றும் அவர்கள் உரிமையுடன் எதிர்பார்க்கின்றார்கள். ★

## பணம் பாதகம்...

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

னான். அவ்வளவுதான்! அவன் தலை கிறுகிறு என்று சுற்றியது! கண்கள் இருண்டன. அப்படியே மயங்கிக் கீழே விழுந்தான். அவனும் செத்துப் போனான்.

என்ன ஆயிற்று தெரியுமா? சாப்பாடு வாங்கச் சென்றவன் குகையில் இருந்த இருவரையும் கொல்வதற்காக சாப்பாட்டில் விஷத்தைக் கலந்து கொண்டு வந்திருந்தான்.

கடைசியில் அந்தச் செல்வம் கேட்பாரற்று விழுந்து கிடந்தது. அதற்காகப் போட்டி போட்டவர்கள் அதை அனுபவிக்க முடியாமல் அழிந்தே போனார்கள்.

பணம் நண்பர்களைக் கூட விரோதிகளாக மாற்றி விடும் என்று அந்தப் பெரியவர் சொன்னாரே, அது எந்த அளவுக்கு உண்மையாயிற்று பார்த்தீர்களா?

வாழ்க்கைக்குப் பணம் அவசியம்தான், இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும் அதை முறையாகச் சம்பாதிக்க வேண்டும்; முறையாக பயன்படுத்த வேண்டும். இதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ★

## மூளைக்கு வேலை

### III ஆம் பக்க வினாக்களுக்கான விடைகள்

1. 25
2. 59
3.



4. வரல். (ஏனைய சொற்கள் நிறத்தின் பெயர்களில் இருந்து முதல் எழுத்தை நீக்கியதால் வந்தவை.)

5.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 8 | 7 | 3 | 2 | 1 |
| 6 | 5 | 2 | 8 | 2 | 7 |
| 7 | 1 | 8 | 5 | 6 | 3 |
| 4 | 4 | 5 | 6 | 9 | 2 |
| 3 | 9 | 4 | 1 | 5 | 8 |
| 1 | 3 | 4 | 7 | 6 | 9 |

## அரசாங்கத்தின்..

(II ஆம் பக்கத் தொடர்)

சர்கள், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் வெற்றிடங்களுக்கும் — நியமிக்கப்படுவதே முறை.

சில சமயங்களில் சொலிஸிட்டர் ஜெனரல் போன்ற உயர் சட்டத்துறைப் பதவிகளில் இருக்கும் — சட்ட அனுபவம் மிக்க — ஜனாதிபதி சட்டத்தரணிகள் போன்றோர் — மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கோ, உயர் நீதிமன்றத்துக்கோ நியமிக்கப்படுவதும் உண்டு.

இந்த நடைமுறையைத் தான் முன்னைய ஜனாதிபதிகள் கடைப்பிடித்து வந்தனர்.

ஆனால் இந்த வழக்கத்தை மாற்றி —

இலங்கையின் கீழ் நீதிமன்றங்களான மாஜிஸ்திரேட் நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம், குடும்ப நீதிமன்றம், தொழில் நீதிமன்றம் போன்றவற்றிலோ அல்லது மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் போன்றவற்றிலோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம் போன்றவற்றிலோ எப்போதும் ஆஜராகி வழக்காடாத — நாற்பது வயதுக்குட்பட்ட — ஷிராணி பண்டாரநாயக்கா என்ற — சட்ட கலாநிதி பட்டம் பெற்ற — பெண் ஒருவரை உயர் நீதிமன்ற நீதியரசராக சில காலத்துக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா நியமித்தார்.

அப்போது இது குறித்து பலத்த சட்ட வாதப் பிரதிவாதங்கள் எழுந்தனவாயினும், நீதியரசரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உரியது என்ற அடிப்படையில் ஜனாதிபதியின் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதே பாணியை இப்போதும் கடைப்பிடித்து —

அரசுக்குச் சாதகமான சிலரை உயர் நீதிமன்றத்துக்கு நியமிக்க ஆலோசிக்கப்படுகின்றதாம்.

நீதியரசர் பி. இராமநாதன் ஒகஸ்ட் 30 இல் ஓய்வு பெற்றதால் உயர் நீதிமன்றத்தில் ஓரிடம் அண்மையில் காலியானது. வழமையான நடைமுறைகளின்படி அந்த இடத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசரான டி.பி.எஸ். குணசேகராவே நியமிக்கப்பட வேண்டும்.

ஆனால் அவரை விடுத்து தமக்கு சாதகமான ஆளைத் தேடி அரசுத்தரப்பு வேட்டை நடத்துகின்றதாம்.

சட்டத்தரணி எஸ். மகேந்திரனை இந்த விடயம் தொடர்பாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் அணுகியதாகவும் —

ஆனால் மகேந்திரன் மறுத்து விட்டதாகவும் ஒரு தகவல்.

இவ்வாறு நீதித்துறையில் அரசு தலையிடுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள பின்னணியில்தான் —

ஸ்ரீலங்காவின் நீதித்துறை சுதந்திரம் குறித்து ஆராய்வதற்காக — சர்வதேச நீதித்துறை ஆணைக்குழுவின் வேண்டுதலின் பேரில் — மூவர் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று கடந்த வாரம் கொழும்பு வந்து சேர்ந்தது.

குட்ஹார்ட் பிரபு, இந்தியாவின் முன்னாள் தலைமை நீதியரசர் பி. என். பகவதி, தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பின்னிஸ் மொஜபொல ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனனர்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் நெருக்கமானவரான நீலன் திருச்செல்வம் எம். பியும், பி. என். பகவதியும் மிகவும் உற்ற நண்பர்கள் என்றும் —

கொழும்பு வந்த குழுவில் பகவதி இடம் பெற்றிருப்பது அரசுக்கு தெம்பு தருவதாக உள்ளது என்றும் —

சில வட்டாரங்கள் தெரிவித்தன. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஸ்கொட்லாந்து, வேல்ஸ் வாக்களிப்புகள்
# ஐக்கிய ராஜ்யம் பிளவுபட வழி வகுக்குமா?

United Kingdom என அழைக்கப்படும் ஐக்கிய ராஜ்யத்தைச் சேர்ந்த ஸ்கொட்லாந்திலும் வேல்ஸிலும் தனித்தனி நாடாளுமன்றங்கள் அமைப்பதற்கு மக்களின் ஆதரவு கிடைத்திருப்பது ரொனி பிளயரின் தொழிற்கட்சி அரசுக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்று கருதப்படுகிறது.

கடந்த மே மாதம் நடைபெற்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலின் போது அதிகாரப் பரவலாக்கல் குறித்து ரொனி பிளயர் வாக்குறுதி அளித்திருந்தார்.

வெஸ்ட்மினிஸ்டரில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் ஏனைய பகுதிகளுக்கும் பரவலாக்கப்படும் என்றும்—

ஸ்கொட்லாந்திலும் வேல்ஸிலும் தனி நாடாளுமன்றங்கள் அமைக்கப்பட்டு ஆட்சி உரிமை அந்த நாடுகளின் மக்களுக்கு வழங்கப்படும் என்றும் ரொனி பிளயர் தெரிவித்திருந்தார்.

அதற்கிணங்க இம்மாதம் 11 ஆம் திகதி ஸ்கொட்லாந்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற்றது. ஸ்கொட்லாந்துக்கு தனி நாடாளுமன்றம் வேண்டுமா? அந்த நாடாளுமன்றத்துக்கு வரி விதிக்கும் அதிகாரம் தேவையா? என்ற இரு கேள்விகளுக்கு ஸ்கொட்லாந்து மக்கள் வாக்களிக்கக் கோரப்பட்டனர்.

வரி விதிக்கும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம் தேவை என்பதற்கு ஆதரவாகவே கூடுதலான வாக்குகள் கிடைத்தன.

அதே போன்று இம்மாதம் 18 ஆம் திகதி வேல்ஸிலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இங்கிலாந்துடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள வேல்ஸுக்கு தனி நாடாளுமன்றம் வேண்டுமா என்ற கேள்விக்கு மட்டுமே வேல்ஸ் மக்கள் பதில் அளிக்கக் கோரப்பட்டனர். தனி நாடாளுமன்றம் தேவை என்றுபெரும்பான்மைவேல்ஸ் மக்கள் வாக்களித்தனர். ஆனால் 6 ஆயிரத்து 721 பெரும்பான்மை மட்டுமே கிடைத்தது.

இதன்படி 2000 ஆண்டளவில் ஸ்கொட்லாந்திலும், வேல்ஸிலும் தனித் தனி நாடாளுமன்றங்கள் அமைக்கப்படும்.

## முக்கிய பொறுப்புகள் இங்கிலாந்திடம்

ஸ்கொட்லாந்து நாடாளுமன்றம் 129 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். சுகாதாரம், கல்வி, உள்ளுராட்சி நிர்வாகம், ஸ்கொட்டிஷ் சட்ட நடைமுறைகள், சட்டம் — ஒழுங்கு ஆகியவற்றில் ஸ்கொட்லாந்து நாடாளுமன்றம் அதிகாரங்களைக் கொண்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுடன் வரிவிதிக்கும் அதிகாரங்களும் இதற்கு இருக்கும். இங்கிலாந்து அரசு விதிக்கும் வரிகளை 3 சத வீதம் உயர்த்த அல்லது 3 சத வீதம்குறைக்க இந்த நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் இருக்கும்.

வேல்ஸ் நாடாளுமன்றத்துக்கு வரி விதிக்கும் அதிகாரம் கிடையாது. 'செனேட்' என்றே இது அழைக்கப்பட இருக்கிறது. ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்துடன் ஒப்பிடும் போது இதன் அதிகாரங்கள் குறைவு. பாடசாலைகள் மற்றும் விளையாட்டுத்துறை, உள்ளூராட்சி நிர்வாகம் போன்ற அதிகாரங்களையே இது கொண்டிருக்கும். வேல்ஸ் நாடாளுமன்றத்துக்கு 60 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஸ்கொட்லாந்தினதும் வேல்ஸினதும் பாதுகாப்பு, வெளிவிவகாரம், வரி விதிப்பு, சமூகப்பாதுகாப்பு உட்பட முக்கிய பொறுப்புகள் தொடர்ந்து வெஸ்ட்மினிஸ்டரில் உள்ள இங்கிலாந்து அரசிடமே இருக்கும்.

1979 ஆம் ஆண்டு தொழிற் கட்சி ஆட்சியின் போதும் இதேவிதமான சர்வஜன வாக்கெடுப்பு ஸ்கொட்லாந்திலும் வேல்ஸிலும் நடைபெற்றன.

தனி நாடாளுமன்றம் தேவை என்பதற்கு ஆதரவாக அப்பொழுது ஸ்கொட்லாந்தில் 33 சதவீதமானோர் வாக்களித்தனர். எதிர்த்து 31 சதவீதமானோர் வாக்களித்தனர். 40 சதவீத ஆதரவு தேவை என்று கூறி அப்போதைய தொழிற் கட்சி அரசாங்கம் வாக்களிப்பு முடிவைத் தட்டிக் கழித்து விட்டது.

வேல்ஸில் நடைபெற்ற வாக்களிப்பில் நான்கில் ஒரு பங்கினர் மட்டுமே தனி நாடாளுமன்றத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.




## ஐக்கிய ராஜ்யம்

ஸ்கொட்லாந்து, வேல்ஸ், இங்கிலாந்து, வட அயர்லாந்து ஆகியவற்றைக் கொண்டது ஐக்கிய ராஜ்யம் ஆகும்.

இவற்றில் கத்தோலிக்கர் — புரட்டஸ்தாந்து மதப் பிரிவினருக்கிடையே ஏற்பட்ட குரோதம் காரணமாக வட அயர்லாந்து தொடர்ந்து எரிமலையாக இருந்து வருகிறது.

இப்படியான நிலைமைகள் படிப்படியாக ஸ்கொட்லாந்திலும் வேல்ஸிலும் உருவாகலாம் என்றும்—

ஸ்கொட்லாந்திலும் வேல்ஸிலும் தனி நாட்டுக் கோரிக்கை எழுந்து ஐக்கிய ராஜ்யம் உடைந்து போகலாம் என்றும்—ரொனிபிளயரின் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துக்கு எதிரானவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இவர்களின் கருத்துக்கு வலுவூட்டுவது போன்று, தனி நாடாளுமன்றம் அமைப்பது சுதந்திர ஸ்கொட்லாந்துக்கு முதல் படி என்று ஸ்கொட்லாந்து தேசியவாதக் கட்சி அறிவித்துள்ளது. வேல்ஸில் உள்ள வேல்ஸ் மொழிபேசும் தேசியவாதிகளும் இதேகருத்தையே கொண்டிருக்கின்றனர். இம்மாதம் ஸ்கொட்லாந்திலும் வேல்ஸிலும் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்புக்களில் தனி நாடாளுமன்றத்துக்கு ஆதரவாகவே தேசியவாதிகள் வாக்களித்திருந்தனர்.

ஐக்கிய ராஜ்யத்தின் ஓர் அங்கமாக இருந்த ஐரிஷ் குடியரசுக்கு 1921 ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்கிய பின்னர் அரசமைப்பு ரீதியாக இங்கிலாந்து நாடாளுமன்றம் எடுத்த பெரிய நடவடிக்கை ஸ்கொட்லாந்துக்கும் வேல்ஸுக்கும் நாடாளுமன்றங்கள் அமைக்கும் முயற்சி ஆகும்.

புதிய பிரிட்டன் ஒன்றை உருவாக்கும் தமது பணி இந்த நாடாளுமன்றங்களை அமைப்பது மூலம் பூர்த்தி அடைந்து விடாது என்றும்— பிரிட்டிஷ் அரச பரம்பரை மற்றும் பிரபுக்கள் சபை தொடர்பான சீர்திருத்தங்களை மேற் கொள்ளப் போவதாகவும் ரொனி பிளயர் தெரிவித்துள்ளார்.

கொன்சர்வேட்டிவ் கட்சியின் 18 வருட கால ஆட்சியில் —குறிப்பாக மார்கிரெட் தாட்சரின் ஆட்சிக்காலத்தில்- தாம் புறக்கணிக்கப்பட்டதாக, ஸ்கொட்லாந்து வேல்ஸ் மக்கள் கருதுகின்றனர். தனிநாடாளுமன்றத்துக்கு ஆதரவாக இவர்கள் வாக்களிக்க இதுவும் ஒரு தூண்டுகோலாக அமைந்து விட்டது எனலாம்.

## ஸ்கொட்லாந்து

ஐக்கிய ராஜ்யத்தில் மூன்றில் ஒருபகுதியைக் கொண்டது ஸ்கொட்லாந்து. இதன் தலைநகர் எடின்பேர்க் (Edinburgh). ஸ்கொட்லாந்து மக்களின் புதிய நாடாளுமன்றம் அமையப் போவதும் எடின்பேர்க்கில்தான். புதிய நாடாளுமன்றம் அமைப்பது மூலம் 300 வருடகால பிரிட்டிஷ் நேரடி ஆட்சி முடிவுக்கு வர இருக்கிறது.

ஸ்கொட்லாந்து ராஜ்யம் 1018 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இதன் மன்னர்கள் ஐரோப்பிய நாடுகளையே ஆட்டிப்படைத்த காலம் ஒன்று இருந்தது.

1229 ஆம் ஆண்டிலும் 1314 ஆம் ஆண்டிலும் ஸ்கொட்லாந்துப் படைகள் இங்கிலாந்துப் படைகளையே தோற்கடித்திருந்தன. இம்மாதம் 11 ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்புக்கு தெரிவு செய்யப்பட்ட நாள் கூட 700 ஆண்டுகளுக்கு முன் ஸ்கொட்லாந்து படைகள் இங்கிலாந்துப் படைகளைத் தோற்கடித்த நாள் தான்.

ஆனால் 1603 ஆம் ஆண்டு இங்கிலாந்து — ஸ்கொட்லாந்து வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

அப்பொழுது ஸ்கொட்லாந்து மன்னராக இருந்த ஆறாவது ஜேம்ஸ் மன்னர் முதலாவது ஜேம்ஸ் என்ற பெயரில் இங்கிலாந்து மன்னராக முடி சூடினார்.



ரொனி பிளயர்

இதுவே ஸ்கொட்லாந்து — இங்கிலாந்து இணைப்புக்கு வழி கோலியது. 1707 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் ஸ்கொட்லாந்தும் முழு உறுப்புரிமை பெற்றது.

ஸ்கொட்லாந்து மக்கள் கடந்த 300 வருட காலமாக இங்கிலாந்தின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்தாலும் ஸ்கொட்லாந்து மக்களின் தனித்துவம் ஒரு போதும் பாதிக்கப்படவில்லை.

புதியதாகஅமையப்போகும் நாடாளுமன்றத்தில் மொத்தமாக 129 உறுப்பினர்கள் இருப்பர்.

தற்பொழுது வெஸ்ட்மினிஸ்டரில் உள்ள இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த 72 எம். பிக்கள் உள்ளனர். கடந்த மே மாதம் நடைபெற்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் இங்கு வெற்றி பெற்றோரில் 6 எம். பிக்கள் தவிர ஏனையோர் தொழிற் கட்சியினரே. ஸ்கொட்லாந்துக்கு முழுச் சுதந்திரம் வேண்டும் என்று கோரி வரும் ஸ்கொட்டிஷ் தேசிய வாதக் கட்சியே இந்த 6 இடங்களையும் பெற்றது. கொன்சர்வேட்டிவ் கட்சி ஒரு தொகுதியிலாவது வெற்றி பெறவில்லை.

## வேல்ஸ்

சுமார் 600 வருட காலமாக இங்கிலாந்தின் கீழ் வேல்ஸ் இருந்து வருகிறது.

வேல்ஸின் தலைநகர் கார்டிவ் (CARDIFF). வட வேல்ஸில் உள்ள மலைப்பிரதேசம் வேல்ஸ் தேசிய வாதிகளின் இருதயமாக கருதப்படுகிறது.

வேல்ஸ் மொழி பேசும் மக்களில் 5 லட்சம் பேர் இங்கு தான் இருக்கிறார்கள். இங்கிலாந்தில் இருந்து காலத்துக்குக் காலம் ஏற்பட்ட படை எடுப்புக்களின் போது பாதுகாப்புக்காக மலைப்பிரதேசத்துக்கு தப்பி ஓடியவர்கள் தான் தேசியவாதிகள் என்ற முத்திரை பதிக்கப்பட்டு இன்றும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

**உலக உலா**

என்.பி.சீலன்

வேல்ஸுக்கு தனி நாடாளுமன்றம் அல்ல; முழுசுதந்திரம் தேவை என்று இவர்கள் கோரி வருகின்றனர்.

வேல்ஸின் தென் பகுதியில் உள்ளோர் வேல்ஸ் மொழி பேசாதவர்கள்.

பூரண சுதந்திரத்துக்கு அவர்கள் ஆதரவு இல்லை. வட வேல்ஸில் உள்ள தேசியவாதிகளிடம் ஆட்சி அதிகாரம் சென்று விடும் என்று இவர்கள் அஞ்சுகிறார்கள்.

13 ஆம் நூற்றாண்டில்இங்கிலாந்து மன்னர் முதலாவது எட்வேர்ட் வட வேல்ஸில் கட்டிய கோட்டை வேல்ஸ் மீதான இங்கிலாந்தின் ஆதிக்கத்தை இன்றும் நினைவுபடுத்தி வருகிறது. ஸ்கொட்லாந்தைப் போன்று வேல்ஸிலும் வேல்ஸுக்குதனி நாடு கோரும் வேல்ஸ் தேசியக் கட்சி இருந்து வருகிறது.

ஆனால் கடந்த மே மாதம் நடைபெற்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் வென்ற மொத்தம் 36 உறுப்பினர்களில் 6 பேர் மட்டும் வேல்ஸ் தேசிய கட்சியைச் சேர்ந்தவர்கள்.

## வட அயர்லாந்து

ஐக்கிய ராஜ்யத்தில் உள்ள மற்றும் ஒரு நாடான ஐரிஷ் குடியாசு 1921 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற போது 6 பிராந்தியங்களைக் கொண்ட அதன் வட பகுதி வட அயர்லாந்து என்ற பெயருடன் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது.

பெரும்பான்மையினரான புரட்டஸ்தாந்து மதப் பிரிவினர் தொடர்ந்து இங்கிலாந்தின் கீழ் இருக்க விருப்பம் தெரிவித்திருந்தனர்.

வட அயர்லாந்துக்கு தனி நாடாளுமன்றம் அமைந்த போது புரட்டஸ்தாந்து மதப் பிரிவினரிடம் ஆட்சி அதிகாரம் சென்றது.

கத்தோலிக்கர்கள் எதிர்க்க ஆரம்பித்தபோது நாடாளுமன்றத்தையே கூட்ட முடியாத நிலை ஏற்பட்டது.

1972 ஆம் ஆண்டு முதல் வட அயர்லாந்து பிரிட்டனின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது. தற்பொழுது ஐ. ஆர். ஏ. எனப்படும் ஐரிஷ் குடியரசு இராணுவத்துடன் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. எனினும் ஐக்கிய ராஜ்யத்தில் ஏற்பட்ட முதலாவது வெடிப்பு வட அயர்லாந்துதான். வடஅயர்லாந்தைச் சேர்ந்த 12 எம். பிக்கள் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

## இங்கிலாந்து

இங்கிலாந்தின் நாடாளுமன்றம் பிரபுக்கள் சபை, கொமன் சபை என்று இரு பிரிவுகளைக் கொண்டது.

பிரபுக்கள் சபையில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உறுப்பினர்களாக இருக்கின்றனர், இவர்களில் 763 பேர் வம்சாவளியினர். 314 பேர் ஆயுள்கால உறுப்பினர்கள். ஆர்ச் பிஷப்புகள், பிஷப்புகள், நீதியரசர்கள் ஆகியோரும் பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

கொமன்சபை 650 உறுப்பினர்களைக் கொண்டது. மக்களால் இவர்கள் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகிறார்கள். இந்த 650 பேரில் இங்கிலாந்தில் இருந்து 519 பேரும் ஸ்கொட்லாந்தில் இருந்து 71 பேரும் வேல்ஸில் இருந்து 36 பேரும் வட அயர்லாந்தில் இருந்து 12 பேரும் அடங்குவர். சகல ஆட்சி, அதிகாரங்களும் இங்கிலாந்தில் இருந்தே பிறக்கின்றன.

## தோல்வி காணுமா?

வட அயர்லாந்தில் அதிகாரப் பரவலாக்கல் தோல்வி கண்டது போல் ஸ்கொட்லாந்திலும், வேல்ஸிலும் தோல்வி காணுமானால் ஐக்கிய ராஜ்யம் சிதறுண்டு போவதற்கு ரொனி பிளயரின் அதிகாரப்பரவலாக்கல் வழி கோலலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org